நன்றி - நூலகத்திட்டம்

සරිනිහර්
SARINIHAR
# சரிநிகர்
சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி

**நாய்அல்ல அது; நான்!**

காலைப்பிடித்ததனால் கைகூப்பி வணங்கியதால்
வாலைக்குழைத்துன்னை வாழ்த்தியதால் - காலையிலே
வாக்கென்று கேட்டு வந்தவரை நாயென்று
போக்கியதேன்? போச்சோவுன் புத்தி?

ஈழமோகம்

இதழ் 39 ஜனவரி 28 -பெப்10 1994 விலை7/=

வட-கிழக்கு:

# யுத்தநிறுத்தமா?
# இன்னொரு சந்ததியினதும் அழிவா?

எது என்று தீர்மானியுங்கள் என்கிறார் யாழ் அரசாங்க அதிபர்

வடக்குக் கிழக்கில் கடந்த மூன்றாண்டுகளுக்கு மேலாக நடந்து கொண்டிருக்கும் யுத்தம் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்; அதன் அழிவுகளிலிருந்து மக்கள் பாதுகாக்கப்பட வேண்டும். அல்லது இன்றைய சந்ததியினர் மட்டுமல்லாமல், அடுத்ததாக வரப்போகின்ற சந்ததியினரும் அழிந்து போவதை தடுக்க முடியாமல் போய்விடும். அச்சமும் பீதியும் கலந்த உணர்வுடன், எந்தவித நம்பிக்கைகளும் அற்றவர்களாய் பட்டினியும் பிணியுமாக அங்கு ஒரு சமுதாயம் நலன்புரி நிலையக் குடிசைகளுக்குள் வாழ்ந்து கொண்டிருக்கின்றது. தொடர்ச்சியான விமானக் குண்டு வீச்சுக்களாலும், பெருமழையாலும் வார்த்தைகளுக்கு அப்பாற்பட்ட துயரங்களுடன் வாழ்ந்து கொண்டிருக்கும் அந்த மக்கள் பற்றி இங்குள்ள பத்திரிகைகள் கூட அக்கறை காட்டுவதாகத் தெரியவில்லை.''

இவ்வாறு தெரிவித்தார் யாழ்மாவட்ட அரசாங்க அதிபர் திரு மாணிக்க வாசகர் அவர்கள்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, ஜனவரி 24ம் திகதிய ஐலன்ட் பத்திரிகை வடக்குக்கு உணவு மற்றும் எரி பொருட்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும், அங்கு போதியளவு உணவுப் பொருட்கள் இருப்பில் இருப்பதாகவும் செய்தி வெளியிட்டிருக்கிறது. ஆனால், அது குறிப்பிடும் எந்தப் பொருட்களும் இன்னமும் கப்பல்களுக்குள் ஏற்றப்படக் கூட இல்லை என்பதே உண்மை. இவ்வாறு தான் வடக்குக்கான உணவு விநியோகம் பற்றி இங்குள்ள பத்திரிகைகள் பொறுப்பற்று எழுதி வருகின்றன.



உத்தியோக காரணங்களுக்காக கொழும்பு வந்திருக்கும் யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் அவர்களை சரிநிகர் சார்பில் சென்று சந்தித்த போது அவர் இவ்வாறு குறிப்பிட்டார். கொழும்பில் தங்கி நிற்கும் சொற்ப நாட்களுக்குள்ளேயே நிறைய வேலைகளைச் செய்து முடிக்க வேண்டிய அவசரமும், அப்பிரதேச மக்களின் வாழ்வு தனது கைகளில் தங்கியிருக்கின்றது என்ற பொறுப்புணர்வும் அவரை ஓய்வின்றி இயங்க வைத்துக்கொண்டிருக்கின்றதால், மிகவும் சிரமப்பட்டே எமக்கு அவரால் நேரம் ஒதுக்கித் தர முடிந்தது.

→2

## முல்லைத்தீவு மாவட்டத்திற்கு உணவு விநியோகம் நிறுத்தம்!

முல்லைத்தீவு மாவட்டத்திற்கு, சர்வதேச செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகளின் வழித்துணையோடு நடைபெற்று வந்த அத்தியாவசிய உணவு விநியோகப்பணி இடைநிறுத்தப்பட்டுள்ளதை அடுத்து அந்தப் பிரதேசத்திற்கான உணவு விநியோகப் பணியில் நெருக்கடிநிலை ஏற்பட்டுள்ளது. இதனால் முல்லைத்தீவு மாவட்டத்தில் உணவுப் பஞ்சம் ஏற்படக்கூடும் என அஞ்சப்படுகின்றது.

முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபரின் மேற்பார்வையில் வாகன அணி மூலம் (G.A's convoy) விநியோகப் பணி நடைபெறத் தொடங்கியுள்ளதாகக் கூறி சர்வதேச செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகள் இவ்வாறு தமது உணவு விநியோகப் பணியை இடைநிறுத்தியுள்ளார்கள். இது தொடர்பாக அவர்களது உத்தியோகபூர்வ அறிக்கை ஒன்றும் அண்மையில் வெளியிடப்பட்டது.

→15

## பலாலி முகாமில் தமிழ் இளைஞர்களும் தமிழ் அதிகாரியும் சுட்டுக்கொலை?

பலாலி இராணுவமுகாமில் கைது செய்து வைத்திருந்த இளைஞர்கள் சிலரையும், அங்கு தொலைத் தொடர்பு அதிகாரியாகக் கடைமையாற்றி வந்த தமிழர் ஒருவரையும் இராணுவத்தினர் முகாமுக்குள் வைத்து சுட்டுக் கொன்றிருப்பதாகத் தெரியவருகிறது.

கடந்த வருட இறுதியில் புலிகள் பூநகரி முகாம் மீது தாக்குதல் நடாத்திய அதே வேளை பலாலி இராணுவ முகாமுக்குள்ளும் ஊடுருவி தாக்குதல் நடாத்தியிருந்தது தெரிந்ததே. பலாலி முகாமின் கடற்கரைப் பக்கமாக உள்நுழைந்த புலிகள் இருட்டும் வரை இராணுவத்தினரால் கைவிடப்பட்டிருந்த காவலரண் ஒன்றுக்குள் தங்கியிருந்ததாகவும், அதற்கு அப்பால் சற்றுத் தொலைவிலிருந்த காவலரணில் இருந்த படையினர் குறித்த காவலரணில் ஆள் நடமாட்டம் இருப்பதை அவதானித்தாலும் அவர்களும் சீருடை தரித்திருந்ததால் இராணுவத்தினர் என்றே எண்ணி இருந்தனர். எனினும் குறித்த காவலரணில் இராணுவத்தினர் எவரையும் கடமையிலீடுத்தப்படவில்லையே என்ற சந்தேகம் எழவே இராணுவத்தினர் தாக்க ஆரம்பித்திருக்

→15

## உரிமையாளர்கள் குடியிருக்காத வீடுகள் விபரம் திரட்டுகிறார்கள் புலிகள்


யாழ்குடாநாட்டில், உரிமையாளர்கள் குடியிருக்காத வீடுகளின் விபரங்களைத் திரட்டும் பணியில் விடுதலைப் புலிகள் ஈடுபட்டுள்ளார்கள். சொந்த வீடுகளை உறவினருக்கோ அல்லது நண்பர்களுக்கோ, தெரிந்தவர்களுக்கோ குடியிருப்பதற்காகக் கொடுத்துவிட்டு குடும்பத்தோடு வெளிநாடுகளில் சென்று வசிப்பவர்களின் வீடுகளை ''நிர்வாகத்தின்'' உடைமையாக்குவதற்காகவே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாகக் கூறப்படுகின்றது.

இவ்வாறான வீடுகளில் வாடகைக்கோ அல்லது பாதுகாத்துப் பராமரிக்கும் நோக்குடனோ குடியிருப்பவர்கள் இதற்கென விநியோகிக்கப்படும் படிவங்களைப் பெற்று வீடுகள் தொடர்பான விபரங்களைத் தெரிவிக்குமாறு கோரப்பட்டுள்ளார்கள்.


குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் படிவங்களைப் பெற்று விபரங்களைச் சமர்ப்பிக்காதவர்கள், படிவக்கட்டணமென விதிக்கப்பட்டுள்ள தொகையின் இருமடங்கிற்கும் கூடிய பணத்தைத் தண்டமாக செலுத்த நேரிடும் எனவும் எச்சரிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு திரட்டப்படும் விபரங்களினடிப்படையில் வீட்டு உரிமையாளர்கள் இல்லாத வீடுகளில் குடியிருப்பவர்களிடமிருந்து புலிகள் வாடகையை அறவிட்டுள்ளதாகவும் தெரிய வருகிறது.

## நகலும் அசலும்




கிழக்கு மாகாண பிரிகேடியர் அனுப்பி வைத்துள்ள வாழ்த்துமடல் இது:



கிழக்கு மாகாணத்தின் இன்றைய நிலை இது என்கிறார் நமது கேலிச்சித்திரகாரர்

நன்றி - நூலகத்திட்டம்



## யுத்த நிறுத்தமா?...

எம்முடனான உரையாடலின் போத அவர் தெரிவித்த விபரங்கள் இவை.

'கடந்த நவம்பர் மாதத்தில் சென் ஜேம்ஸ் கத்தோலிக்க தேவாலயத்தின் மீதும் பிற வழிபாட்டு நிலையங்கள் மீதும் நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதல் களை கண்டிக்கும் முகமாக ஒரு மௌன எதிர்ப்பு ஊர்வலம் ஒன்று நடாத்தப்பட்டது. பெருமளவான மக்கள் கலந்து கொண்ட இந்த ஊர்வலத்தின் முடிவில் ஜனாதிபதிக்கும் ஒரு மகஜர் ஒன்றும் ஐ.சி. ஆர்.சி யினூடாக அனுப்பி வைக்கப்பட்டது. ஆனாலும் இரண்டே நாட்களின் பின்னர் திரும்பவும் அதே கத்தோலிக்க தேவாலயம் தாக்கப்பட்டது. அத் தேவாலயத்தை சுற்றியுள்ள பிரதேசங்களில் வீசப்பட்ட குண்டுவீச்சுக்களால் குழந்தைகள், ஆண்கள், பெண்கள், வயோதிபர்கள் உட்பட இருபத்தைந்து பேர்கள் ஸ்தலத்திலேயே மரணமானார்கள். எழுபது வீச்சு காரணமாக காயமடைந்துள்ளனர். இதுதவிர 12 பேர் ஷெல் தாக்குதலினால் காயமடைந்துள்ளனர்.

'தாக்குதலுக்கு, ஐ.சி.ஆர்.சியின் பாதுகாப்பு வலயமோ யாழ் வைத்திய சாலை வட்டாரமோ கூட தப்பவில்லை.' ( பார்க்க அட்டவணை -1)

கடந்த ஆண்டு இறுதிப்பகுதியில் பரவலாக நடை பெற்ற தொடர்ச்சியான குண்டு வீச்சுக்கள் காரணமாக குருநகர், கொக்குவில், சாவகச்சேரிப் பகுதிகளில் இருந்து பெருமளவு குடும்பங்கள் அகதிகளாகியுள்ளனர். அவர்கள் தமது நண்பர்கள் உறவினர்களுடன் தற்போது தங்கியுள்ளனர். பெருமளவில் அகதிகளாகிய குருநகரைச் சேர்ந்த மக்கள் நகரிலுள்ள பெரிய பாடசாலை ஒன்றில் தங்கியுள்ளனர். குண்டு வீச்சுக்கள் நிறுத்தப்படுமானால் இவர்கள் தமது வீடுகளுக்குத் திரும்பிச் செல்வார்கள்'.

இதைவிட முன்னொருபோதும் இல்லா உடனடியாக மா அனுப்பப்படுவதற்கான வேலைகள் மேற்கொள்ளப்படாவிட்டால் அங்கு பெருமளவு மக்கள் பட்டினியை எதிர் கொள்வதைத் தவிர்க்கமுடியாது.

இதைத்தவிர, விறகுக்கான தட்டுப்பாடு அங்குள்ள மக்களுக்கு இப்பொழுது உள்ள இன்னொரு பெரிய பிரச்சினையுமாகும். மழை காரணமாக இது மேலும் மோசமாகியுள்ளது. தமது நாளாந்த உணவைச் சமைக்கக்கூட முடியாமல் இருக்கிறது. இது பாணுக்கான தேவையை மேலும் அதிகரிக்கச் செய்கிறது. ஆனால் மாவின் இருப்பு குறைவாக இருப்பதால் இந்த நெருக்கடி பெரும் சுமையாகி விடுகின்றது.

தொடர்ச்சியான மழை, வெள்ளப்பெருக்கு குடும்பங்களின் இடம்பெயர்தல் என்பவற்றால் சுகாதார நிலைமைகள் பெருமளவு மோசமடைந்துள்ளன. தொற்று நோய்கள் வேகமாகப் பரவ

| திகதி | இடம் | தாக்குதலின் தன்மை | இறந்தவர் களின் எண்ணிக்கை | காயப்பட்டவர் களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 02.12.1993 | யாழ்.குருநகர் | மண்டைதீவிலிருந்து ஷெல்வீச்சு | - | 02 சிறுவர் |
| 05.12.1993 | யாழ்.குருநகர் சென்ஜேம்ஸ் ஆலயப் பகுதியில் | விமானக்குண்டுவீச்சு | 12 | 34 |
| | யாழ்.குருநகர் | விமானக்குண்டுவீச்சு | 10 | 17 |
| | யாழ்.பாஷையூர் | விமானக்குண்டுவீச்சு | 06 | 14 |
| | ஏழாலை | விமானக்குண்டுவீச்சு | - | 04 |
| 07.12.1993 | புன்னாலைக் கட்டுவன் | ஷெல்வீச்சு | - | 01 |
| 08.12.1993 | யாழ்ப்பாணத்தில் செஞ்சிலுவைச்சங்க பாதுகாப்பு வலயத்துள் | ஷெல்வீச்சு | - | 01 |
| | கோண்டாவில் | ஷெல்வீச்சு | - | 02 |
| | வல்வெட்டித்துறை | ஷெல்வீச்சு | - | 02 |
| 09.12.1993 | கரணவாய் | ஷெல்வீச்சு | 01 | 04 |
| | யாழ்.செஞ்சிலுவைச்சங்க வைத்தியசாலைப் பாதுகாப்பு வலயத்துள் | ஷெல்வீச்சு | - | 01 |
| 15.12.1993 | மல்லாகம் | ஷெல்வீச்சு | - | 01 |
| 23.12.1993 | யாழ்.கடலேரியில் | கடற்படையினர் சுட்டதில் | 01 | - |
| 25.12.1993 | யாழ்ப்பாணத்தில் செஞ்சிலுவைச் சங்க பாதுகாப்பு வலயத்துள் | ஷெல்வீச்சு | 01 | - |
| 30.12.1993 | சாவகச்சேரி | விமானக் குண்டுவீச்சு | 10 | 57 |
| | | மொத்தம் | 41 | 140 |

பேர் வரை மிகவும் கடுமையான காயங்களுக்கு உள்ளாகினார்கள். இவர்களில் 5 பேர் பின்னர் இறந்து போனார்கள். காயமடைந்தவர்களில் பலருக்கு கைகளோ கால்களோ இல்லாமல் போயுள்ளன.

அமைதியான எதிர்ப்பு ஊர்வலம் நடத்திய அப்பாவி மக்களை பழிவாங்குவதற்காகவே இத்தாக்குதல் நடாத்தப்பட்டிருப்பதாக அவர்கள் கருதுகிறார்கள். யாழ் மாவட்டம் பூராவுமே இத்தகைய எந்தக் காரணமுமற்ற குண்டு வீச்சுக்கள் நடக்கின்றன.

'விமானக் குண்டு வீச்சுக்கள் குறைய ஷெல் தாக்குதல்கள் பெருமளவில் அதிகரித்துள்ளன. குறிப்பாக இரவு நேரங்களில் வரும் ஷெல்கள் விமானக் குண்டுகளை விட ஆபத்தானவை. சற்றும் எதிர்பார்க்க முடியாதவை. சில நாட்களுக்கு முன் 3 பேர் மரணமடைந்ததுடன் 9 பேர் காயமடைந்துள்ளார்கள் - இச் ஷெல் அடி காரணமாக.

டிசம்பர் 6ம் திகதிக்குப் பின் சற்று ஓய்ந்திருந்த விமானத் தாக்குதல் திரும்பவும் டிசம்பர் 30ம் திகதி மோசமாக நடாத்தப்பட்டது. சாவகச்சேரியில் நடந்த தாக்குதலில் 7 பேர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டதுடன் மேலும் 60 பேர் வரை காயமடைந்தனர்.

ஒரு கத்தோலிக்க தேவாலயம், ட்றிபேர்க் கல்லூரிக்கு சொந்தமான கட்டிடங்கள், கடைகள், வீடுகள் என அன்று பாரிய சேதங்கள் ஏற்பட்டன.

டிசம்பர் மாதத்தில் மட்டும் விமானத் தாக்குதல் காரணமாக 38 பேரும், ஷெல்லடி காரணமாக 3 பேரும் கொல்லப்பட்டுள்ளனர். 126 பேர் குண்டு தவாறு இம்முறை பெய்த மழைகாரணமாக கிட்டத்தட்ட 58000 குடும்பங்கள் வீடுவாசல்களைவிட்டு வெளியேறியுள்ளனர். அவர்களைப் பராமரித்த தற்காலிக குடிசைகளில் பல பெருமளவு சேதத்துக்குள்ளாகியுள்ளதால் தற்போது அவை கைவிடப்பட்டுள்ளன. (இவர்களுக்கு உலர் உணவு விநியோக முயற்சிகள் நடக்கின்றன.) சேதமடைந்த இந்நலன்புரி முகாம்களில் தங்கியிருந்த பல அகதிகள் வேறு இடங்களுக்கு மாற்றப்பட்டுள்ளனர். பனம் சலாகைகளாலும் கிடுகுகளாலும் கட்டப்பட்ட இந்த 15X10 அடி விஸ்தீரணமுள்ள குடிசைகளினால் இம் மழையைத் தாக்குப்பிடிக்க முடியவில்லை. மொத்தம் 198 நலன்புரி நிலையங்களில் 30,068 குடும்பங்கள் தற்போது இருக்கின்றன. இதைத்தவிர 50,454 குடும்பங்கள் இந்த நலன்புரி முகாம்களுக்கு வெளியே வாழ்கின்றன. மொத்தமாக 266,613 பேரைக் கொண்ட 80,522 குடும்பங்கள் யாழ் மாவட்டத்தில் மட்டும் இடம்பெயர்ந்து வாழ்கின்றன.

உணவுப் பொருளென, டிசம்பர் மாதத்தில் கிடைத்தது 1203 மெற்றிக் தொன் மா மட்டுமே. இவை நவம்பரில் பருத்தித் துறைக்கு வந்த 'மோர்க்ஸ் வட்டுவ' என்ற கப்பலில் இருந்து இறக்கப்பட்டதன் மீதிதான். இந்த மாவை வைத்துக் கொண்டு உணவுத் தட்டுப்பாடு இல்லாமல் உணவுப் பொருட்களை விநியோகம் செய்வது என்பது கொஞ்சமும் சாத்தியமற்ற ஒன்றாக உள்ளது. மாவுக்கான தட்டுப்பாடு மிகவும் பெருமளவு நெருக்கடியை தோற்றுவித்துள்ளது.

ஆரம்பித்துள்ளன. கொலரா, சீதபேதி, டயரியா, தைபோயிட், கல்லீரல் அழற்சி, மலேரியா என்று பல நோய்கள் பரவுவதாக்த் தகவல்கள் தெரிவிக்கின்றன. வைத்திய சாலைகள் தமது சக்திக்கு மேற்பட்டளவு நோயாளிகளை பராமரிக்க வேண்டி உள்ளது.

நலன்புரி நிலையங்களில் உள்ள நிலைமையோ இதைவிட மோசமானது. அங்குள்ளவர்களை பராமரிக்க தேவையான நிதியோ மருத்துவ வசதிகளோ இல்லாததால் , இவற்றுக்கு பொறுப்பான அரச, அரச சார்பற்ற அமைப்புகள் பெரும் நெருக்கடிக்கு உள்ளாகின. வைத்தியசாலைகட்கு ஒதுக்கப்படுகிற எரிபொருட்களின் அளவு போதாமையாக உள்ளது.

பாதைகளின் சீர் கெட்ட நிலைமையும் எந்த விதமான திருத்தங்களும் செய்யாதிருப்பதும் போக்குவரத்தை மிகவும் மோசமாக்கியுள்ளன. வாகனங்கள் விரைவில் பழுதடைகின்றன. அவற்றை இம்மாவட்டத்தில் பெற்றுக் கொள்வதும் முடியாது. கப்பலிலிருந்து இறக்கப்படும் பொருட்களை களஞ்சிய சாலைக்கு எடுத்துச் செல்வதே மிகவும் கடினமாக இருக்கிறது.

உண்மையில் அங்குள்ள நிலைமை பற்றிச் சொல்வதானால் அவர்களின் வாழ்க்கைத் தரமானது நாளுக்கு நாள் மோசமாகி வருகிறது. உடல்ரீதியாகவும் உளரீதியாகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டு வருகின்றனர். பயம், பீதி என்பவற்றின் காரணமாக மன நோய்க்குள்ளாகுபவர்களின் தொகை மிகவும் அதிகரித்து வருகின்றது. யுத்த சூழல் ஏற்படுத்தும் நெருக்கடியால் ஒரு சந்ததி எமது கண்முன்னாலேயே எப்படி ஒரு நோயுற்ற சந்ததியாக சிதைந்து கொண்டு போகிறது என்பதை நான் கண்டு கொண்டே இருக்கிறேன். என்னுடன் வந்து அலுவலகத்தில் பேசும் பலரின் முகங்களில் இதை நான் அவதானிக்கிறேன்.

அடுத்த சந்ததியும் கூட ஒரு நோயுள்ள சந்ததியாகி விடக்கூடாதே என்று விரும்பும் எவரும் இந்த யுத்தத்தை நிறுத்த வேண்டும் என்றே கூறுவர்.

ஒரு அரசாங்க அதிபர் என்ற முறையில் அவர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை நான் செய்ய வேண்டும் என்று எதிர் பார்க்கும் அந்த முகங்களில் சிரிப்பைக் காண எனக்கு தெரிகிற ஒரே வழி யுத்தம் நிறுத்தப்பட வேண்டும் என்பது தான்.

# புலிகளின் இன்னொரு இனச் சுத்திகரிப்பு: அடுத்த இலக்கு இந்திய வம்சாவழி மக்களா?

வடக்கிலிருந்து சுமார் 15ஆயிரம் முஸ்லீம்கள் குடும்பங்களை வெளியேற்றியது போல, கிளிநொச்சிப் பகுதியிலிருந்து, அங்கு வசித்து வரும் இந்திய வம்சாவழி தமிழரை வெளியேற்றுவதற்குப் புலிகள் நடவடிக்கை எடுத்து வருகின்றார்களா என்ற பீதியும் சந்தேகமும் அந்த மக்கள் மத்தியில் இப்போது தோன்றியுள்ளது. சில மாதங்களுக்கு முன்னர் கிளிநொச்சி பகுதிவாழ் இந்தியத் தமிழர்களது விபரக் கணக்கெடுப்பொன்றைப் புலிகள் மேற்கொண்டார்கள். இதனைத் தொடர்ந்து, அவர்களை அங்கிருந்து வெளியேற்றுவதற்காகவே இந்த விசேட கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டதாக கதைகள் உலாவின. கதைகளில் உண்மையில்லை என்று புலிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்ட போதிலும் இந்த வதந்தியைக் கிளப்பியது யார் என்ற கேள்விக்குரிய பதில் எவருக்கும் கிடைத்ததாகத் தெரியவில்லை.

இந்த வதந்திகளையடுத்து, தமது கால்நடைகள் மற்றும் சொத்துக்களை விற்றுப் பணமாக்கும் முயற்சியில் பலரும் ஈடுபட்டுள்ளதாகத் தெரிய வந்துள்ளது. எந்த வேளையிலும் இவர்கள் முஸ்லீம்கள் வெளியேற்றப்பட்டது போல கிளிநொச்சியிலிருந்து புலிகளால் வெளியேற்றப்படலாம் என்ற எதிர்பார்ப்பு பரவலாகக் காணப்படுகின்றது.

பூர்வீகமாகவும், 25,30 வருடமாகவும் கிளிநொச்சியைத் தமது சொந்த இடமாகக் கருதி அப்பிரதேச பூர்வீகக் குடிகளுடன் இரண்டறக் கலந்து வாழ்க்கை நடத்தி வரும் இந்திய வம்சாவழி மக்களுக்கு புலிகளின் இந்த திடீர் நடவடிக்கை பேரிடியாக அமைந்துள்ளது.

அண்மையில் வடபகுதியில் இடம் பெற்ற தொடர்ச்சியான பல இலக்குகளை அண்மித்த குண்டுவீச்சுகளுக்கு காரணமாக இருந்த இராணுவத்தினருக்கு தகவல்கள் தெரிவித்துக் காட்டிக் கொடுத்ததாக புலிகளால் கண்டுபிடிக்கப்பட்டவர்களில் இந்திய வம்சாவழியினரின் தொகை கூடுதலாக இருந்ததாகவும் அதனால் சீற்றமடைந்த புலிகள் அந்த மக்கள் அனைவரையுமே கிளிநொச்சியிலிருந்து வெளியேற்றி விடத் தீர்மானித்துள்ளதாகவும் ஒரு தகவல் வெளியாகியுள்ளது.

இந்த நாட்டின் சிறுபான்மையினங்களுள் மிக முக்கியமானதோர் அம்சமாக விளங்கும் இந்திய வம்சாவழியினரை கிளிநொச்சியிலிருந்து வெளியேற்றுவதற்கு புலிகள் மேற்கொள்ளும் இந்த நடவடிக்கை ஈழப் போராட்ட வரலாற்றில் புலிகளுக்கு மிகப் பயங்கரமானதொரு வீழ்ச்சியையும், பின்னடைவையுமே விளைவிக்கும் எனத் துணிந்து கூறலாம்.

# கிளிநொச்சிக்கும் புலிகளின் நீதிமன்றம் விஸ்தரிப்பு!

சாவகச்சேரி உட்பட யாழ்குடாநாட்டின் மூன்று வெவ்வேறு இடங்களில் இயங்கிவரும் நீதிமன்றங்களைப் போன்று, கிளிநொச்சியிலும் நீதிமன்றம் ஒன்றை அண்மையில் புலிகளின் காவல் துறையினர் வைபவரீதியாகத் திறந்துவைத்துள்ளனர்.

ஏலவே, கிளிநொச்சி, முல்லைத்தீவு, புளியங்குளம் ஆகிய இடங்களில் (வன்னிப் பிரதேசத்தில்) இயங்கி வரும் புலிகளின் காவல்துறையினர் நீதிமன்ற நடவடிக்கைகள் தேவைப்படும் விவகாரங்களை இந்த புதிய நீதிமன்றத்தில் வழக்குகளாகப் பதிவு செய்து வருகின்றனர்.

காவல்நிலைய மட்டத்தில் தீர்வு காண முடியாத குடும்பப் பிணக்குகள், மற்றும் குற்றவியல் சம்பந்தமான வழக்குகள் இந்த நீதிமன்றங்களில் விசாரிக்கப்பட்டு தீர்ப்புகள் வழங்கப்படுகின்றன.

புலிகளின் விசேட சட்டக்கோவை விதிகளுக்கமைய செயற்படக்கூடிய நீதிபதிகளும் விசேட பயிற்சியின் பின் அதிகாரம் வாய்ந்த நீதிபதிகளாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

புலிகளது நீதிமன்றங்களில் வழக்காடுவதற்கென இருநூறுக்கும் மேற்பட்ட "நியாயவாதிகளுக்கு" சட்டத்துறையில் பயிற்சியும் விசேடக்கல்வியும் அளிக்கப்பட்டுள்ளது.

இந்த நீதிபதிகளும், நியாயவாதிகளும் தலைவர் பிரபாகரனின் முன்னால் சத்தியப் பிரமாணம் செய்த பின் தத்தமது கடமைகளில் ஈடுபட்டுவருகின்றார்கள்.

இலங்கை அரசின் சட்டவிதிகளுக்கு அமைய வழக்கறிஞர்களாக முன்னர் நீதிமன்றங்களில் பணியாற்றியவர்கள் புலிகளின் சட்ட நியதிகளுக்கு உட்பட்டு சத்தியப் பிரமாணம் செய்த பின் அந்த நடைமுறைகளுக்கு ஏற்ப புதிய நீதிமன்றங்களில் வழக்காடுவதற்கும் புலிகள் அனுமதி வழங்கியுள்ளார்கள்.

நன்றி - நூலகத்திட்டம்

சரிநிகர்
4, ஜெயரட்ன மாவத்தை
திம்பிரிகஸ்யாய
கொழும்பு -05
தொலைபேசி: 584380



பிரதம ஆசிரியர்: சேரன்

## புதைகுழி அரசியல்

இரத்தினக் கற்களுக்காகப் புகழ் பெற்று விளங்கிய இரத்தினபுரி இப்போது வேறு வகையில் பிரசித்தமாயிருக்கிறது. இதுவரை அகழ்ந்தெடுக்கப்பட்ட குழிகளிலிருந்து இரத்தினக் கற்களே கிடைத்து வந்தன. இப்போது இரத்தினபுரியின் சூரியகந்தவில் அகழ்ந்தெடுக்கப்பட்ட குழிகளிலிருந்து மனித எலும்புக் கூடுகளும், சிதைவடைந்த சடலங்களும் மீட்கப்பட்டுள்ளன; மீட்க்கப்பட்டு வருகின்றன.

ஜே.வி.பி. காலப்பகுதியில் சூரியகந்தவில் இருந்த ரூபவாஹினி, ஒலிபரப்புக் கூட்டுத்தாபன ஒளி, ஒலி பரப்பிக் கோபுரத்தைப் பாதுகாக்க என்ற பெயரில் அமைக்கப்பட்டிருந்த இராணுவ முகாமுக்கு அருகிலேயே இப் புதைகுழிகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

அரச அதிகாரத்தைக் கையில் வைத்திருப்போர் 'பாதுகாப்பு' என்றதன் பேரில் இவ்வாறான படுகொலைகளையும் மக்கள் விரோத செயற்பாடுகளையும் இலகுவாக நியாயப்படுத்தி விடுகிறார்கள்.

ஜேர்மனிய தூய ஆரிய இனத்தைப் பாதுகாப்பது என்ற பெயரில் ஹட்லரினால் லட்சக்கணக்கான யூதர்கள் படுகொலை செய்யப்பட்டது பழைய உதாரணம்.

சேர்பியரின் பாதுகாப்பு என்ற பெயரில் பொஸ்னியாவில் முஸ்லீம்கள் கொல்லப்பட்டு வருகிறார்கள் இப்போது.

இங்கேயும் தமது பாதுகாப்புக்காக முஸ்லீம்களை கொன்று தள்ளியிருக்கிறார்கள் புலிகள்.

புளொட் அமைப்பினர் தமது தலைவர் உமா மகேஸ்வரனின் பாதுகாப்பிற்காக ஆறு இளம் புலிகளைக் கொன்று புதைத்திருந்தார்கள் சுழிபுரத்தில்.

மணியம் தோட்டத்திலும், யாழ்ப்பாணத்தின் இன்னும் சில இடங்களிலும், வெளித்தெரிந்த புதை குழிகள் தமது பாதுகாப்பு என்ற பெயரில் எல்லாப் 'பெரிய' இயக்கங்களும் புதைகுழி அரசியலை நடாத்தி இருப்பதை நம்ப வைக்கின்றன.

இது தவிர அரச படைகள் தமது பாதுகாப்பிற்காக வடக்கிலும், கிழக்கிலும் கொன்று புதைத்த/எரித்த அப்பாவி இளைஞர்கள் பற்றிய புள்ளிவிபரங்கள் எண்ணிக்கையற்றுப் போயுள்ளன. இடையில் இந்தியப்படையும் தனது பங்குக்கு பாதுகாப்பு என்பதன் பேரால் கொன்றதையும், புதைத்ததையும் இங்கு குறித்தாக வேண்டும்.

இப்போது சூரியகந்த.
அரசு தன் பாதுகாப்பிற்குச் செய்திருக்கிறது.
சுதந்திரக் கட்சியோ இதைக் காயாக வைத்து ஆட்சியைப் பிடிக்க முனைகிறது.
முன்னர் தமது பாதுகாப்பிற்காக சுதந்திரக் கட்சியினர் என்ன செய்தார்கள் என்பதை மக்கள் மறந்து போய்விட்டார்கள் என அது எண்ணுகிறாற் போலிருக்கிறது.

எப்போது அரசு தன்னைப் பாதுகாப்பது என்ற பெயரில் நாட்டின் ஒரு பகுதி மக்களுக்கெதிராக விசேட சட்டங்களை உருவாக்கியதோ, அப்படி உருவாக்கியவற்றை மற்றைய கட்சிகள் எப்போது ஏற்றுக் கொண்டனவோ அப்போதே புதைகுழி அரசியலுக்கான அங்கீகாரத்தை வழங்கியாகி விட்டது.

சூரியகந்தப் படுகொலைகளை நடாத்துவதற்கான கோட்பாட்டளவிலான ஒப்புமையை அரசு தன்னைப் பாதுகாப்பதற்கென 1979இல் பயங்கரவாதத் தடைச் சட்டத்தைக் கொண்டு வந்த போதே அதனை ஏற்றுக் கொண்டதன் மூலம் வழங்கி விட்டன இந்தக் கட்சிகள்.
படிப்படியாக பயங்கரவாதத்திலிருந்து தம்மைப் பாதுகாப்பது என்ற பெயரில் நாட்டின் ஒரு பகுதி மக்களுக்கெதிராகக் கொண்டு வந்த அவசரகாலச் சட்டம், மற்றும் விசேட சட்ட விதிகளையும், படுகொலைகளையும் திட்டமிட்ட போதெல்லாம் அவை பற்றி இக்கட்சிகள் அக்கறை கொள்ளவில்லை.

இவ்வாறான விடயங்களில் அரசுக்கு இக்கட்சிகள் கொடுத்த அங்கீகாரமானது சிறுபான்மையினருக்கு எதிராக என ஆரம்பித்து, இன்று தனது இளைஞர்களையே கொன்று புதைப்பதில் வந்து நிற்கிறது.

மாற்று அபிப்பிராயம் கொண்டவர்களுக்கெதிராக துரோகிகள், காட்டிக் கொடுப்பவர்கள் என்றதன் பெயரில் புலிகளால் ஆரம்பிக்கப்பட்ட படுகொலைகள், அரசியற் கட்சிகள், மாற்று அமைப்புகள் என்று தொடங்கி இன்று தனது அமைப்பிற்குள்ளேயே மாத்தையா சக அவரது கோஷ்டியினருக்கு கெதிராக வந்து நிற்கிற வழிமுறைகளையும் இன்னொரு வகை உதாரணமாகக் கொள்ளலாம். ( கோடாரிக்கு மரக்காம்பாம்!)
இதே போலத்தான் சிறுபான்மையினக் குழுமங்களை ஒடுக்க ஏற்படுத்தப்பட்ட அவசரகால சட்டவிதிகள் தான் தென்னிலங்கையின் புதைகுழி அரசியலுக்கு இடமளித்துள்ளது.

இப்போது அரசு மேலும் தன்னைப் பாதுகாத்துக் கொள்வது என்பதன் பெயரில் பல புதிய அவசரகால விதிகளை அமுல்படுத்தியுள்ளது.


தேசத்துரோகம், மற்றும் அரசுக்கு எதிரான கிளர்ச்சியைத் தூண்டுதல், தொடர்பாக டிசெம்பர் 18இல் இன்னும் சில புதிய அவசரகால ஒழுங்குவிதிகள் பொதுப் பாதுாப்பு கட்டளைகள் சட்டத்தின் 40வது அத்தியாயத்தின் கீழ் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன.
அரசால் பிரகடனப் படுத்தப்பட்டிருக்கும் இவ்விதிகள் கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரத்திற்கு வைக்கப்படும் ஆப்புகளில் ஒன்று எனின் மிகையாகாது.

இவ்விதிகள் சுயமான வெளிப்பாட்டுச் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்துவதோடு சுட்டிக்காட்டச் சொற்களைப் பாவித்தல், பேசுதல், எழுதுதல், கண்களால் பார்க்கக்கூடிய சைகைகளை காட்டுதல் என்பவற்றையும் துண்டுப் பிரசுரங்கள், சுவரொட்டிகள் வெளியிடுதலையும் தடை செய்கிறது.
கேலிச்சித்திரக்காரர் ஒருவரை இவ்விதிகளின்கீழ் 20 வருடங்கள் வரை சிறையில் தள்ள இச்சட்டமூலம் வழிவகுத்திருக்கிறது.

இவ்விதிகள் தொடர்பாக பலத்த ஏதிர்ப்புக் கிளம்பியதையடுத்து 'அரசுக்கும், ஜனாதிபதிக்கும் எதிரான குரோதத்தை, வெறுப்புணர்வைத் தூண்டுதல் அல்லது அவ்வாறு செய்ய முயற்சித்தல் தண்டனைக்குரிய குற்றம்' என்கிற ஏற்பாட்டை அரசு நீக்கியிருக்கிறது. ஆயினும் இவ்விதிகளின் வலிமை குறைந்து விடவில்லை.
ஆளுபவர்கள்/ அதிகாரத்திலிருப்பவர்கள் தங்களது பாதுகாப்பு என்பதன் பேரில் மக்களுக்கெதிராகவும், மக்களுக்கு உண்மையையும் பக்கச் சார்பற்ற நியாயத்தை அறிந்து கொள்ள இருக்கும் உரிமைகளையும் பறிப்பதற்கெதிராகவும் குரல் எழுப்ப வேண்டிய தருணமிது.

இல்லையேல் புதைகுழிகளுக்குப் புகழ் பெற்ற நாடு என்ற பெருமையைத்தான் நாம் பெற்றுக் கொள்ள நேரிடும்.





# தொண்டாவின் பம்மாத்து அரசியல் தோல்வியை நோக்கி....

இலங்கையின் மத்திய மலைநாட்டுப் பகுதியிலும் ஏனைய சில நகர்புறங்களிலும் செறிந்து வாழும் இந்திய வம்சாவழி தமிழ் மக்கள் இந்திய நாட்டில் இருந்து இலங்கைக்கு அழைத்து வரப்பட்டதே ஒரு விதமான ஏமாற்றல்தான். கங்காணிமார்களின் கபடத்தனம் தான் இதில் மேலோங்கிக் காணப்பட்டது. அதன் தொடர்ச்சியாக ஆரம்ப காலப்பகுதியில் உண்பதற்கு உணவின்றியும் உடுக்க உடையின்றியும் தமது வாழ்க்கையை நடாத்தியதோடு பெண்களில் பலர் கங்காணிமார்களினதும் ஏனைய அதிகாரிகளதும் இச்சைக்கு உட்பட்டு நடக்க வேண்டும் என்றும் நிர்ப்பந்திக்கவும்பட்டனர் என்பது வரலாறு.

அதனது தொடர்ச்சியாக 1948ம் ஆண்டு மலையக மக்களின் வாக்குரிமையைப் பறித்த செயலானது அவர்களை மேலும் இன்னலுக்குட்படுத்தியது. இதனைத் தொடர்ந்து மலையக மக்களின் நலன் பேணல் என்ற அடிப்படையில் எண்ணற்ற அமைப்புகள் மலையகத்தில் தோன்றி வளர ஆரம்பித்தன. எனினும் அவ்வமைப்புகள் அனைத்துமே தமது வர்க்க நிலைப்பாட்டை பேணும் போக்குடனும் குட்டி பூர்சுவா குணாம்சத்தில் இருந்து சிறிதும் மாறி தொழிலாளி வர்க்க நிலைப்பாட்டை ஆதரித்ததில்லை. அவர்களது அடிப்படைப் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு பரந்தளவிலான பொது வேலைத் திட்டத்தின் அடிப்படையில் சகல மக்களையும் அணிதிரட்டி தமது உரிமைக்காக ஒரு பொதுப் போராட்டத்திற்கு இட்டுச் சென்றதாக எந்த அமைப்புகளையுமே குறிப்பிட்டுக் கூற முடியாது.

இருப்பினும் காலத்துக்கு காலம் இடம் பெற்ற தேர்தலில் தத்தமது வெற்றியை உறுதிப்படுத்திக் கொள்வதற்கென வெறும் தேர்தல் வாக்குறுதிகளாக மாத்திரம் எத்தனையோ வாக்குறுதிகள் இதுவரை காலமும் மலையக மக்கள் முன் வைக்கப்பட்டிருந்தன. அதனது தொடர்ச்சியாக, அண்மையில் இ.தொ.கா.வால் முன்வைக்கப்பட்டதே குடியிருக்கும் வீடுகள் சொந்தமாக்கப்படும் என்ற வாக்குறுதியாகும்.

இவ்வகையான வாக்குறுதிகள் அனைத்தும் இன்றைய காலப்பகுதிக்கு மட்டும் சொந்தமானவையல்ல. மாறாக இதற்கு வரலாற்று ரீதியான ஒரு பாரம்பரியம் உண்டு. அதன் அடிப்படையிலும் வழி வழியாகவுமே அண்மையில் வெளியிடப்பட்ட வாக்குறுதிகளும் உள்ளன என்றால் அது மிகையாகாது.

- தோட்டங்கள் அனைத்தும் கிராமமாக மாற்றப்படும்
  காணிகள் வழங்கப்படும்
- லயன்கள் அனைத்தும் திருத்தப்பட்டு தொடர் குடியிருப்பு வீடுகளாக கட்டித் தரப்படும்.
- புதிய வீதிகள் அமைக்கப்படும். பாதிப்படைந்த வீதிகள் திருத்தித் தரப்படும்.
- கோவில்கள் கட்டித் தரப்படும், போக்குவரத்து வசதிகள் ஏற்படுத்தித் தரப்படும்.
- தோட்டங்களுக்கு மின்சாரம் வழங்கப்படும் என்றும் இதனோடு அண்மையில் வெளியான ''தொழிலாளர்களுக்கு வீடுகள் சொந்தமாக்கப்படும்''

என்பதுமாக தேர்தல் வாக்குறுதிகள் படிப்படியான வளர்ச்சி கண்டுள்ளதை அவதானிக்கலாம். இவ்வாறான தேர்தல் வாக்குறுதிகளை பிரபல தொழிற் சங்கங்களும், கட்சிகளும் வழங்கிவந்தாலும் இன்றும் முன்னணி இடம் வகிப்பது இ.தொ.கா தான்.

இவ்வகையான வாக்குறுதிகள் காரணமாக ஏமாற்றம் அடைந்த இளைஞர்களின் விரக்தியும் உள்ளக் குமுறல்கள் அனைத்தும் சாம்பல் படர்ந்த நெருப்பாக குமுறிக் கொண்டு இருந்தது. இதன் ஒரு வெளிப்பாடுதான் 1984ம் ஆண்டு காலப்பகுதியில் இ.தொ.கா தலைவர் தொண்டமான் அவர்கள் தலாவாக்கலை பகுதிக்கு விஜயம் மேற்கொண்ட போது தனது காரை விட்டு வெளியே இறங்க முடியாதபடி கேள்வி மேல் கேள்விகளைக் கேட்டுத் திருப்பியனுப்பிய சம்பவமாகும். இது மலையக மக்களின் வரலாற்றில் நிகழ்ந்த ஒரு முக்கியமான சம்பவம். அதே போன்று 1966ம் ஆண்டு காலப்பகுதியில் பதுளை ரொபேரி ரத்கல எனும் தோட்டத்தில் தலைவர் தொண்டமானின் காரிற்கு சாணியடித்து திருப்பியனுப்பியதும் மற்றுமொரு நிகழ்வாகும். இவ்வாறான நிகழ்வுகள் மீண்டும் மீண்டும் தோன்றாமல் தடுப்பதற்கும் இளைஞர்களைத் திருப்திப்படுத்தவுமென 1984ம் ஆண்டு காலப்பகுதியில் இருந்து சத்தியாக்கிரகம், பிரார்த்தனை ஆகிய போராட்டங்களை மேற்கொண்டதனூடாக இளைஞர்களின் தாகத்தை ஓரளவு தணித்த திரு. தொண்டமான் தனது சரிந்த செல்வாக்கை ஒருவாறு சரி செய்து கொண்டார். எனினும், இந்த ஏமாற்றுக்கள் நீண்ட பாலத்திற்குத் தாக்குப்பிடிக்கவில்லை.

வெற்று வாக்குறுதியும், குடும்ப ஆதிக்கமும், குடும்ப செல்வாக்கும் கொண்ட தொழிற்சங்கமாக இ.தொ.கா வை நடாத்த முற்பட்டதன் ஒருவித வெளிப்பாடுதான் சந்திரசேகரன் போன்றவர்களின் வெளியேற்றமாகும். தேர்தலில் போட்டியிட தனக்கு ஒரு சந்தர்ப்பத்தை வழங்க மறுத்ததைச் சாட்டாக வைத்து சந்திரசேகரன் மலையக மக்கள் முன்னணியை ஆரம்பித்து இ.தொ.காவுக்கு எதிரான சக்திகளை அணி திரட்டுவதில் முனைப்புடன் செயல்பட்டார். அத்துடன் இ.தொ.கா தலைமை மீது கசப்புணர்வுகளை கொண்டிருந்த இளைஞர்களும் தொழிலாளர்களும் இவ்வமைப்பில் இணைந்தார்கள். ஆனால் இவர்களின் தவறான போக்குகளினால் இவ்வமைப்பில் இருந்து பலர் பின்னர் ஒதுங்கிக் கொண்டார்கள். தொடர்ந்தும் இவர்களது தவறான நடைமுறையின் காரணமாக இவ்வமைப்பின் தலைவர்கள் சிலர் சிறைவாசம் செல்ல வேண்டிய நிலைமை ஏற்பட்டது.

**எம்.என்.ராஜன்**

இவை எல்லாவற்றிற்கும் மேலாக அண்மையில் மலையகப் பகுதியில் இடம்பெற்ற தோட்டங்கள் தனியார் மயமாக்கும் திட்டத்தின் மூலம் மக்களுக்கு ஏற்பட்ட அதிருப்தியின் காரணமாக தொண்டமான் மீதான அதிருப்தி மேலோங்கத் தொடங்கியது. இதன் காரணமாக தோட்டங்களை தனியார் மயமாக்கிய திட்டத்தை மீள் பரிசீலனை செய்ய இ.தொ.கா முனைந்தது. இதனது வெளிப்பாடாகவும் வீடுகள் அனைத்தும் தோட்டத் தொழிலாளர்களுக்கு சொந்தமாக்கும் திட்டத்தின் பேச்சுவார்த்தையில் ஏற்பட்ட விரிசல் காரணமாகவும் ஐ.தே.கட்சிக்கும் இ.தொ.காவுக்கும் இடையேயான முரண்பாடு அதிகரித்தது.

இவ்வாறு முரண்பாடு அதிகரித்ததானது இ.தொ.கா என்ற அமைப்பு இரண்டு விதமான செயற்பாடுகளில் இறங்க வேண்டிய நிர்ப்பந்தத்தை உருவாக்கியது.

1. மலையக மக்கள் மத்தியில் இ.தொ.கா மேல் ஏற்பட்டுள்ள அதிருப்தியை போக்குவதும் தனது செல்வாக்கை ஒருவாறாகச் சீர் செய்வதும்.

2. ஐ.தே.கவுடனான இ.தொ.கா வின் கூட்டை முறிப்பதனூடான தமது உறுப்பினர்களுக்கு அற்றுப் போகும் பாராளுமன்ற உறுப்பினர் பதவி ,மாகாண சபை உறுப்பினர் பதவி என்பவற்றைக் காப்பாற்றி இ.தொ.கா இரண்டு அமைப்பாகப் பிரிவதை தடுப்பது. இதனது வெளிப்பாடாகத்தான் இ.தொ.கா மத்திய அரசாங்கத்துடன் இணைப்பை வைத்துக் கொண்டு மாகாண சபையில் ஐ.தே.கட்சிக்கு எதிராக வாக்களிப்பது என்று காணப்பட்டது.

இம்முடிவு இவ்வாறிருக்க தொண்டமானின் யோசனைக்கு எதிராக இ.தொ.கா வினுள் எழுந்த பூசல்கள் காரணமாக இ.தொ.கா சார்பான மாகாண சபை உறுப்பினர்கள் கடத்தப்பட்டார்கள் என்ற செய்தி முழு மலையகமெங்கும் பரவியதுடன் எந்தவித கட்சி, தொழிற்சங்கப் பேதங்களும் இன்றி அனைவரும் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டனர். இரண்டு நாட்களின் பின்பு மாகாண சபை உறுப்பினர்களே தாங்கள் கடத்தப்படவில்லை என்றும் பயமுறுத்தல்கள் காரணமாக பள்ளேகலையில் தாங்கள் தங்கியதாக பத்திரிகையில் செய்தி வெளியிட்டனர். இதனை ஒருவகையில் பாதுகாப்பாக இருந்தார்கள் என்பதை விட தங்களைத் தாங்களே கடத்திக் கொண்டார்கள் என்று குறிப்பிடலாம்.

இறுதியாக எல்லாவகையான ஏமாற்றுக்களுக்கும் அப்பால் இ.தொ.கா அமைப்பினுள்ளே காணப்படுகின்ற விரிசல்கள் தெளிவாக வெளிவரத் தொடங்கியுள்ளன. தலைவர் பொதுச் செயலாளரையும், பொதுச்செயலாளர் தலைவரையும் மாறிமாறி குற்றம் சாட்டும் நாடகம் ஆரம்பமாகி நடந்து கொண்டு இருக்கின்றது. மத்திய மாகாண சபையில் முன்வைக்கப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை முன் வைக்கப்பட்ட முறையின் தவறு காரணமாக நிராகரிக்கப்பட்டது. சபையும் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் மலையக மக்களது தனித்துவமான தன்னடையாளங்களை பாதுகாப்பதற்காக சுயாட்சி உள்ளமைப்புகளை ஏற்படுத்துவதோடு சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் இம் மக்களது பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதன் மூலம் மலையக மக்கள் ஒரு தேசிய சிறுபான்மை இனம் என்பதனை வலியுறுத்துவதுமே மலையக மக்களை ஏனைய சமூகங்களோடு தலை நிமிர்ந்து வாழவும் வழிவகுக்கும். மாறாக உறுப்பினர் பதவி, கட்சித் தலைமை என்பவற்றை கருத்தில் கொண்டு பம்மாத்து வேலைகளில் ஈடுபடுவது மலையக மக்களை மீண்டும் மீண்டும் ஏமாற்றும் ஒருவிதமான வழிமுறையாக அமையுமேயன்றி மலையக மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வாக அமையமாட்டாது.

நன்றி - நூலகத்திட்டம்



# மைலந்தனை: பாதுகாப்பற்ற சாட்சிகளும் பாதுகாப்புள்ள படையினரும்



— சசிகுமார் —

இப்போது எம்பிலிப்பிட்டியாவில் எலும்புக் கூடுகள் தோண்டியெடுக்கப் படுகின்றன. இச்சம்பவமானது ஜே.வி.பீ.யின் ஆதிக்கம் ஓங்கியிருந்த சமயத்தில் சிறிலங்கா அரசபடைகளினால் கொன்று புதைக்கப்பட்ட 31 மாணவர்களினது சடலங்கள் என அறியப்படுகிறது.

இவ்வாறு வகை தொகையர்க் கைது செய்வதும், ஈவிரக்கமற்ற முறையில் கொன்று குவிப்பதும் சிறிலங்கா அரசபடைகளுக்கு புதிய தொன்றல்ல. அதிலும் குறிப்பாக இலங்கையில் தமிழ் பேசும் மக்களுக்கு இவ்வாறான சம்பவங்கள் அடிக்கடி நேர்வதுண்டு.

குமுதினிப்படகில் இடம்பெற்ற கொலைகள், மண்டைதீவுக்கடலில் நடந்த பயங்கரம், கொக்கட்டிச் சோலையில் இருமுறை நடந்த கொடூரம், பூவரசங்குளத்தில் பஸ்ஸில் கொல்லப்பட்டமை என்று தொடர்ச்சியாக தமிழ்மக்கள் தொகைக் கணக்கில் கொடூரமாகக், குரூரமாகக், கொல்லப்படுவது தமிழ் மக்களின் வரலாற்றில் நடந்து வருகின்ற கதை. இதன் தொடர்ச்சியில் இடம் பெற்றதே மைலந்தனைப் படுகொலை.

டென்சில் கொப்பேகடுவவும் வேறு சில இராணுவ அதிகாரிகள் குண்டு வெடிப்பில் கொல்லப்பட்டதை அடுத்தே இச்சம்பவம் நடந்தது என்று வழமை போல பேசப்பட்டது.

## மைலந்தனைச் சம்பவம்

92ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் மைலந்தனையில் 35 பொதுமக்கள் இராணுவத்தால் கண்டதுண்டமாக வெட்டியும் குத்தியும் சுட்டும் கொல்லப்பட்ட துயரச் சம்பவத்தை யாராலும் எளிதில் மறந்து விட முடியாது. படையினர் மறுத்து விடவும் முடியாது.

இச்சம்பவம் பற்றிய வழக்கு விசாரணைகள் கடந்த ஒக்டோபரில் பொலன்னறுவை நீதிமன்றத்தில் ஆரம்பமாகின. இதில் வேடிக்கை என்னவென்றால் இச்சம்பவம் நடந்தது மட்டக்களப்பு மாவட்டத்தில் மைலந்தனையில். சம்பவக்சாட்சிகள் 43பேர்களும் அப்பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள். ஆனால் அரசு இந்த வழக்கு விசாரணைகளை பொலன்னறுவை நீதிமன்றத்துக்கு மாற்றியுள்ளது. இதற்கு அரசு சொல்லும் காரணம்: ''சாட்சிகளால் ஏற்கனவே அடையாளம் காட்டப்பட்ட 23 படைவீரர்களுக்கு பாதுகாப்பு இல்லை'' என்பதாகும். படுமிருகத்தனமாக கொலை செய்த ஆயுதந்தாங்கிய இராணுவத்தினருக்கு பாதுகாப்பு இல்லை எனக் கூறும் அரசு சாட்சி கூறத் தைரியமாக முன்வந்த 43 சாட்சிகளை சம்பவம் நடந்த பிரதேசத்தை விட்டு, பாதுகாப்புக்கு அதிக உத்தரவாதமில்லாத, சிங்கள மாவட்டமான பொலன்னறுவைக்கு வரவழைப்பது, சாட்சிகளுக்கு பாதுகாப்பானதா? என்பதை உணர்வதற்கு தயாராக இல்லை.

இந்த வழக்கை பொலன்னறுவையிலிருந்து மட்டக்களப்புக்கு மாற்றக்கோரி கொழும்பு மேன் முறையீட்டு நீதிமன்றத்தில் வழக்கொன்று தாக்கல் செய்யப்பட்டது. இவ்வழக்கில் தீர்ப்பாக மட்டக்களப்பில் வழக்கை நடத்தும் யோசனை நிராகரிக்கப்பட்டது. தொடர்ந்து பொலன்னறுவையிலேயே வழக்கை நடத்துமாறு தீர்ப்பு வழங்கப்பட்டது.

இந்த சம்பவம் தொடர்பாக மீள் கண்ணோட்டத்தைச் செலுத்துவோம். .

92ம் ஆண்டு ஓகஸ்ட் 8ம் திகதி மைலந்தனைக் கிராமத்திற்கு இராணுவத்தினர் கையில் துப்பாக்கிகள், கோடாரி, அலவாங்கு, பொல்லுகள் என்பனவற்றை தூக்கிக் கொண்டு வந்தனர். வரும் வழியிலேயே எதிரில் கண்டவர்களை வெட்டியும், குத்தியும், அடித்தும் கொன்றனர். ஒரு வயது நிரம்பாத குழந்தைகள் தொடக்கம் 72 வயது நிரம்பிய முதியவர் வரை கண்ட துண்டமாக வெட்டி துடிதுடிக்கக் கொல்லப்பட்டனர்.

பலத்த பாதிப்புகளுக்குள்ளான இருவர் மட்டுமே ஆஸ்பத்திரிகளில் இறந்தனர். ஏனைய 33பேரும் சம்பவத்தின் போது இறந்தனர். 10ம் திகதி24 சடலங்கள் ஆங்காங்கு கண்டெடுக்கப்பட்டன. 13ம் திகதி வரை மேலும் 9 பிணங்கள் கண்டெடுக்கப்ட்டன.

8வயது சிறுமியையும், 1 வயது சிறுமியையும் குற்றுயிராக கண்டெடுத்தனர். இருவரும் ஆஸ்பத்திரியில் இறந்தனர்.

இறந்தவர்களில் 20 பேர் பெண்கள். 15 பேர் ஆண்கள். இவர்களில் 10 வயதுக் குட்பட்ட சிறுவர்கள் 12 பேர். பலத்த காயங்களுக்குள்ளானோர் 10 பேர். இவர்களில் 10 வயதுக்குட்பட்டோர் 4 பேர்.

11ம் திகதி கிராமத்தைச் சேர்ந்தவர்கள் வாழைச்சேனை பொலிசுக்கு முறைப்பாடு செய்தனர். பின்னர் செப்ரம்பர் மாதம் 20ம் திகதி தொடக்கம் 26ம் திகதி வரை இராணுவத்தினரை அடையாளம் காட்டுவதற்காக பொதுமக்கள் வரவழைக்கப்பட்டனர். இந்த அடையாள அணிவகுப்பின் போதே 23 இராணுவத்தினர் அடையாளம் காட்டப்பட்டனர்.

''இந்த வழக்கை மட்டக்களப்பில் நடத்த முடியாது; பொலன்னறுவையே படையினருக்கு பாதுகாப்பானது. எனவே பொலன்னறுவை நீதிமன்றத்தில் விசாரணைகளை மாற்றுமாறு சட்டமா அதிபர் 1993, ஏப்பிரல் 3ம் திகதி கச்சேரியில் நடந்த கூட்டத்தில் கூறியவை அங்கு ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

எனினும் 43 பொதுமக்கள் சாட்சியங்கள் அளிக்க பொலன்னறுவை சென்று வருவது பாதுகாப்பற்றது; அகதிகளாக உள்ள அவர்களுக்கு போக்குவரத்துச் செலவை ஏற்றுக்கொள்வது கடினமாக இருக்கும் எனக் கூறி சில தமிழ்க் குழுக்களைச் சேர்ந்தவர்கள் வழக்கை மட்டக்களப்பிலேயே நடத்தகோரி முன்மொழிந்தனர். எனினும் இக்கோரிக்கை சட்டமா அதிபரால் நிராகரிக்கப்பட்டது.

பொலன்னறுவை நீதிமன்றத்தில் ஒக்டோபர் 11,12,13,14 திகதிகளில் விசாரணைகள் ஆரம்பமாகின. இந்த விசாரணையின் போது பல நெருக்கடிகளுக்கு மத்தியில் பொதுமக்கள் சாட்சியமளித்தனர்.

பெரியண்ணன் கருப்பையா என்பவர் சாட்சியமளிக்கையில் ''அன்று தோணி செய்வதில் ஈடுபட்டிருந்த போது ஒரு மணியளவில் இராணுவத்தினர் கிராமத்திற்கு வந்து ஊர்மக்களைச் சுடச் சொல்லி உத்தரவிட்டனர். துவக்கு, கத்தி என்பவையும் வைத்திருந்தார்கள். கண்மூடித்தனமாக எல்லோரையும் தாக்கினார்கள். எனது மாமியாரை கோடாரியினால் கொத்துவதைக் கண்டேன். நான் தப்பிவிட்டேன். அன்று மாலை குளிக்கச் சென்ற என் மனைவி உட்பட இன்னும் மூவர் குளத்தில் சடலமாகக் கண்டெடுக்கப்பட்டனர். என் நான்கு பிள்ளைகளில் மூவரை இச்சம்பவத்தில் இழந்தேன்'' எனக் கூறினார்.

அடுத்து சாட்சியமளித்த 13 வயதுச் சிறுவனான ராஜ் மோகன் 'எங்கள் அனைவரையும் மாதவி என்பவரின் வீட்டில் கூடும்படி கட்டளை இட்டனர். அங்கும் இன்னும் பல பொதுமக்கள் கூடி இருந்தனர். இராணுவத்தினரில் ஒருவர் வயோதிபப் பெண் ஒருவரை அலவாங்கினால் தாக்கியதைக் கண்டேன். இன்னொரு பெண்ணை கோடாரியால் வெட்டியதைக் கண்டேன். எனக்கு ஒருவன் துவக்கினால் வெடி வைத்தான். என் தோளில் குண்டு பட்டு வலிதாங்காமல் கீழே விழுந்தேன். பக்கத்தில் வந்த இன்னொரு இராணுவத்தினன் வாளினால் என் கையை வெட்டினான். என் பாட்டனை துரத்திக் கொண்டு போய் வாளினால் வெட்டினான். என் அம்மா கைக்குழந்தையான லதாவைத் தூக்கிக் கொண்டு ஓடினார். அவர் பின்னால் இன்னொரு தங்கையான ராதிகாவும் ஓடினாள். இச்சம்பவத்தில் எனது பாட்டா, தங்கைகள் இருவர், பாட்டி, சித்தப்பா ஆகியோர் கொல்லப்பட்டு கிடந்தனர். 3 நாள் வயல் வெளியில் நினைவற்று கிடந்த என்னை எனது தகப்பனாரும் செஞ்சிலுவைச் சங்கத்தினரும் மீட்டெடுத்து ஆஸ்பத்திரியில் சேர்த்தார்கள் . ஒரு மாத காலம் சிகிச்சை பெற்றேன். என் வலது கை சத்திர சிகிச்சை மூலம் துண்டிக்கப்பட வேண்டியதாயிற்று. பின்னர் மட்டக்களப்பு நீதிவானால் புனானை இராணுவமுகாமில் நடத்தப்பட்ட அடையாள அணிவகுப்பின் போது சில இராணுவத்தினரை அடையாளம் காட்டினேன்.

அடுத்ததாக சாட்சியமளித்த நல்லம்மாள் (30வயது) மைலந்தனை ரயில் நிலைய முகாமிலிருந்து இராணுவத்தினர் வந்து மாதவியின் வீட்டிற்கு என்னைக் கூட்டிச் சென்றனர். அங்கே 50 பேரளவில் ஊர் மக்கள் இருந்தனர். இராணுவத்தினர் தாக்கத் தொடங்கிய போது என் கையில் துவக்குச் சூடு பட்டு கீழே விழுந்தேன். சுயநினைவு வந்த போது ஆஸ்பத்திரியில் கிடந்தேன்''

அடுத்து பொன்னையா சிவமலர் கூறும் போது ''துவக்கு, கத்தி, அலவாங்குடன் காணப்பட்ட இராணுவத்தினர் மாதவியின் வீட்டுக்குப் போகச் சொன்னார்கள். மாதவியின் வீட்டில் ஏற்கனவே 50 பேரளவில் இருந்தார்கள். முதலில் அப்புக்குட்டி என்பவரைத் தாக்கத் தொடங்கினார்கள். இதைத் தொடர்ந்து பொதுமக்கள் சத்தமிட்டுக் கொண்டு ஓடத் தொடங்கினார்கள். நானும் ஓடினேன். என்காலில் துவக்குச் சூடு பட்டு கீழே விழுந்தேன். ஒரு வயது லதாவைக் தூக்கி வைத்திருந்தேன். மூன்று வயது ராதிகா என் பின்னாள் வந்து கொண்டிருந்தாள். விழுந்து கிடந்த என்னை ஒருவன் எனது காலில் கத்தியால் வெட்டினான். பிள்ளைகள் ராதிகாவையும் (8வயது) லதாவையும் (1வயது) ஆயுதங்களால் வெட்டினார்கள். பின்னர் எல்லா வீடுகளுக்கும் நெருப்பு வைத்தார்கள் என்றார்.

இவ்வாறு பலர் சாட்சியமளித்தனர். மொத்த சாட்சிகள் 43 பேர். வழக்கு ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது. எனினும் கூட கொடூரச் செயலை நேரில் கண்ட பொதுமக்கள் சாட்சியமளிக்க தயாராயுள்ள போது சாட்சியங்களான 43 பேரின் பாதுகாப்புக்கு உத்தரவாதம் அளிக்காத அரசு, கொடூரத்தை புரிந்த இராணுவத்தினருக்கோ மேலும் பாதுகாப்பு வழங்க வேண்டுமென வழக்கை பொலன்னறுவைக்கு மாற்றியுள்ளது.

இதே போன்று பல சம்பவங்கள் இராணுவத்தின் தலையீடு உள்ள பகுதிகளில் நடந்த வண்ணமே உள்ளன. பாதுகாப்பு படையினர் என இன ஒழிப்பில் ஈடுபடுபவர்களுக்கு பெயர் சூட்டிக் கொண்டும் அவர்களுக்கு பாதுகாப்பு மட்டுமல்ல அவர்களின் செய்ல்களை நியாயப்படுத்தவும், அவசியமானால் மூடிமறைக்கவும் தயங்காத அரசுக்கு இது எங்கே இனப்பிரச்சினை என விளங்கப் போகிறது? அரசுக்கு இது பயங்கரவாதப் பிரச்சினை மட்டுமே. •

### 1992 ஓகஸ்ட் 8ம் திகதி மைலந்தனைச் சம்பவத்தில் கொல்லப்பட்டோர் விபரம்.

#### சம்பவ இடத்திலேயே இறந்தோர்

1. செல்வி. கருப்பையா குமுதினி (08 வயது)
2. செல்வி. கருப்பையா விஜயராணி (02 வயது)
3. செல்வன். கருப்பையா ரகுநாதன் (04 வயது)
4. திருமதி. முத்துவேல் சின்னம்மா (60 வயது)
5. திருமதி. ஆண்டியப்பன் லில்லி நோனா (37 வயது)
6. செல்வி. ஆண்டியப்பன் தங்கலட்சுமி (09 வயது)
7. திரு. தம்பிபோடி சுப்ரமணியம் (30 வயது)
8. செல்வன். சுபரமணியம் கிருஷ்ணபிள்ளை (12 வயது)
9. செல்வி. சுப்ரமணியம் சந்திரமதி (08 வயது)
10. திரு. ராமையா மயில்வாகனம் (49 வயது)
11. திருமதி. பேபிநோனா மயில்வாகனம் (32 வயது)
12. செல்வி. மயில்வாகனம் சுஜாதா (04 வயது)
13. செல்வி. மயில்வாகனம் மங்கையற்கரசி (02 வயது)
14. திருமதி. கந்தசாமி மாதவி (33 வயது)
15. திருமதி. விஜயலஷ்மி அப்புக்குட்டி (37 வயது)
16. திருமதி. வைரமுத்து கோமேரி (20 வயது)
17. திரு. மாணிக்கம் அப்புக்குட்டி (42 வயது)
18. செல்வி. அப்புக்குட்டி யோகசாந்தி (17 வயது)
19. செல்வி. அப்புக்குட்டி விஜிதா (14 வயது)
20. செல்வன் அப்புக்குட்டி சுதாகர் (09 வயது)
21. திரு. வைரமுத்து திலகரட்னம் (31 வயது)
22. திரு. சின்னத்தம்பி ஃவைரமுத்து (70 வயது)
23. திருமதி. தாவீது மரியமுத்து (71 வயது)
24. செல்வன். ராமசாமி ரவிகுமார் (04 வயது)

#### பொலன்னறுவை வைத்தியசாலையில் இறந்தோர்

25. செல்வி. தியாகராசா ராதிகா (08 வயது)

#### கொழும்பு வைத்தியசாலையில் இறந்தோர்

26. செல்வி. தியாகராசா லதா (01 வயது)

#### 13.8.92இல் கண்டெடுக்கப்பட்ட சடலங்கள்

27. திரு. பொன்னையா குமாரையா (52 வயது)
28. திரு. குமாரையா தவமோகன் (29 வயது)
29. திருமதி. அருணாசலம் பூரணம் சிவம்மா (35 வயது)
30. செல்வன். ராசமணி ரவிச்சந்திரன் (07 வயது)
31. செல்வன். ராசமணி ரகுநாதன் (15 வயது)
32. திரு பொன்னையா கனகசபை (60 வயது)
33. திருமதி: நல்லதம்பி தங்கப்பிள்ளை (72 வயது)
34. திரு. தாவீது ஸ்ரீனிவாசகம் (47 வயது)
35. திருமதி. கருப்பையா மரியம்மா (25 வயது)

நன்றி - நூலகத்திட்டம்



சாதி ரீதியான ஒடுக்குமுறை என்பது தென்னாசிய நாடுகளுக்கே உரித்தான ஒரு ஒடுக்குமுறை வடிவம். குறிப்பாக இந்தியாவிலும், இந்தியாவின் சமூக கலாசார செல்வாக்கிற்கு உட்பட்ட இலங்கை போன்ற நாடுகளிலும் இது ஆழமாக வேர் கொண்டிருக்கிறது.

இலங்கையில் அறுபதுகளுக்கு முன்னர் ஆங்காங்கே சாதி எதிர்ப்புக்குரல்கள் கேட்க ஆரம்பித்திருந்தாலும் அறுபதுகளின் ஆரம்பத்திலிருந்து தான் சாதி ஒடுக்கு முறைக்கெதிரான போராட்டங்கள் எழுச்சி பெறவாரம்பித்திருந்தன. குறிப்பாக சண்முகதாசன் தலைமையிலான சீன சார்பு கம்யூனிஸ்ட் கட்சி இப்போராட்டத்தை நடாத்துவதில் முன்நின்றது. எனினும் இப்போராட்டங்கள் ஒரு நெகிழ்ச்சியை ஏற்படுத்தினவேயன்றி சாதிரீதியான ஒடுக்குமுறையை இல்லாதொழித்து விடவில்லை. 70களில் உருப்பெற்று 80களில் முனைப்பும் பெற்ற தேசிய விடுதலைப் போராட்டம் கூட இதில் வெற்றி கண்டிடவில்லை.

இந்நிலையில் யாழ்ப்பாணச் சமூகத்தில் சாதியமைப்பு வேர் கொண்டிருக்கிற தன்மைபற்றியும், அதற்கும் வர்க்க அமைப்புக்குமான உறவு குறித்தும், சமூக நிறுவனமாக அது தொழிற்படும் பாங்கு குறித்தும் வ.ஐ.ச. ஜெயபாலன் அவர்கள் இக்கட்டுரையில் விளக்கிச் செல்கிறார்.

வ.ஐ.ச.ஜெயபாலன் ஒரு நாடறிந்த கவிஞர். ஏற்கனவே 'முஸ்லீம் மக்களும் தேசிய இனப்பிரச்சினையும்' என்ற சிறு நூலை வெளியிட்டவர்.

இக்கட்டுரையில் முதல் சுருக்க வரைவு அஆஇ என்ற சஞ்சிகையில் வெளியாகியது. சரிநிகருக்காக அதனை விரிவாக எழுதியிருக்கிறார் வ.ஐ.ச.ஜெயபாலன் அவர்கள்.

ஆ.ர்

# சாதி அமைப்பும் யாழ்ப்பாணத் தமிழர்களும்

**வ.ஐ.ச.ஜெயபாலன்**

## சாதியமைப்பு சில அடிப்படை வரையறைகள்

சாதியமைப்ப இந்தியாவிலும் இந்திய சமூக கலாசார செல்வாக்கிற்குட்பட்ட தென்னாசிய நாடுகளிலும் மட்டுமே காணட்படுகிற பலமான சமூக நிறுனவமாகும். அரேபிய பிடோயின் (Bedouin)நாடோடிகள் மத்தியிலும், டராதன எகிட்து, ஜட்பான் டோன்ற சில நாடுகளில் காணப்பட்ட சமூகங்களிடையேயும் சாதியமைப்பின் ஓரிரு கூறுகள் நிலவியமை ஆய்வாளர்களால் அடையாளம் காணட்டட்டுள்ளது. இருப்பினும் அவை சாதிஅமைட்டை ஒத்ததாக வளர்ச்சி அடையவில்லை.

அறிஞர்களுக்கு சாதிஅமைப்பு பதிதான, டரிவதற்குச் சிக்கலான ஒரு நிறுவனமாகவே என்றும் இருந்து வந்திருக்கிறது. ஏழாம் நூற்றாண்டில் இந்தியாவிற்கு வருகை தந்த சீன யாத்திரீகன் குவாங் சாங்கிற்கும் (Hsvan Tsang)சாதியமைட்ட டதிராகவே இருந்தது. 30-10-1979ல் யாழ் பல்கலைக்கழக தென்னாசிய இயல் கருத்தரங்கில் உரையாற்றிய டீங்கிங் டல்கலைக்கழக விரிவுரையாளர் லியூ சிங் வூ (Liu Xing Wu) தான் டல்கலைக்கழகத்தில் தென்னாசியா டற்றிய ஆய்வுகளில் ஈடுடடும்வரை சாதி என்ற சொல்லைக் கேள்விட்டட்டதே இல்லை என்று குறிட்பிட்டார். சாதி டற்றிய சேதியை தென்னாசியாவிற்கு வெளியில் குறிட்டாக ஐரோட்பிய நாடுகளுக்கு டோர்த்துக்கீசரே

டீடங்களின் வரலாறு ஒருவகையில் 'கொவிகம' உயர்சாதியினரின் 'சியாம் நிக்காயாவை' சேர்ந்த பிக்குகளுக்கும் தாழ்த்தப்பட்ட 'கரவா', 'சலாகம', 'துறாவ', சாதிகளைச் சேர்ந்த பிக்குகளுக்கும் இடையிலான போராட்டங்களின் வரலாறேயாகும். பின்னர் 'கரவா', 'சலாகம', 'துறாவ', சாதியினர் எல்லாச் சாதியினருக்கும் பொதுவான 'அமரபர நிக்காயாவை' நிறுவினர்.

கிறிஸ்தவ தேவாலயங்கள் எல்லாச் சாதியினரையும் ஒருங்கிணைக்கும் வகையில் அமையவில்லை. ஒவ்வொரு சாதிக்கும் ஒவ்வொரு தேவாலயம் என்ற வகையில், நிலவிய சாதிஅமைப்பிற்குள் சிக்கல்கள் இல்லாமல் கிறிஸ்தவ சமயம் தன்னை இருத்திக் கொண்டது. மேல்மட்டத்தில் சமய

கச்சிறுபான்மையினர். சமூக டொருளாதார ரீதியாகவன்றி மாநில அரசியல் ரீதியாகப் பலம் பெறவியலாதவர்கள். ஆனால் யாழ்ப்பாணத்து மேற்தட்டு சூத்திரரான வெள்ளாளரது நிலைமை மாறுபட்டது. அவர்கள் சமூக பொருளாதார ரீதியாக மட்டுமன்றி தொகைரீதியாக பெரும்பான்மை சமூகத்தவர்களாகவும் அரசியல் ஆதிக்கம் உள்ளவர்களாகவும் இருப்பது கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

ஒருவகையில் தமிழக அரசியல்கூட பிராமணரது அரசியல் ஆதிக்கத்தையும், அதனூடாக அவர்களது சமூக பொருளாதார, கலாசார ஆதிக்கத்தையும் உடைத்து தமது ஆதிக்கத்தை நிலைநிறுத்துவதற்கான மேல்தட்டு சூத்திரர்களின் கிளர்ச்சிதான். திராவிட

சாதியமைப்பின் தோற்றுவாயான இந்தியத் துணைக்கண்டத்தில் மூவாயிரத்திற்கும் அதிகமான சாதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. இவர்கள் மரபுசார்ந்து நான்கு வருணங்களாக குறிப்பிடப்பட்ட போதும் நடைமுறையில் பிராமணர், சைத்திரியர், வைசியர், சூத்திரர், பஞ்சமர் (தலித்) என்று ஐந்து வருணங்களாக வகுக்கப்பட்டுள்ளனர்.

சாதி அமைப்பின் கீழ் பிறக்கும் போதே அவனது சமூக, பொருளாதார, கலாசார உறவுகள் நிர்ணயமாகி விடுகின்றன. இங்கு அவனது தெரிவுக்கோ, தனிப்பட்ட மேலோங்குதலுக்கோ இடமில்லை. சாதி அமைப்புப் பரம்பரையானது. மேல் கீழ் எனப் படிமுறை உள்ளதும், தொழில் சார்ந்ததும், கண்டிப்பான சாதி வாரி அகமண விதியும் (சாதிவாரித் திருமணமுறை) சீழ்நிலையில் உள்ளவர்களும்; அவர்களுடனான உணவுப் பரிமாற்றமும் தீட்டுப்படுத்தும் என்ற கருத்தும், இவற்றுடன் தீண்டாமை, இந்து சமய அங்கீகாரம், சாதி அடிப்படையிலான சமூக, சமயச் சடங்குகள், கலாசாரம் என்பவையினாலும் கட்டிக் காக்கப்படுவதாகும்.

சாதியமைப்பில் படிமுறை அடிப்படையில் அமைந்த பல்வேறு சாதியினருக்கு இடையிலான அகஉறவுகள் முக்கியமானவை. ஆராய்ந்து பார்ப்பின் அத்தகைய உறவுகள் நிலத்துடனும், கோவிலுடனும் பல்வேறு சாதியினரும் கொண்டிருக்கும் உற்பத்தி உறவுகளையும், கலாசார உறவுகளையும் பிரதிபலிப்பதைக் காணலாம்.

கலாசாரரீதியாக இந்தியனான தென்னாசிய மனிதனுக்கு தனிமனித ஆளுமைகளாலும் முயற்சிகளாலும் சாதித் தடைகளை மீறி மேலோங்குவது சாத்தியமில்லை.

சாதிவாரியான தென்னாசிய சமூகங்களில் செல்வம் மட்டுமே தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்த ஒருவருக்கு சமூக கலாசார மேன்மையையோ, ஆதிக்கத்தையோ ஈட்டித்தந்துவிடாது. செல்வந்தராகிவிட்ட மேற்படி நபர் தமது வர்க்க ரீதியான அந்தஸ்தைப் போராடி நிலைநிறுத்துவதாகத் தீர்மானித்தால் கூட தனது வர்க்க அணியையல்ல; தனது சாதி அணிகளையே சார்ந்திருக்க நேரிடும்.

வர்க்கரீதியாக பெரும்பான்மையாக இருக்கும் உழைக்கும் வர்க்கத்தினர் சாதிவாரியாகப் பல்வேறுபட்டு சிறுபான்மையினராகக் குறுகிப் போவதும், வர்க்க ரீதியாகச் சிறுபான்மையினராக இருக்கும் மேல்வர்க்கத்தினர் சாதிவாரியாக பெரும்பான்மையினராக விரிவடைவதும் தென்னாசிய சமூக அமைப்பின் சிக்கலான அம்சங்களாகும். இது இலங்கைக்கும் பொருந்தும்.

ஆசியர்களாக இருந்த போதும் சீன

எடுத்துச் சென்றனர். சாதியைக் குறிக்கும் ஐரோப்பிய மொழிச் சொற்களுக்கு 'காஸ்ராஸ்' (Castas) என்ற போர்த்துக்கீச மொழிச் சொல்லே அடியாகும்.

ஐரோப்பாவிலும், தென்னாசியாவிற்கு வெளியில் சீனா போன்ற ஆசிய நிலஉடைமை சமூக அமைப்புக்களிலும் நிலவிய சமூக நிறுவனங்களை வர்க்க ரீதியாக ஆராய்ந்து புரிந்து கொள்ள முடியும். தென்னாசிய நிலஉடைமை சமூக நிறுவனங்களை வர்க்க ரீதியாகவும் சாதிய ரீதியாகவும் ஆராய்ந்து புரிந்து கொள்ளுவது அவசியம்.

ஒரு சில சமூக அரசியல் விவாதங்களில் அடிக்கடி குறிப்பிடப்படுகின்ற 'ஆசிய மாதிரிகை' (Asian Model) ஒப்பீட்டு ரீதியான சமூகப் பொருளாதார ஆய்வுகளை அடிப்படையாகக் கொண்டதல்ல. அது வெறும் அரசியல் தருக்க அடிப்படையில் உருவாக்கப்பட்ட ஆசிய மாயை ஆகும்.

## சாதி ஒரு சமூக நிறுவனம்

இலங்கைத்தீவில் முஸ்லீம்களைத் தவிர்த்து பௌத்தர்களாகவோ, இந்துக்களாகவோ, கிறிஸ்தவர்களாகவோ உள்ள சிங்களவர்களதும், தமிழர்களதும், மலையகத் தமிழர்களதும் மத்தியில் சாதிஅமைப்பு வலுவான ஒரு சமூக நிறுவனமாக நிலவுகிறது.

முஸ்லீம்கள் மத்தியில்கூட வலுவிழந்து கைவிடப்பட்டு வருகிற நிலையில் சாதி அமைப்பின் மிச்சசொச்சங்கள் இன்னும் நிலவுவதை அடையாளங் காணலாம். உதாரணத்துக்கு புத்தளம்-கற்பிட்டிப் பகுதிகளில் வாழும் முஸ்லீம்கள் இன்றும் கூட முக்குவ முஸ்லீம்கள் என்று குறிப்பிடப்படுவதும், மட்டக்களப்பு-அம்பாறை மாவட்ட முஸ்லீம்கள் மத்தியில் முக்குவரின் சமூக நிறுவனமான 'வயித்துவார்' எனப்படும் தாய்வழிக் குடிஅமைப்பு (Matri Liniage) காணப்படுவதும், யாழ்ப்பாணம் செம்மாதெருவில் வாழும் தோல் வேலை செய்யும் முஸ்லீம்களின் தாழ்ந்த சமூக அந்தஸ்தும் சில முஸ்லீம் பிரிவினரிடை வலுவிழந்த நிலையில் நிலவும் அகமண வழக்கங்களும் இங்கு குறிப்பிடப்படலாம்.

கோட்பாட்டுரீதியில் இஸ்லாமிய மதத்தைப் போலவே பௌத்த, கிறிஸ்தவ சமயங்களும் சாதி அமைப்பை அங்கீகரிக்கவில்லை. எனினும் நடைமுறையில் முஸ்லீம்கள் மட்டுமே சாதி அமைப்பை நிராகரித்துள்ளனர். இலங்கையில் பௌத்தர்களும் கிறிஸ்தவர்களும் சாதி அமைப்புடன் சமரசம் செய்து கொண்டு ஒன்றிப் போகிற பண்பையே வளர்த்துள்ளனர்.

18ம் நூற்றாண்டின் கடைக்கூறுகளிலிருந்து 20ம் நூற்றாண்டின் முற்கூறுகள் வரையிலான சிங்கள பௌத்த சமய

அமைப்புக்களை கட்டுப்படுத்துவதற்காக வெள்ளாளர், கரையார் சாதிகளைச் சேர்ந்த குருத்துவ பிரிவினரிடையே இடம் பெற்ற இழுபறிகள் ஒன்றும் பரம இரகசியங்கள் இல்லை.

இந்துமதத்தை சாதிஅமைப்பின் தத்துவ கலாசார காவல் அரண் என்றே கூறவேண்டும். இலங்கையில் கோவில் பூசகர்களாக ஏழைப் பிராமணர்கள் உள்ளனர். பிராமணிய இயக்கம் இலங்கையில் இல்லை. சாதி அமைப்பு இறுக்கமானதாகவும் கொடூரமானதாகவும் பலப்பட்டிருக்கும் யாழ்ப்பாணக் குடா

> சாதி அமைப்பின் கீழ் பிறக்கும் போதே அவனது சமூக, பொருளாதார, கலாசார உறவுகள் நிர்ணயமாகி விடுகின்றன. இங்கு அவனது தெரிவுக்கோ, தனிப்பட்ட மேலோங்குதலுக்கோ இடமில்லை. சாதி அமைப்புப் பரம்பரையானது, மேல் கீழ் எனப் படிமுறை உள்ளதும், தொழில் சார்ந்ததும், கண்டிப்பான சாதி வாரி அகமண விதியும் (சாதிவாரித் திருமணமுறை) சீழ்நிலையில் உள்ளவர்களும்; அவர்களுடனான உணவுப் பரிமாற்றமும் தீட்டுப்படுத்தும் என்ற கருத்தும், இவற்றுடன் தீண்டாமை, இந்து சமய அங்கீகாரம், சாதி அடிப்படையிலான சமூக, சமயச் சடங்குகள், கலாசாரம் என்பவையினாலும் கட்டிக் காக்கப்படுவதாகும்

நாட்டில், பெரும்பான்மையினராகவும், பெரும்பாலான நிலத்திற்கும் ஏனைய வளங்களுக்கும் உடமையாளர்களாகவும், கல்வியில் மேம்பட்டும். சமூக பொருளாதார அரசியல் ஆதிக்கத்தைக் கொண்டிருக்கிறவர்களுமான வெள்ளாளரது இயக்கமான 'யாழ்ப்பாணியமே' உள்ளது. இது தமிழகத்து மேல்வர்க்கப் பிராமணர்களது இயக்கமான பிராமணீயத்துடன் ஒப்பிடக் கூடிய யாழ்ப்பாணத்து உயர்சாதி பிற்போக்கு சமூகசக்தியாகும். தமிழகத்தில் பிராமணர் தொகைரீதியாக மிகமி

இயக்கத்தின் முற்போக்கான அம்சம் அவர்கள் பஞ்சமர்களோடு (தலித்) பஞ்சமர்களது அபிலாசைகளோடு எவ்வளவுக்குச் சம்பந்தபட்டிருந்தார்கள் என்பதைப் பொறுத்தே அமைகிறது.

சலாகம, கரவா, துராவ; இனவாரியாகவும், சாதிவாரியாகவும் சிங்களமயமாகி விட்ட தென் இந்திய சாதிகள். சலாகம தமிழகத்தைச் சேர்ந்த சாலையரின் வம்சாவழியினர் இவர்களில் பெரும்பகுதியினர் டச்சுக்காரர்களால் கறுவாப்பட்டை உரிப்பதற்காக குடிபெயர்த்துக் கொண்டு வரப்பட்டவர்கள்.

## சாதி அமைப்பும் வர்க்க அமைப்பும்

சாதியமைப்பும் வர்க்க அமைப்பும் முரண்பட்ட இரு சமூக நிறுவனங்களாகும். கோட்பாட்டு ரீதியாக சாதிவாரிச் சொத்துடமை, சாதிவாரி உழைப்பின் நிரம்பல் என, சாதி அமைப்பின் சில தொழிற்பாடுகளைப் பிரதியீடு செய்கிற அம்சங்களையும் கொண்டிருக்கின்றது. தனிமனித மேலோங்குதல் வர்க்க அமைப்பில் சாத்தியம்; சாதி அமைப்பில் சாத்தியமில்லை.

கோட்பாட்டு ரீதியாக (குறிப்பாக மார்க்சிய கோட்பாடு) வர்க்க அமைப்பு, மேல்நிலவும் ஆதிக்க அமைப்புக்களைத் தகர்த்துக் கொண்டு மேலோங்கும் புதிய வர்க்கம், தனது ஆதிக்க அமைப்புக்களை உருவாக்கும் வகையில், மேல்நோக்கிப் பெயரும் தன்மை கொண்டது. சமூக வரலாற்றை முன்னோக்கிப் பெயர்ப்பது. கோட்பாட்டு ரீதியாகச் சாதியமைப்போ நிரந்தரத் தன்மை கொண்டது. வரலாற்றை முளையடித்துத் தேங்கவைப்பது. இந்த இரு சமூக நிறுவனங்களின் முரண்பட்ட தொழிற்பாடும், சமரசங்களுமே தென்னாசிய சமூகங்களின் வரலாற்றுப் போக்கை நிர்ணயிக்கிற காரணிகளுள் முக்கியமானவையாகும். இத்தகைய சமரசப் போக்கு நிலவும் மேல்வர்க்கங்களைப் போலவே உருவாகி மேலோங்கும் புதிய வர்க்கங்களும், விரிவடையும் பணித்துறை அமைப்பும், குறிப்பிட்ட ஓரிரு மேல்சாதியினருள் உருவாகுவதையும், நீண்டகாலத்தக்குத் தம்முள் வர்க்கரீதியான மோதல்களைத் தவிர்த்துக் கொண்டு, வரலாற்றுப் போக்கிற்கு மாறாக, சாதிவாரியாக ஓரணிப்படுவதையும் குறிக்கும். இந்நிலை 'வர்க்கமேம்படுதல்', சாதிவாரியாக மேற்படி ஓரிரு உயர்சாதியினருள் மையப்பட்டுத் தொழிற்படுவதை உறுதிப்படுத்தும்.

(வரும்)

நன்றி - நூலகத்திட்டம்



# எதிலிருந்து தொடங்குவது?

**அ.டேவிட் நந்தகுமார்**

சற்று பின்னோக்கிப் போகிற ஒரு யோசனை. ஆற, அமர, ஆடொன்று தான் உண்டதை மீண்டும் இரை மீட்கிற ஒரு விருப்பு.

ஒரு கனவு என்று இதனைச் சொல்ல லாமா? மண்ணில் புதையுண்டு போன சரித்திரம் இதுதானா?

என் நினைவுக்கெட்டிய வரைக்கும் ஒருக்கால் பழைய வாழ்வில், அதன் உயிரில் காலடி எடுத்து வைக்கிறேன்.

கட்டுரையா இது? எனக்குத் தெரியாது. கதையா? நான் அறியேன். நாவலின் சில முகங்களை இது காட்டின், நல்லது.

முன்னர் கிடைத்த அனுபவங்களைச் சொல்லப்புகுகையில் என் அனுபவம் தங்களையும் ஓரளவு தொற்றிக் கொள் ளின், மகிழ்வேன்.

ஆறிக்கொண்டு போகிற புண்ணை சாடையாய் தட்டிப் பாருங்கள் லேசாக வலிக்கும்.

ஒரு வலிதான் இது.
பார், காலம் எங்களைக்காற்றில் தூக்கி எங்கு போட்டிருக்கிறது? திசை தெரி யாது சீவிக்கிறோம்.
முன்னர் எங்கள் திசை ஒழுங்காக இருந் ததா? இருந்தது. இலக்குத் தெரிந்ததா? தெரிந்தது. பயணப்பட்டோமா? ஆம். இடையில் என்ன சிக்கல்? எங்கு சிக் கல்? சிக்கலுக்கான காரணம் யார்?
அல்லது எங்கள் பயணமே பிழையா? தெரியவில்லை; புரியவில்லை.
யாரோடு நோகலாம்? யாருக் கெடுத்து ரைக்கலாம்?

ஒப்பாரி எதற்கு? பிலாக்கணம் எதற்கு? ஊரைக் கூட்டுவானேன்?
எதுவோ நடந்து விட்டது. அதுவே இது!
''தமிழ் மக்கள் நெடுந்துயிலில் ஆழ்ந்தி ருந்த காலம். இடையிடை விழிப்புக் கண்டவர் போல, எழுந்திருந்து வாக் குப் போட்டுவிட்டு வந்து, வாய் ஓயா மல் பேசி, 'தமிழன் என்று சொல்லடா தலை நிமிர்ந்து நில்லடா' எனும் கோஷத்துக்கு ஆட்பட்டு 'கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே முன்தோன் றிய மூத்த குடி' எனும் கோஷத்துக்கு எடுபட்டு, வாக்கு இட்டு, பிறகு வந்து, தமிழ் மக்கள் நெடுந்துயிலில் ஆழ்ந்தி ருந்த காலம். எவ்விதச் செயற்பாடு மின்றி உறைந்து போய்விட்ட நிலை. புறத்தே அழுகி நாற்றமடித்துக் கொண் டிருந்தது. ஆயினும் எவ்விதச் சலனமு மின்றி நீண்ட தூக்கம். இதன் ஆத்மா உள்ளூர அவிந்து போய் விட்டதோ என நினைக்கிற அளவிற்கு மௌன நிலை. அரசியலிலும் இது அடங்கித் தான் கிடந்தது.
ஒரு மந்திரம் போல ஆயுதம். சட்டென விழிப்பு; செயற்பாடு. அசையத் தொடங்கியது. தமிழ்ச்சமூகம் இயங்கத் தொடங்கியது.

ஒருமித்த குரலில் கேள்வி கேட்டார் கள். உரிமை கேட்டார்கள். மறுத்த போது போர் என்றார்கள். பொங்கி எழுந்தார்கள்.

**'காளையர்கள் கருவி தூக்க வந்த னர்; வெல்வதென்று சூளுரைத்தெம் செல்வியர் எழுந்தனர்.'**

திம்புவில் ஒரே குரலில் கோரிக்கை வைத்தனர். மறுத்த போது வெகுண்ட னர். பேச்சுவார்த்தை வேண்டாமென்ற னர். கருவி தூக்கினர்.
அது ஒரு காலம்.
ஆயுதம் தூக்கியவர்கள் இந்தியாவின் கையில் எப்படி சிக்கினார்கள்?

இவர்கள் சிங்கள அரச தலைவர்களின் கையில் அகப்பட்டு அழிந்து போன கதையை யார்தான் நம்ப முடியும்? ஆனால் அது நடந்தது. இவர்கள் இந்தி யப் படையின் ஆதிக்கத்துள் தம் உரி மையை இழந்து முழங்காலிட்டு நிற்பா ரென யார்தான் சொல்ல முடியும். ஆனால் அது அப்படித் தானாயிற்று.

மக்களுக்காக உரிமை கேட்கப் புறப்பட் டவர்கள் எப்படி மக்களையே அழிக்க முடிந்தது? அது அவ்வாறுதான் ஆனது...

ஒரு இயக்கம், இரண்டு இயக்கமல்ல; எல்லா இயக்கமும் தான்.

இவையெல்லாம் பழங்கதை. பழங்க தையா? அல்ல; புதியகதையும்தான். ஆனால் மறக்க முடியாத, மறக்கக்கூ டாத கதை.

பலாலி முகாமிலிருந்து ஒரு காலடி எடுத்து வைக்க முடியாது. சிங்கள இரா ணுவம் திகைப்படைந்த தருணங்க ளைப் படைத்த நமது வீரர்கள் எங்கு போனார்கள்?
கோட்டையைச் சூழ வர உள்ள இடங்க ளில் காவலரண்களை வைத்துப் போர் நடாத்திய நமது அனைத்து இயக்க வீரர்களினதும் தியாகம் எங்கு போயிற்று?

ஞாபகமிருக்கிறதா? தெல்லிப்பழைச் சந்தியை அண்டி, பலாலியிலிருந்தும், காங்கேசன்துறையிலிருந்தும் இராணு வம் வந்து பதுங்கியிருந்த போது ஈ.பி ஆர்.எல்.எவ், ஈரோஸ், ரெலோ புளொட், புலி என அனைத்து இயக்கங் களும் தாக்குதல் நடாத்தி, இராணு வத்தை ஓட ஓட விரட்டியடித்ததை? அதற்குள்ளா மறந்து போயிற்று?

இம்மண்ணில் இந்தியப் படையும் இலங்கை இராணுவமும் எவ்வாறு தமது நச்சுக் கால்களைப் பரப்பின? இதெல்லாம் எவ்வாறு நடந்தது?
புறத்திலிருந்த சக்திகள் மட்டும்தானா இதற்குக் காரணம்?

இரத்தத்தால் கீறப்பட்ட எல்லை இது. இரத்தத்துளிகளால் வாங்கப்பட்ட துப் பாக்கிகள் இவை.

சுதந்திரத்தின் விலை என்ன? கேள்வி கள் கேள்விகளாக இருக்கின்றன. சரி முதலிலிருந்து வருவோம்.

எதிலிருந்து தொடங்குவது? எது இதன் முதற்புள்ளி?

நான் பிறந்திருக்காத, 58 கலவரத்தில் அப்பா, அம்மா பதகளித்துக் களேபரப் பட்ட அந்தப் பதட்டமான இரவிலி ருந்தா?

என் கையை அப்பா பிடித்துப் போய்ப் பார்த்த தமிழராய்ச்சி மாநாட்டில், பொலிஸ், துப்பாக்கியினால் சுட, அப்பா பிடித்திருந்த கையை விடாமல், இருட்டினுள் ஓடுகின்ற போது, வெள்ள வாய்க்காலுக்குள் தடுமாறி விழுந்த, அந்தக் கொடூரமான இரவிலி ருந்தா?

என் சின்னமாமாவுக்கு சிங்களம் படிக் காததனால் வேலை பறிபோக, எதிர்கா லம் என்ன என்ற வினாவுக்கு விடை தெரியாமல் தத்தளித்து அத்தை அழுது அரற்றிய கடும் இரவுகளின் ஓர் இரவி லிருந்தா?

என் அண்ணாக்களைச் சிங்களப் பொலிஸ் கைது செய்து, கொடுமைப்ப டுத்திய அந்த இரவுகளிலிருந்தா?

எதிலிருந்து தொடங்குவது?

நினைவறிந்த -விருத்தெரிந்த நாட்களி லிருந்து இதனைத் தொடங்கலாம். மட் டுப்படாத வயது. புரிந்தும் புரியாத நிலை.

அந்த வயதில் தமிழ் இன உணர்வுதான் நம்மை ஆட்படுத்தியது. தமிழ்தான் நம் மூச்சாக இருந்தது. தமிழைப் பழித்த வனை தாய் தடுத்தாலும் விடேன். இது தான் நமக்கு உவப்பான வசனம். **'த மிழ் படிக்கும் எங்களுக்குத் தமி ழிலை தான் பக்தி - தடுக்க வந்தால் திரண்டு எழும் மாணவர்கள் சக்தி''**
இப்படியெல்லாம் பாடல்கள் வந்தன.

ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் 70 கள் காலப்பகுதியில் இப்பாடல்கள் வானொலியில் தடை செய்யப்பட்டன.

அப்போதுதான் இதன் மீது ஆர்வம் இன்னும் அதிகரித்தது.

**''தமிழுக்கும் அமுதென்று பேர்''** எனும் பாரதி தாசனின் வரி ஏழு ஆண் டுகளாக வானொலியில் ஒலி பரப்ப வில்லை

தமிழின் மீது, தமிழ் அபிமானம் கொண்டவர் மீது, சிறீலங்கா அரசின் சின்னத்தனமான நடவடிக்கைகள் தமிழ் மக்களை ஏதோ ஒரு விதத்தில் உசுப்பி விட்டுக் கொண்டே இருந்தது.

வானொலி நிலையம் இதற்கு மிக அதிர்ச்சியான உதாரணம். 'தமிழ்' எனும் சொல் கொண்ட பாடல்வரிகள் ஒலி பரப்பப்படவில்லை.
தமிழின் மீது மிக மோசமாக தாக்குதல் நடந்து கொண்டிருந்த காலம் 70 கள்.

ஒருபுறம் அரசு அடக்குகின்ற போது மக்கள், இன்னும், இன்னும் தமிழில் காதல் கொண்டார்கள்.

மாவிட்டபுரம் கந்தசாமி கோயில் பூங் காவனத் திருவிழா அன்று கே.பி.சுந்த ராம்பாள் அவர்கள் இசைக் கச்சேரி வைத்தார்.
**''உன் தத்துவம் தவறென்று சொல்ல உன் அன்னையின் தமிழுக்கு உரிமை உண்டு''**

என்று 'திருவிளையாடலின்' 'பழம் நீ அப்பா' பாடல் பாடினார். கைதட்டல் கோபுரத்தின் முகட்டில் முட்டி மோதி எதிரொலித்தது.
தமிழ் நாட்டைச் சேர்ந்த ஒருவர் கூட இலங்கைக்கு வர இயலாது. வந்தா லும், கதிர்காமத்தைத் தரிசித்து விட்டுப் போக வேண்டியதுதான். யாழ்ப்பா ணப் பக்கம் எட்டியும் பார்க்க இயலாது.

தமிழ் மக்களின் விருப்பமான உணவு வகைகள் தடைசெய்யப்பட்டன. முக்கி யமாக மைசூர்ப் பருப்பு காணக் கிடைக் காது.

இதற்கு வேறு அரசியற் காரணங்கள் இருக்கலாம். அது தெரியவில்லை. ஆனால் அரசின் தமிழ் மீதான இனவா தப் போக்கே காரணமெனத் தமிழ் மக் கள் உண்மையில் நம்பினார்கள்.

அரசாங்கத்தின் சார்பாக இருந்த தமிழ் அரசியல்வாதிகள் யாவரும் தமிழினத் தின் விரோதிகள் எனக் கணிக்கப்பட் டார்கள். தமிழ்த் துரோகிகள் என்று அழைக்கப்பட்டார்கள். 'பந்தங்கள்' என்பது செல்லமாகச் சூட்டிய பெயர்.

தமிழ் மக்கள் இவர்கள் மீது காறித் துப் பினார்கள். காறித் துப்பல் இப்படி வெளிப்பட்டது. அளவெட்டியில் வ.பொன்னம்பலம் வீட்டிற்குக் கல்லெ றிந்தார்கள். தெல்லிப்பழையில் த.பூ.மு ருகையாவின் வீட்டுக்கும் கல்லெறி விழுந்தது. உடுவிலில் கு.வினோதனுக் கும் அதுதான் கதி. பாராளுமன்ற உறுப் பினர்களான தியாகராசா, அருளம்ப லம், மார்ட்டின் ஆகியோரும், யாழ்ப் பாண மேயரான அல்பிரட் துரையப்பா வும் பொலிஸ் பாதுகாப்பில் இருந்தார் கள்.

அந்தக் காலத்து யாழ்பாணத்துச் சூழல் இரண்டுங்கெட்டான் சூழல். இளைஞர் களிடம் ஆத்திரம், ஆவேசம் இருந்தது. ஆயுதம் இருக்கவில்லை. என்ன செய் வது என்று கையைப் பிசைந்து கொண் டிருந்தார்கள்.

அதுதான் காலம்.
1974.ஜனவரி.தமிழராய்ச்சி மாநாடு. அரசாங்கத்தின் பலத்த எதிர்ப்பு மத்தி யில் யாழ்ப்பாணத்தில் மாநாடு நடந் தது.

ஒரு பெரும் அனர்த்தமும் அப்போது தான் நடந்தது,

(வரும்)

---

# நாலு வார்த்தை எழுதவிடு

**சூரியா**

## மௌனகுருவின்

## ● மட்டக்களப்பு மரபுவழி நாடகங்களின்

## சமூகத் தளமும் அளிக்கை முறைமையும்

## ● ஈழத்துத் தமிழ் நாடக அரங்கு

## ● சங்காரம் ஆற்றுகையும் தாக்கமும்

மாரி பொழிந்து கொண்டிருக்கின்ற மார்கழிப் பொழுதில் **தேசிய கலை இலக் கியப் பேரவை** இரு நிகழ்வுகளை நடாத்தியது.

**பேராசிரியர் க.கைலாசபதி** அவர்களின் 11வது ஞாபகார்த்த நினைவுப் பேருரை நிகழ்த்தப்பட்டது. ஒரு ஞாயிறு மாலை (26.12.93) **கலாநிதி சி.மௌனகுரு** அவர்களால் **'மட்டக்களப்பு மரபுவழி நாடகங்களின் சமூகத் தளமும் அளிக்கை முறைமையும்'** எனும் தலைப்பில் நினைவுப் பேருரை நிகழ்த் தப்பட்டது.
கைலாசபதி என்கிற விஞ்ஞானபூர்வ அணுகுமுறையை கைக்கொண்ட தமிழ் -பேராசானுக்கு இவ்வாறான நினைவுப் பேருரை பொருத்தமானது.

வெள்ளவத்தையில் தமிழ்ச்சங்கத்தின் சிறிய மண்டபத்தில் சுமார் நூறுபேர் (உட்பட) பார்வையாளராக குழுமியிருக்க, மட்டக்களப்பு மரபுவழி நாடகங்க ளின் பல்வேறு அம்சங்களை அறிய முடிந்தது.

இந்நினைவுப் பேருரை புதிய அனுபவமாகவும் விரிந்து நின்றது. உரையின் பொருள் மட்டுமன்றி, பொருளை வெளிப்படுத்த கையாண்ட சாதனங்கள் உரைப்பொருளை வலிவுபடுத்தின. படத்தைத் தெளிவு படுத்திக் காட்டுகின்ற புரொஜெக்ரர், ஒலிப்பதிவு நாடா, வீடியோ நாடா போன்ற நவீன தொழினுட்ப சாதனங்களின் உதவியுடன் இவ்வுரையினை மௌனகுரு அவர்கள் தயாரித்தி ருந்தார்கள். அதனால் அவர்சொல்ல வந்த விடயம் மிக எளிதாக உட்புகுந்தது.

மரபுவழி நாடகங்களின் சமூகத் தளம் பற்றிய குறிப்பின் போது, சாதி அமைப்பு கள் வெவ்வேறு நாடகங்களின் அம்சங்களை எவ்வாறு வெளிப்படுத்துகின் றன. கோயில்கள் அரங்கிற்கு எவ்வாறு துணைநின்றன போன்ற பல விடயங் களை அறிய முடிந்தது. பேராசிரியர் வித்தியானந்தன், யாழ்ப்பாணத்தை விட்டு விட்டு மட்டக்களப்பை ஈழத்து கூத்து அரங்கின் மீட்டெடுத்தலுக்காக ஏன் பயன்படுத்தினார் எனும் சுவாரசியமான கேள்வியும் எழுப்பப்பட்டது.

அளிக்கை முறை பற்றி உரையாற்றும் போது கூத்தலின் பல்வகைப்பாட்டு அம்சங்களைத் தெரிந்து கொள்ள முடிந்தது. வடமோடி, தென்மோடிக் கூத்துக் களுக்கான வேறுபாடுகள் தெளிவாக விளக்கப்பட்டன.

வடமோடிக்கும் தென்மோடிக்கும் பரவலான வேறுபாடுகள் காணப்படுகின் றன. தாளக்கட்டுகள், பாடல்கள், பாவகைகள், அசையும் நிலைகள், ஆடை கள், ஒப்பனைகள், நாடகப் பொருள்கள் ஆகிய ஒவ்வொன்றிலும் பெருத்த வேறுபாடு காணக்கிடக்கின்றது. ஏன் காலடி எடுத்து வைப்பதில் கூட அதன் துல்லியமான வேறுபாடு வெளித் தெரிகின்றது. அடிப்பாதம் முழுவதும் நிலத் தில் படுமாறு ஆடுவது வடமோடி என்றால் நுனிக்கால்களால் ஆடி நிற்பது தென்மோடி எனலாம். வடமோடிக்கும் தென்மோடிக்கும் வாளின் வடிவத்தில் கூட வேறுபாடு உண்டு. கனமான ஆடையும், கடினமான ஒப்பனையும், இறுக்கமான தாளக்கட்டும் வடமோடிக்குரியவை. தென்மோடி இதிலிருந்து முற்றிலும் எதிர்மாறானது.

இத்தகைய தகவல்களை மௌனகுரு அவர்கள்தான் பாடிக்காட்டியும், ஆடிக் காட்டியும் புரொஜெக்ரர் மூலம் படங்களை எடுத்துக் காட்டியும் ஒலிப்பதிவு நாடாக்களின் மூலம் பாடல்களைத் தொகுத்துக்காட்டியும் உரையை ஆற்றி னார்.

அசாத்தியமான உழைப்பு அவர் உரையில் தெரிந்தது.

இறுதியாக மட்டக்களப்பின் கூத்து ஒன்றினை வீடியோவில் காட்டினார். கூத்து தொடங்குவதற்கு முன்னர், லாம்புடனும், பாய் தலையணையுடனும் பார்வை யாளர் வருவதிலிருந்து, நடிகர்களின் சடங்கு, ஒப்பனை செய்வது, தொடக்கம், கூத்து ஆட்டப்படும் வரையும் வீடியோவில் பார்க்க முடிந்தது.

இது இன்னொரு அனுபவம்.
கலாநிதி சி.மௌனகுரு அவர்களின் இரு நூல்கள் அறிமுக அரங்கு. மார்கழி யின் பூரணை தினத்தன்று (28.12.1993) வெள்ளவத்தை தமிழ்ச் சங்கத்தின் அச்சிறிய மண்டபத்தில் நடைபெற்றது. இரு நூல்களாவன: **'ஈழத்துத் தமிழ் நாடக அரங்கு', 'சங்காரம் ஆற்றுகையும் தாக்கமும்.'**

இவற்றில் முதலாவது நூல் பற்றிய ஆய்வுரையினை கலாநிதி துரை மனோக ரன் அவர்கள். **திரு.அ.ரவி** அவர்கள் நிகழ்த்துவதாக இருந்தது. துரை மனோ கரன் அன்றைய நிகழ்வுக்குச் சமூகமளிக்கவில்லை. உரைக்கு ஓம் என்று ஒப்புக் கொண்டால் தவிர்க்க முடியாத நிர்ப்பந்தங்கள் இல்லாவிடின், வரு வதே அழகானது. மற்றும் அ.ரவியின் உரை ஆய்வுரையாக அமையாது சில அறிமுகக் குறிப்புகளைக் கொடுப்பதாக மாத்திரம் அமைந்தது.

இரண்டாவது நூல் குறித்த ஆய்வுரையினை திரு. **அந்தனி ஜீவா** அவர்கள் **திரு.ந.இரவீந்திரன்** அவர்கள் நடாத்துவதாக இருந்தது. **அந்தனிஜீவா** தன் உடல் நலக்குறைவு எனும் காரணத்தைக் கூறி நூல் பற்றிய ஆய்வுரையினை மேற்கொள்ளவில்லை. வெறுமனே நாடகம் பற்றிய சில குறிப்புகளைக் கூறி னார். **ந.இரவீந்திரனின்** உரை விடயத்தைத் தொட்டது. தொகுப்பு சரியாக அமையாததனால் என்ன கூறி முடித்தார் என்று சொல்வது கடினமாக உள்ளது. உணர்ச்சி வசப்பட்ட நிலையில் பேசுவது இவரது பாணி. அது சில சமயங்க ளில் விடயத்தை அமுக்கி விடுவதும் உண்டு.

நூல்களை வெளியிடுவதும், உரைகளை நிகழ்த்துவதும் என தேசிய கலை **இலக்கியப் பேரவை** இயங்கிக் கொண்டுதான் இருக்கிறது.

நன்றி - நூலகத்திட்டம்



# இலங்கையின் அரசியலமைப்புக்களும் இனப்பிரச்சினையும் - 6

## பௌத்த சிங்கள பேரினவாதமாக மாறிய சிங்கள தேசியவாதம்

இந்த வீர சன்னத்தனைப்போல இன்னும் நான்கு வீரர்கள் எனக்கு உதவியாய் இருந்தால் நான் வெள்ளைக்காரரை எங்கள் தாய்த்திருநாட்டை விட்டுத் துரத்தியிருப்பேன். ''

**கண்டிய தேசிய வீரனான புரான் அப்பு, அரசுக்கு எதிராக கிளர்ச்சி செய்தான் எனக் குற்றம் சாட்டப்பட்ட பட்டு 1848இல் தூக்கிலிடப்பட்ட போது தூக்கு மேடையில் வைத்துக் கூறிய வாசகங்கள் இவை.**

கண்டிய தேசிய வாதம் வளர்ந்த போது அதனை முன்னெடுத்தவர்களாக கற்றோர் குழாம் இருக்கவில்லை. மாறாக தேசியசிந்தனை கொண்டவர்களே தலைமை தாங்கினர். இதனால் கண்டிய தேசியப் போராட்டம் ஆங்கிலேயருக்கு எதிரான முற்போக்கான போராட்டமாக வளர்ச்சியடைந்தது. இலங்கையில் வெள்ளையனே வெளியேறு என்ற கோஷத்தை முன்வைத்து போராட்டம் நடாத்தியவர்களாக கண்டியர்களே விளங்கினர். ஆங்கிலேயருக்கெதிரான மக்களின் போராட்டம் எனக்கூறக்கூடிய 1818ம் ஆண்டு கிளர்ச்சி 1848ம் ஆண்டு கிளர்ச்சி என்பவற்றையும் கண்டியர்களே நடாத்தினர்

கண்டிய மக்களிடையே எழுந்த தேசிய வாதம் கண்டியர்களுக்கு அதிகாரங்களை கையளிக்கின்ற கண்டியர் தேசிய வாதமாக இருந்ததே தவிர மற்றைய தேசிய இனங்களின் மேல் ஆதிக்கம் செலுத்துகின்ற பௌத்தசிங்கள பேரின வாதமாக இருக்கவில்லை. இதனாலேயே அனைத்து தேசிய இனங்களுக்கும் அதிகாரத்தை கையளிக்கின்ற சமஸ்டிக் கோரிக்கையை அவர்கள் முன்வைத்திருந்தனர். ஆனால் பிற்காலத்தில் அபரிதமாக வளர்ச்சியடைந்த பௌத்தசிங்கள பேரினவாதம் கண்டிய தேசியத்தை சிதைத்து பேரினவாத அலைக்குள் அதனையும் இழுத்துக் கொண்டது. இதனால் 1940 இன் பின்னர் கண்டிய தேசியவாதம் என்பது வளர்ச்சியடையவில்லை. பௌத்த சிங்கள பேரினவாதத்தை கண்டியர்களும் ஏற்றுக்கொள்ளும் நிலை தோன்ற ஆரம்பித்தது.

இவ்வாறு பரமவைரிகளாக இருந்த கரையோர சிங்கள மக்களையும். கண்டிய சிங்கள மக்களையும் பௌத்தசிங்கள பேரினவாதம் மூலம் ஓர் அணிக்குள் இணைத்த பெருமை s.w.r.d பண்டாரநாயக்காவையே சாரும். கரையோர சிங்கள உயர்குடும்பத்தில் பிறந்த பண்டாரநாயக்கா, கண்டிய உயர்சிங்கள குடும்பமான ரத்வத்தை குடும்பத்தைச் சேர்ந்த சிறிமாவை திருமணம் செய்ததன் மூலம் இரு தேசியச் சமூகங்களுக்குமான பாலத்தைக் கட்டுவித்தார். தொடர்ந்து கண்டியர்களின் அபிலாஷைகளை பூர்த்தி செய்யும் வகையில் ஆரம்பத்தில் அவர்களின் சமஸ்டிக் கோரிக்கையை முன்னெடுத்தார். ஆனால் பிற்காலத்தில் அச்சமஸ்டிக் கோரிக்கையை இல்லாதொழிக்கும் வகையில் கருத்துக்களைத் தன்னால் உருவாக்கப்பட்ட சிங்கள மகாசபையின் ஊடாகவும் சிங்களத் தேசிய கோஷங்களினூடாகவும், பரப்பினார். இதனால் இரண்டு தேசிய இனங்களாக இருந்தவை பௌத்தசிங்கள, பேரின வாதத்தின் சிந்தனையின் கீழ் ஒன்று சேர்ந்தன. இவ் ஒன்று சேர்ந்த சிங்களத் தேசிய இனத்தின் தலைமையினை கற்றோர் குழாம் கைப்பற்றிக் கொண்டது.

சிங்களத் தேசிய இனங்கள் இவ்வாறு ஒன்று சேர்ந்த அதேவேளை இலங்கைத் தமிழர்கள், இந்தியத் தமிழர்கள், முஸ்லீம்கள் ஆகிய மூன்று இனத்தைச் சேர்ந்தவர்களும் தமிழ் பேசும் மக்கள் என்றரீதியில் ஒன்றுசேரக்கூடிய நிலை இருந்தது. ஆனால் அன்றைய காலகட்டத்தில் ஆதிக்கம் செலுத்தியிருந்த இலங்கைத் தமிழ் கற்றோர் குழாம் இதனைச் சின்னாபின்னமாக்கியது. மற்றைய இரு இனங்களின் சமத்துவத்தை அங்கீகரிக்காது அவ்வினங்களை ஒடுக்குவதில் இவர்கள் முன்னின்றனர் பௌத்த சிங்கள பேரினவாதம் அவ்வினங்களை ஒடுக்கமுற்பட்ட போதெல்லாம் இவர்களும் அதற்குத் துணை போயினர். 1940களில் இந்திய வம்சாவழியினரை வேலையிலிருந்து நீக்கும் சட்டங்களை இயற்றி வேலையிலிருந்து நீக்கிய போது இவர்களும் அதனை ஆதரித்தனர். 1948ம் ஆண்டு பிராஜாவுரிமைச் சட்டம் கொண்டுவரப்பட்ட போது தமிழர்களின் தலைவராக இருந்த **ஜி.ஜி.பொன்னம்பலம் அதனை ஆதரித்திருந்தார். பிரஜாவுரிமைச்சட்டம் தொடர்பான ஆலோசனைகளை வழங்கியவர்களில் ஒருவராக கந்தையா வைத்தியநாதன் விளங்கினார்** என்றும் பேசப்படுகின்றது.

இவ்வாறு இவர்கள் செயற்படுவதற்கு அன்றைய காலகட்டத்தில் இலங்கைத் தமிழர்களைவிட இந்தியத்தமிழர் அதிகளவில் இருந்தமையும் ஒரு காரணமாக இருந்திருக்கலாம். (இலங்கைத் தமிழர் -12% இந்தியத் தமிழர் 13%)

இச்செயற்பாடுகள் தொடர்பாக எஸ்.ஜே.வி.செல்வநாயகமும், அவரது தமிழரசுக்கட்சியும் விதிவிலக்காக இருந்த போதும் கூட இந்திய வம்சாவழித் தமிழர்களையும் தமிழ்த்தேசிய வாதத்திற்குள் இணைப்பதற்கான முயற்சிகளையோ, திட்டங்களையோ அவர்களும் மேற்கொள்ளவில்லை.

முஸ்லீம்கள் தொடர்பான தமிழ்த் தலைவர்களின் நிலையிலும் இவ்வாறான நிலையே காணப்பட்டது. ஆரம்பகாலங்களில் தமிழரசுக்கட்சி தமிழ்த்தேசியத்தை முன்னெடுத்தபோது வடக்கு கிழக்கு முஸ்லீம்கள் அதற்குபலமான ஆதரவினைக் கொடுத்திருந்தனர். இவ் ஆதரவினை அடிப்படையாக வைத்து முஸ்லீம்களின் தனித்துவத்தைக் சமத்துவ அடிப்படையில் அங்கீகரித்து தமிழ் பேசும் மக்கள் என்ற வகையில் தமிழ்த் தேசியத்திற்குள் அவர்களை இணைத்திருக்கலாம். ஆனால் அதற்கான முயற்சிகள் நடைபெறவில்லை. விளைவு முஸ்லீம்களும் தமிழ்த்தேசியத்திலிருந்து பிரிந்து போனார்கள்.

இதனால் மூன்று இனங்களையும் இணைத்து தமிழ் பேசும் மக்கள் என்ற வகையில் வளர வேண்டிய தமிழ்த் தேசியம் இன்று சிங்கள, தமிழர்களின் தேசியமாக மட்டும் வளர வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு தள்ளப்பட்டது. அதனால் ஏற்பட்ட துயரம் தோய்ந்த நிகழ்வுகளை இன்றுவரை தமிழ்த்தேசிய இனம் அனுபவித்து வருகின்றது. சிங்கள பௌத்த பேரினவாதம் முஸ்லீம்களை தமிழ்த்தேசிய இனத்திற்கு எதிராக திருப்பி விடுவதில் வெற்றி கண்டு வருவதோடு தமிழ்த் தேசிய வாதம் குறுமின வாதமாக வளர்ந்து வருகின்றது என சர்வதேசரீதியாக எழுச்சியடைகின்ற குற்றச்சாட்டுக்களையும் ஏற்க வேண்டியுள்ளது.

தமிழரசுக்கட்சி முஸ்லீம்களை இணைப்பதில் தோல்விகண்டிருந்தாலும் யாழ்ப்பாணம், வன்னி, மட்டக்களப்பு என பிரதேசரீதியாக பிளவுபட்டிருந்த தமிழ் மக்களை பலவீனமான நிலையிலாவது ஐக்கியப்படுத்துவதில் வெற்றிகண்டுள்ளது என்றே கூற வேண்டும் - தமிழரசுக்கட்சியும், அதன்வழிவந்த தமிழர் விடுதலைக்கூட்டணியும் பல்வேறு காட்டிக்கொடுப்புகளுக்கு மத்தியிலும் உருப்படியாக செய்த பணி இது ஒன்றுதான்.

0 0 0

தமிழ்த்தலைமைகள் இந்திய வம்சாழியினரை. இரண்டாந்தர பிரஜைகளாக கருதியநிலையும் இந்திய வம்சாவழி மக்கள் மீதான தொடர்ச்சியான பேரினவாத ஒடுக்குமுறையும் அவர்கள் மத்தியிலிருந்து தனியான தேசியத் தலைமை தோன்றுவதற்கான நிலைமைகளை உருவாக்கியிருந்தது. இத்தேசியத் தலைமையின் உருவாக்கம் 30களின் பிற்பகுதியில் இந்திய வம்சாவழியினருக்கு எதிரான ஒடுக்குமுறை உச்சநிலையில் இருந்த போதே ஆரம்பமாகியது. இதற்கு முன்னர் 1920களின் ஆரம்பத்தில் பொன்னம்பலம் அருணாசலமும் பெரி சுந்தரமும் சேர்ந்து இவர்களுக்கு தலைமை கொடுக்க முற்பட்டனர். இத்தலைமை வளர்ந்திருக்குமானால் தமிழர்களுக்கென ஒரு பொதுத்தலைமை உருவாகக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டிருக்கும். ஆனால் துரதிர்ஷ்டவசமாக 1923இல் பொன்னம்பலம் அருணாசலம் மரணமுற்றதால் இதுவளர முடியவில்லை. பின்வந்த தமிழ்த்தலைமைகள் எவரும் அருணாசலத்தைப் போல தூரநோக்குடையவர்களாகவோ, முற்போக்கானவர்களாகவோ இருக்கவில்லை.

இடைக்காலத்தில் நடேசையர் இவர்களுக்குத் தலைமை தாங்கினர். இவரும் அருணாசலமும் கொழும்புவாழ் இந்திய வர்த்தகர்களைப் பற்றிக் கவனத்தில் எடுக்காது மலையக மக்களை மட்டும் கவனத்தில் எடுத்ததால் கல்வியறிவற்ற அவர்களுக்கு சிறப்பான தலைமையைக் கொடுக்க முடிந்தது. இவ் இருவரிலும் நடேசையரைப் போல மலையகத் தொழிலாளர்களை நேசித்த ஒருவர் இதுவரை கிடையாது என்றே கூற வேண்டும். அவ்வளவுதூரம் அடக்குமுறைகளை எதிர்த்துப் போராடி மலையக மக்கள் மத்தியில் தொழிலாளர் சங்க இயக்கத்தை வளரச் செய்தவர். அருணாசலம் தொழிற்சங்க இயக்கத்தை மலையகத்தில் அறிமுகம் செய்து வைத்தாலும் அதனை வளர்ச்சியடையச் செய்தவர் நடேசையரேயாவர். எனினும் நடேசையர் மலையக மக்களை தொழிலாளர் என்ற வகையில் பார்த்தாரே தவிர இந்தியர்கள் என்ற வகையில் அவர்கள் ஒடுக்கப்படுவதையோ, இவ் ஒடுக்குமுறையினூடாக இந்திய தேசியம் ஒன்று வளர்ந்து வருவதையோ அவதானிக்கவில்லை. இவருடைய கவலையீனத்தை கோல்புறாக்கின் கட்டற்ற வர்த்தகத்தினால் உருவான இந்திய வர்த்தகத் தலைமை நன்கு பயன்படுத்திக் கொண்டது. நடேசையரினால் மிகவும் சிரமப்பட்டு தொழிற்சங்க அரசியலுக்கு அணிதிரட்டப்பட்ட மக்கள் மத்தியில் கொழும்பில் உருவான இவ்வர்த்தகத் தலைமையிலான இலங்கை இந்திய காங்கிரஸ் மிக இலகுவாக தனது தலைமையை நிறுவிக் கொண்டது. 1947 தேர்தலில் இத்தலைமை இந்தியத் தேசியத்தையும் தனது பணபலத்தையும் பயன்படுத்தி வெற்றி கண்டதோடு நடேசையரை தோற்கடிக்கச் செய்து மலையக அரசியலில் இருந்து அவரை ஒதுக்கித் தள்ளியது.

மலையக இந்திய வம்சாவழித் தமிழர்களின் தலைமையைக் கைப்பற்றிக் கொண்ட வர்த்தகத் தலைமை மலையகத்தில் அதிகாரத்தை நிலைநாட்டுகின்ற மலையகத் தேசியம் ஒன்று வளர்வதை இன்றுவரை தடை செய்து வருவதோடு கொழும்புவாழ் இந்திய வர்த்தகர்களின் நலன்களுக்காக மலையக மக்களை காட்டிக் கொடுத்தும் வருகின்றது. தனது இருப்புக்காகவும், மலையகத் தொழிலாளர்களின் சந்தாப்பணத்துக்காகவும் மலையக மக்களின் பால் அக்கறையுள்ளதுபோல நடித்துக் கொண்டு நடைமுறையில் மலையக மக்களுக்கு எதிரான நிலைப்பாட்டையே எடுத்துவருகின்றது. 1967ம் ஆண்டு சிறிமா - சாஸ்திரி ஒப்பந்த அமுலாக்கச் சட்டம் கொண்டுவரப்பட்ட போது திரு. தொண்டமான் அதனை ஆதரித்தமை இதற்கு நல்ல உதாரணமாகும். மறுபக்கத்தில் அரசுடனான தனது பேரம் பேசலுக்கு மலையகத் தொழிற்சங்க பலத்தையும், மலையக வாக்குப் பலத்தையுமே பலன்படுத்தி வருகின்றனர். அண்மையில் கூட தொண்டமான் தனது பலத்தினைக் காட்டுவதற்கு மலையக மக்கள் செறிவாக வாழ்கின்ற மத்திய மாகாண சபையையே பயன்படுத்த முனைந்திருந்தார்.

முஸ்லீம்களின் தலைமையைப் பொறுத்தவரையிலும் கூட ஆங்கிலக் கல்வியினாலும் கட்டற்ற வர்த்தகத்தின் அறிமுகத்தினாலும் முன்னணிக்கு வந்தவர்களே தலைமைப் பொறுப்பை ஏற்றுக் கொண்டனர். இதனால் இவர்களும் முற்போக்கான முஸ்லீம் தேசியம் ஒன்றை உருவாக்குவதற்கான பங்களிப்பைச் செய்ய முடியவில்லை. முஸ்லீம்களுக்கு ஆரம்பத்தில் தலைமை வகித்த சி.அப்துல் ரகுமான், A.M.ஷரீப், W.M. அப்துல் ரகுமான் N.H.M. அப்துல் காதர், J.B. ஜயா போன்றவர்களோ பிற்காலத்தில் தலைமை வகித்த காரியப்பர், மஜீத், மன்சூர், முகமட், ஹமீட் போன்றவர்களோ இதற்கு விதிவிலக்காக இல்லை. இவர்கள் அனைவரும் ஆரம்பத்தில் ஆங்கிலேயே காலனித்துவ நலன்களுக்கும், பிற்காலத்தில் பௌத்த சிங்கள பேரினவாத நலன்களுக்கும் முஸ்லீம்களின் நலன்களைத் தாரைவார்க்கும் பணியிலேயே ஈடுபட்டனர்.

முஸ்லீம் காங்கிரஸ் இதிலிருந்து சற்று மாறுபட்டதாக இருந்தது. பேரினவாதத்தின் ஒடுக்குமுறையினாலும், தமிழ்த் தேசியவாதத்தில் தலையெடுத்த இனவெறி ஒடுக்குமுறையினாலும், எழுச்சியுற்ற முஸ்லீம் தேசியவாதத்திற்கு அது தலைமை கொடுக்க முன்வந்தது. ஆயினும் விரைவிலேயே அதுவும், சமரசத் தன்மையும் பேரினவாத அரசின் நலன்களுக்கு முஸ்லீம் தேசியத்தை தாரைவார்க்கும் போக்கையும் வெளிக்காட்டத் தொடங்கி விட்டது. முஸ்லீம்களின் மத்தியில் எழுச்சியடைந்த முஸ்லீம் தேசியவாதத்தை முற்கோக்கான தேசியவாதமாக வளர்த்துச் செல்வதிலேயோ ஒடுக்குமுறைக்கு எதிராக விடாப்பிடியான போராட்டங்களை நடாத்துவதிலேயோ முஸ்லீம் காங்கிரஸ் அக்கறை கொண்டுள்ளதாகத் தோன்றவில்லை.

(வரும்)

## செம்பாட்டான்

### வாழ்வின் மதிப்பீடு

இனியும் இங்கு
மூச்சுவிட முடியுமெனத் தோன்றவில்லை!
''சுதந்திரம்'' பற்றி நான் படித்த
பாடப் புத்தகமெல்லாம்
எரித்து கணநாளாயிற்று!
காக்கை, குருவி ஒற்றுமைக் கதையெல்லாம்
கற்பனைக் கதையுமாயிற்று!

எரிகின்ற தேசம் அணையவில்லை
இன்றும் அணையவில்லை!
புயல் வந்ததுதான் மிச்சம்
சேதம்தான் அதிகம்.

வெட்டியதையும் சுட்டதையும்
கடித்துக் குதறியதையும்;
விதவையானவர்களையும்
புதைந்து போனவர்களையும்
சுமக்கவும் முடியவில்லை!
ஒன்றுமட்டும் உண்மை!
இரத்தம் இங்கு காயாது!
மூச்சு விடவும் முடியாது!!

எம்-பௌஸர்

நன்றி - நூலகத்திட்டம்



எம்பிலிப்பிட்டிய மத்திய மகாவித்தியாலயத்திலிருந்து 1989ம் ஆண்டு காணாமல் போன மாணவர்களது சடலங்கள் அண்மையில் சூரியகந்தை என்ற இடத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இந்த மாணவர்கள் கொல்லப்பட்டு புதைக்கப்பட்ட இடம் பற்றிய விபரங்களும், வரைபடமும் உள்ளடக்கிய ரகசியத்தகவல் பத்திரிகையாளர் ஒருவருக்கு கிடைத்தது. அதேநேரம் அத்தகவல் எதிர்க்கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் கிடைத்ததை அடுத்து இரத்தினபுரி மாவட்டத்தில் எம்பிலிபிட்டிய பிரதேசத்தில் உள்ள சூரிய கந்தை எனும் இடத்தில் குறித்த பகுதியை தோண்டியதில் பல மண்டை ஓடுகளும் எலும்புகளும் கிடைத்துள்ளன.

இந்தக் காலப்பகுதி (1987-1989) ஜே.வி.பிக்கெதிரான இராணுவ நடவடிக்கைகள் மேலோங்கியிருந்த காலப்பகுதி. இதனால் பல இளைஞர்கள் கடத்தப்பட்டார்கள்; காணாமல் போனார்கள்; டயர்களுக்கு இரையானார்கள்; ஆற்றில் மிதக்கக் காணப்பட்டார்கள் துப்பாக்கிகளுக்கு இரையானார்கள். ஒரு லட்சத்துக்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டார்கள் என நம்பப்படுகிறது. ஏறத்தாழ 60,000 இளைஞர்கள் கொல்லப்பட்டுள்ளதாக அரசசார்பற்ற மனித உரிமை அமைப்புகள் பல தெரிவிக்கின்றன. கைது செய்யப்பட்டோரில் 22,242 பேர் இன்னும் விடுதலை செய்யப்படாமல் உள்ளார்கள். காணாமல் போன ஆயிரக்கணக்கான இளைஞர்கள் பற்றிய தகவல்கள் எதுவும் இல்லை.

பலமுக்கிய அரசியல் தலைவர்கள், வேறும் முக்கியஸ்தர்கள் பலர், தங்கள் எது சொந்த விரோதங்களுக்காக பழிவாங்கும் நல்ல தருணமாக அக்காலப்பகுதியைப் பயன்படுத்தினர். கொல்லப்பட்டவர்களில் ஜே.வி.பி.யினரைவிட ஜே.வி.பி.யுடன் எவ்வித தொடர்புமில்லாத இளைஞர்கள் அதிகம் என பின்னைய தகவல்கள் பல நிரூபித்தன.

1989 இறுதியில் ஜே.வி.பி.யினது நடவடிக்கைகள் முற்றாக அடக்கப்பட்ட வேளை 1990 ஆரம்பத்தில் பல பெற்றோர்கள் தங்களது பிள்ளைகளைத் தேடி அலைய ஆரம்பித்தனர், இன்னமும் தேடிக் கொண்டிருக்கின்றனர்.

எம்பிலிப்பிட்டியாவில் காணாமல் போன மாணவர்களின் பெற்றோர்கள் பின்னர் ஒன்றிணைந்து 'எம்பிலிப்பிட்டிய -காணாமல் போன மாணவர்கள் பெற்றோர் சங்கம்' என ஒரு அமைப்பை உருவாக்கி அரசுக்கு 1990ஆம் ஆண்டு தொடக்கம் அழுத்தத்தைக் கொடுத்து வந்தனர். பல மனித உரிமைகள் அமைப்புகளுக்கும் அரச தலைவர்களுக்கும் அடிக்கடி முறையிட்டனர். பின்னர் தான் மனித உரிமைக்குழுக்கள் பல இச்சம்பவம் தொடர்பாக விசாரிக்குமாறு அரசைக் கோரின. இதனால் பத்திரிகைகளும் இது தொடர்பான செய்திகளை வெளியிடத் தொடங்கின. 'மனித உரிமைகளுக்கான நடவடிக்கைக்குழு' (Human Rights Task Force -HRTF) வின் அறிக்கையில் கூட இப்பிரச்சினையை விசாரிக்க குழு ஒன்றினை அமைக்குமாறு சிபார்சு செய்யப்பட்டிருந்தது. எனினும் அரசு எள்ளவும் இப்பிரச்சினையைப் பற்றி அக்கறை கொள்ளவில்லை.

எம்பிலிப்பிட்டிய காணாமல் போன மாணவர் பெற்றோர் சங்கத்தின் செயலாளர் எஸ்.எம்.சந்திரபால, இறுதியாக 1993 டிசம்பரில் ஜனாதிபதிக்கும், பிரதமருக்கும் மீண்டும் ஒருமுறை இது தொடர்பாக விசாரணை செய்யுமாறு கோரிக்கை விடுத்திருந்தார். மூன்று வாரங்களின் பின்னரும் பதில் கிடைக்காமல் போகவே அவர் தனக்குத் தெரிந்த சில தகவல்களுடன் சில பத்திரிகையாளர்களை தொடர்பு கொண்டார். இதற்கிடையில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியைச் சேர்ந்த ஒருவருக்கும் காணாமல் போன மாணவர்கள் கொல்லப்பட்டு புதைக்கப்பட்டது பற்றிய இரகசியங்கள் அடங்கிய வரைபடம் ஒன்று கிடைத்தது. இதனால் அரச சார்பற்ற பத்திரிகைகளை இம்மாதம் 3ம் திகதி விடியற் காலை 4.00 மணிக்கு எதிர்கட்சி தலைமை காரியாலயத்தில் ஸ்ரீ.ல.சு.க கூட்டியிருந்தது.

இவ்விடயம் தொடர்பான முழுமையான விபரங்களை கண்டுபிடிக்கும் வரை இரகசியமாக இத் தகவல்களைப் பேணும்படி ஸ்ரீ.ல.சு.கட்சி பத்திரிகை ...ர்களை அறிவுறுத்தியிருந்தது.


குறிப்பிட்ட பத்திரிகை நிருபர்கள் மேல் மாகாண சபை முதலமைச்சர் திருமதி சந்திரிகா குமாரணதுங்க தலைமையில் 3ம் திகதி காலை 4.30க்கு சூரியகந்தயை நோக்கிப் புறப்பட்டனர்.

சூரியகந்த மலைஉச்சியில் ரூபவாஹினி நிலையத்தின் உயர்ந்த கோபுரம் ஒன்றும், தொலைத்தொடர்புக் கோபுரம் ஒன்றும் உள்ளது. இது ஜே.வி.பி.யினால் தாக்கப்படலாம் என்று கருதிய அரசாங்கம் இவற்றை பாதுகாப்பதற்காகவே அருகில் இராணுவமுகாம் ஒன்றினை அமைத்திருந்தனர். (இவ் இராணுவ முகாம் 1990க்கு பின் கலைக்கப்பட்டது) மலையின் கிழக்கு மூலையில் இருந்து சிங்கராஜ வனம் தொடங்குகிறது. இந்த கோபுரத்திற்கு அண்மையிலேயே புதைக்கப்பட்டிருப்பதாக அறியக் கிடைத்தது. இவ்விடத்திலேயே தோண்டுகின்ற வேலை ஆரம்பமானது.

## சம்பவத்தின் பின்னணி

எம்பிலிப்பிட்டிய மத்திய மகா வித்தியாலயத்தின் அதிபர் தயானந்த கலப்பத்தி. 1989 ஆம் ஆண்டில் கலப்பத்தியின் மகனும் அதே பாடசாலையில் உயர்தர வகுப்பில் கல்வி கற்று வந்துள்ளார். இப்போது இவர் இராணுவத்தில் உள்ளார். இந்த பாடசாலையில் அதிபரின் மகனுக்கு சார்பான ஒரு கோஷ்டியொன்றும் அவர்களுக்கு எதிராக இன்னொரு மாணவர் கோஷ்டியொன்றும் இயங்கியுள்ளது. அதிபரின் மகனுக்கும் சப்ரமுவா மாகாணசபை உறுப்பினர் ஒருவரின் மகளுக்கும் இடையில் இருந்த காதல் தொடர்பு பற்றிய கடிதம் எதிர் கோஷ்டிக்கு கிடைத்த போது அதனை அவர்கள் அம்பலப்படுத்தியுள்ளனர். இதனால் இரு கோஷ்டிகளுக்கு மிடையில் கோஷ்டி மோதல் ஏற்பட்டுள்ளது.

அதே வேளை பாடசாலையில் நடந்த வேறு சில பிரச்சினைகள் காரணமாக எதிர் கோஷ்டி மாணவர்கள் உட்பட பல மாணவர்கள் பகிஷ்கரிப்புப் போராட்டம் நடத்தியுள்ளனர். இந்த மாணவர்களுடன் ஏற்கனவே மகனது பிரச்சினைகளில் வெறுப்படைந்திருந்த ஆளுங்கட்சி செல்வாக்கு மிக்க அதிபர் தயானந்த கலபத்தி இந்த தருணத்தை பயன்படுத்தி இம்மாணவர்கள் ஜே.வி.பி என முத்திரை குத்தி இராணுவத்திடம் காட்டி கொடுத்துள்ளார். இதனால் அதனுடன் தொடர்புடைய சகல மாணவர்களையும் 1989 இறுதிப்பகுதியில் இராணுவத்தினரும் பொலிஸாரும் கடத்திச் சென்றுள்ளனர். மாணவர்களின் பெற்றோர்கள் தங்களது பிள்ளைகள் எங்கே என பிடித்துச் சென்றவர்களிடம் விசாரித்த போது அப்படி யாரையும் தாங்கள் கொண்டு செல்லவில்லை என இராணுவத்தினரும் பொலிஸாரும் மறுத்துள்ளனர்.



31 மாணவர்களில் ஒரு பகுதியினர்.

எம்பிலிப்பிட்டிய மத்திய மகாவித்தியாலயத்தில் அந்தக் காலப்பகுதியில் கடமையாற்றிய பெயர் குறிப்பிட விரும்பாத ஆசிரியர் ஒருவர் இதுபற்றி குறிப்பிடும் போது 'கோஷ்டி மோதல் நடந்த போது பாடசாலை நிர்வாகம் அச்சம்பவத்தை விசாரிக்கவென்று ஒழுங்குக் குழுவொன்றினை நியமித்தது குழுவுடன் என்னையும் நியமித்தனர். நாங்கள் விசாரணை செய்து கொண்டிருந்த போது பிரச்சினைக்குரிய காலப்பகுதியாகையால் பாடசாலைகள் அடிக்கடி மூடப்பட்டன. இதனால் ஒழுங்கு விசாரணைக்குழுவின் விசாரணையை ஒழுங்காக நடாத்த முடியவில்லை. இப்படியிருக்கும் போது திடீரென்று குறிப்பிட்ட சம்பவத்துடன் தொடர்புடைய மாணவர்கள் காணாமல் போக ஆரம்பித்தனர்.....!'' என்றார்.

இதற்கிடையில் அதிபர் கலப்பத்தி தற்போது பதவி உயர்வுடன் கூடிய இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். மாணவர்கள் கொலை செய்யப்பட்ட விபரங்கள் வெளிவரத் தொடங்கவே அவர் மிரட்டல் தொனி கலந்த எச்சரிகைகள் விடுத்துள்ளார். ஒரு கட்டத்தில் இவர் தன்னை சிக்கலில் மாட்டிவிட்டால் சகலரையும் காட்டிக் கொடுப்பதாக ஆளுங்கட்சி மேல் மட்ட அரசியல் வாதிகளை -மிரட்டியுள்ளார். (இச்சம்பவத்துடன் கர்னல் லியனகே மற்றும் இரத்தினபுரி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் இளைஞர் விவகார விளையாட்டுத்துறை அமைச்சருமான நந்தா மத்தியு போன்றோருக்கும் தொடர்பு உள்ளது என சிங்கள பத்திரிகைகள் வெளியிட்டு வருவது குறிப்பிடத்தக்கது.)

இன்னொரு தடவை அதிபர் ''பிள்ளைகள் போகும் போது சவப்பெட்டி இல்லாமல் போனார்கள் ஆனால் சூரியகந்தையை தோண்டுபவர்கள் இப்போதிருந்தே 30 அல்லது 40 சவப்பெட்டிகளை ஆயத்தம் செய்து கொள்ளுங்கள்'' என்றும் கூறியிருக்கிறார்.



அதிபர் கலப்பத்தி



கர்னல் லியனகே



கலப்பத்தியின் மகன்

ஆரம்பத்தில் ஒரு இடத்தில் துப்பாக்கி தோட்டாக்கள் கிடைத்த போது அந்த இடத்தில் தோண்டப்பட்டது. இருப்பினும் ஏமாற்றமும் சோர்வுமே மிச்சமாகி 'இது ஒரு பொய்யான தகவலோ' என எண்ணிய வேளை பாராளுமன்ற உறுப்பினர் தி.மு.ஜயரட்ன ''அதோ ஒரு இடத்தில் மண்ணுள் பழைய புற்கள் வெளித்தெரிகின்றது. அதைத் தோண்டிப் பார்ப்போம்'' எனக் கூறவே, ஏழு அடி கொண்ட அலவாங்கினை எடுத்து அந்த இடத்தில் ஓங்கி குத்திய போது 5 அடி ஆழம் வரை உள்ளே போனது. வெளியே அலவாங்கை எடுத்த போது அலவாங்கின் நுனியில் வெள்ளை நிறத்தில் ஏதோ ஒரு பதார்த்தம் தெரிந்ததுடன் நாற்றமும் அடித்தது. அப்போது ஒருவர் ''இது ஒரு பழைய மலசலக்குழியாக இருக்கலாம்'' என கூறினார். ஆயினும் இன்னொருவர் ஆள் நடமாட்டமற்ற இப்பகுதியில் மலசலகூடம் எவ்வாறு எனக் கேள்வியெழுப்பினார். தொடர்ந்து தோண்டும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. மண்டை ஓடுகளும் எலும்புக்கூடுகளும் கிடைத்தன.


மீட்கப்பட்ட ஒரு எலும்புக் கூட்டுடன் கிடைத்த சாரம் ஒன்றினை பார்த்த பெற்றார் ஒருவர் இதுதான் என் மகன் ஆயுதம் தாங்கிய படையினரால் அழைத்துச் செல்லப்பட்ட போது அணிந்திருந்த சாரம் என அலறினார்.

இன்னொரு குழியைத் தோண்டிக் கொண்டிருந்த குழுவினர் 'இதோ ஒரு கை' எனக் குரல் கொடுக்கவே அந்த திசையை நோக்கி எல்லோரும் சென்றனர். அப்போது 11.30 மணி இருக்கும். அதே இடத்தில் தோண்டும் வேலை தொடர்ந்தது. இதோ ஒருதலை, சதையுடன் உடல், செருப்பு, சாரம், காற்சட்டை, பேனை இன்னுமொரு தலை, தலை இப்படிக் கிடைத்த வண்ணமிருக்கவே ஒரு கட்டத்தில் அவ்வேலையை நிறுத்துவது என முடிவு செய்தனர். பின்னர் எம்பிலிப்பிட்டிய நீதிவான் பீ. ரண சிங்க மற்றும் வழக்கறிஞர்கள். எஸ்.ஏ. பிரேமரட்ன வழக்கறிஞர் திருமதி. பவித்ரா வன்னி ஆராச்சி என்போரும் அழைக்கப்பட்டனர்.

இதனைக் கேள்வியுற்ற பொலிஸ் அதிகாரியும் குறிப்பிட்ட இடத்துக்கு வந்து தமது அனுமதியின்றி எலும்புக்கூடுகளை தோண்டியதற்காக ஆட்சேபம் தெரிவித்தார். இருப்பினும் உடனே ஒருவர் அவர் முன்னிலையில் அறிக்கை ஒன்றை எழுதி சமர்ப்பித்தார். பின்பு மீண்டும் நீதிபதி முன்னிலையில் குழிகளைத் தோண்டும் வேலைகள் ஆரம்பமாகின. இன்னும் பல எலும்புகள் சகிதம் பாதி அழுகிய நிலையில் உடல்கள் கிடைத்தன.

3ம்திகதி மொத்தமாக 12 சடலங்கள் மீட்கப்பட்டதுடன் பல எலும்புகளும் உடைகளும் மீட்கப்பட்டன. இவற்றைக் கொண்டு மொத்தம் 20 பேர் சடலமாக இருக்கலாம் என்று கூறக்கூடிய நிலை இருந்தது. இருட்டாகிக் கொண்டிருந்த படியால் நீதிவான் தோண்டும் வேலைகளை இடைநிறுத்தக் கட்டளை இட்டதுடன் 8ம் திகதிக்கு தோண்டும் வேலைகளை ஒத்திவைத்தார். அதுவரை குழிகளை பாதுகாக்குமாறு கொலன்ன பொலிஸுக்கு உத்தரவிட்டார்.

அடுத்தநாள் சகல பத்திரிகைகளிலும் செய்திகள் வெளிவரத் தொடங்கின. அத்துடன் எதிர்கட்சிகள் இதனை விசாரிக்க ஆணைக்குழுவொன்றை நியமிக்குமாறு அரசினைக் கோரினர். ஆனால் 5ம் திகதி அரசு அக் கோரிக்கையை நிராகரித்தது. அரசு தரப்பில் ஆரோக்கியமான பதில் எதுவும் சம்பவம் பற்றித் தரப்படவில்லை. அத்துடன் 7ம் திகதி குற்றப்புலனாய்வு பணியகத்தினரால் இது தொடர்பான செய்திகளை வெளியிட்ட பத்திரிகைகள் அனைத்தும் விசாரணைக் குள்ளாக்கப்பட்டன. சில பத்திரிகைகள் தொலைபேசி மிரட்டல்களுக்குள்ளாகின. இத் தேடுதல் நடவடிக்கை



களில் முன்னின்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களும் மாகாண சபை உறுப்பினர்களும் கூட மிரட்டல்களுக்கு உள்ளாகினர்.

சூரிய கந்த சம்பவம் பற்றிய விவரணம் ஒன்றினை பி.பி.சி தொலைக்காட்சி சேவை வெளிநாடுகளில் 5ம் திகதி அன்று 10 நிமிட நேரம் ஒளிபரப்பியது.

8ம் திகதி அன்று 4... கந்த போவதற்காக ... லயத்தில் பத்திரிகை... கூடினர். அரசாங்க... பிரச்சினைக்குள்ளா... றெண்ணியே பத்தி... யை பயன்படுத்தி... வெளிக்கொணர மு... போல் எதிர்க் சி.ல.சு...

...ளைப் பயன்படுத்தி... வெளிக்கொணர்ந்து... படுத்தலாம் என்ற... செயற்பட்டது.

எதிர்கட்சித் தலை... லிருந்து பி.பி.சி ... இன்னும் சில சா... சாதன துறையினரும்... ரிகையாள... சென்றோம். அரசின்... ணையைத் தொடர்... பற்றி முக்கிய தமிழ்... திகள் வெளியிடுவ... கொண்டது.

இது தொடர்பான சி... மைபோல ரொய்ட்ட... காட்டித்தான் த...

## உண்மைகளுக்கான ஆதார...

இவையாவையும் வைத்துப்பார்க்கும் போது பல விடயங்க... சூரியகந்த சம்பவம் அதிபர் கலப்பத்தி சம்பந்தப்பட்ட சம்ப... அச்சம்பவத்தில் தொடர்புள்ள குறிப்பிட்ட மாணவர்கள் மட்... போனதிலிருந்து தெரியவருகிறது.

அதே போல் சம்பந்தப்பட்ட மாணவர்களின் பிரேதங்கள்தான் ... டவை என்பது. பெற்றோர்கள் குறிப்பிட்ட உடைகள் மற்றும் ... என்பவை குழிகளிலிருந்து மீட்கப்பட்ட பிரேதங்களும் பொரு... அவதானிக்க முடிகிறது.

பெற்றோர்களின் வாக்கு மூலத்திலிருந்து இம்மாணவர்கள் இ... தான் கொலை செய்யப்பட்டிருக்க வேண்டும் என்பதும் புலனா... னோர் இராணுவத்தினராலும் பொலிஸாரினாலும் செவன மு... செல்லப்பட்டுள்ளார்கள்)

பிரேதங்களில் காணக்கிடந்த கழுத்து நெரிக்கப்பட்ட அடையா... பட்ட அடையாளங்கள், துணிகளில் காணப்பட்ட இரத்த அ... பவை கொல்லப்படுவதற்கு முன் மிகவும் மோசமாக சித்திரவ... ருப்பார்கள் என்றும் அனேகமான உடல்கள் நிர்வாணமாக போ... என்றும் தெரிய வருகிறது.

கண்டெடுக்கப்பட்ட பிரேதங்கள் கிட்டத்தட்ட 17க்கும் 20க்கும் ... டையவர்களாக இருக்கலாம் என்று நீதவான் உட்பட ஏவைபே... கள். அதேபோல் காணாமல் போன மாணவர்களது வயதும் அ... கிறது.

மேலும் தொடர்ந்து கிடைத்த கிடைக்கும் அல்லது அதிகரித்துவ... தொகையைப் பார்த்தால் இந்த குழியில் மாணவர்கள் மட்டுமல்... பிரேதங்கள் இருக்கின்றன என்பது புலனாகிறது. பொதுவாக... மேற்பட்ட பிரேதங்கள் கிடைக்கலாம் என்றும் கருதப்படுகிறது... இடத்தில் 40 பிக்குகளின் சடலங்களும் கிடைக்கலாம் என்றும் ...

# சூரிய கந்த : எலும்புக் கூடுகளின் ஊர்வலம்

செய்தி வெளியிட்டிருந்தது. 8ம் திகதி சூரியகந்தவுக்கு சரிநிகர் ஒன்றினைத் தவிர வேறெந்தத் தமிழ்ப் பத்திரிகைகளும் செய்தி சேகரிக்க வரவில்லை.

சூரியகந்த போகும் வழியில் மாதம்பே பிரதேசத்தைதாண்டக் கஹாவத்த பகுதியில், வேறு சில சடலங்கள் (இச்சம்பவத்தை திசை திருப்புவதற்காக ) பாதையோரங்களில் போடப்பட்டிருந்தன. அப்பகுதியின் உதவிப் பொலிஸ் அதி

இந்த குழிகளில் கண்டெடுக்கப்படும் எலும்புகளைக் கொண்டு மாணவர்கள் துன்புறுத்தப்பட்டு கொலை செய்யப் பட்டுள்ளார்கள் என்று இவ்வழக்கை கொண்டு நடத்துவதில் சிரமம் ஏற்படலாம்' எனத் தெரிவித்தார்.

இக்குழிகளைப் பாதுகாப்பதற்காக இருத்தப்பட்ட பொலிஸாரிடம் இது பற்றி விசாரித்த போது ''எங்களை மீறி வேறுயாரும் வரவில்லை ஆயினும் குற்றப்புலனாய்வுத்துறையினருக்கு

கூடாது? எனும் சந்தேகம் எழுந்தது தோண்டுவதற்கான நேரமும் சந்தர்ப்பமும் சரியாக அமையவில்லை. ஆயினும் இயலுமான வரை தோண்டப்பட்டது. ஒரு குழியில் சதைகள் வெள்ளை நிறத்தில் தயிர் வடிவில் கிடந்தது. அவற்றை அள்ள அள்ள கீழே கொட்டியது. அதன் நாற்றம் தாங்கமுடியாது பலர் இடத்தை விட்டு ஓடியதை காணக் கூடியதாக இருந்தது. பலர் மூக்கினை துணியால் பொத்தினர்.

முடிவில் ஒன்பது சடலங்களும் பல எலும்புகளும் மீட்டெடுக்கப்பட்டன. எனினும் சரியாக எத்தனை சடலங்கள் எனக் கூற முடியவில்லை. காரணம் அழுகி, சிதைந்து, ஒன்றுகுவிந்து பல சடலங்கள் கிடைத்தன. அவற்றைக் கொண்டு உடனடியாக எத்தனை எனக் கணக்கிட முடியவில்லை. இருட்டத் தொடங்கவே நீதிவான் இந்நடவடிக்கைகளை தொடர்ந்து நடத்த குற்றப்புலனாய்வு பணியகத்தைப் பணித்தார். கண்டெடுக்கப்பட்ட எலும்புகள், உடைகளைக் கொண்டு பெற்றோர்களால் அடையாளம் காண்பதற்காக 10ம் திகதி எம்பிலிப்பிட்டிய நீதிமன்றத்தில் பார்வைக்கு வைக்கப்படும் என்றும் தெரிவித்தார்.


இவ்வாறான சம்பவங்கள் நடந்த போதும் தொடர்பு சாதனங்களைச் சேர்ந்தவர்கள் மற்றும் நீதிபதி, வழக்கறிஞர்கள், பொலிஸார் தவிர வேறு எவரும் சம்பவ இடத்திற்கு வர அனுமதிக்கப்படவில்லை.

## ஒரே குடும்பத்தில் ஐந்து பேர்.



தாய்: சீதா விக்கிரமசிங்க

சீதாவிக்கிரம சிங்க என்ற ஒருவர் தனது குடும்பத்தில் 5 பேரை ஓரே மாதத்தில் இழந்தேன் என்றார். எனது தம்பிகளான சுமதிபால, குணபால, சுனில், சுனில் என்போரும் எனது மகன் விக்கிரம சிங்கவுமே (19) இவ் ஐவர் என அவர் தெரிவித்தார். 'எனது மகனை 1989ஒகஸ்ட் மாதம் எம்பிலிப்பிட்டியாவில் வைத்து பொலிஸார் கொண்டு சென்றனர். நானும் போய் பொலிஸில் சந்தித்து விட்டு வந்தேன் அடுத்த தடவை 'செவன' இராணுவ முகாமுக்கு கொண்டு போனதாக கூறினார்கள். நான் அங்கும் போய் சந்தித்து விட்டு வந்தேன். அதற்கு அடுத்த தடவை சந்திக்கப் போனபோது அப்படி ஒருவரையும் கைது செய்யவில்லை என மறுத்துவிட்டார்கள். நான் அழுதுமன்றாடி எனது மகனைத் திருப்பித் தருமாறு கேட்ட போது என்னை கொலை செய்வதற்கு முதல் போகுமாறு விரட்டினார்கள்' என்றார். 'உங்களது தம்பிகளையும் மகனையும் கிடைக்கும் எலும்புகளைக் கொண்டு எவ்வாறு கண்டு பிடிக்கப் போகிறீர்கள்' என்ற போது 'எனது மகனுக்கு ஒரு பல் இல்லை எனவே பிளாஸ்டிக் பல் பொருத்தியிருந்தோம் என்றும், மற்றும் ஏனையோரது உடைகளை வைத்து கண்டு பிடிக்கலாம்' என்றும் கூறினார். தோண்டப்பட்ட இடத்தில் பிளாஸ்டிக் பல் கொண்ட மண்டை ஓடு கிடைத்ததைப்பற்றி நாங்கள் அவருக்கு எதுவும் கூறவில்லை.



( ௧ ) கை கட்டப்பட்ட நிலையில் கைஎலும்புகள்
( ௨ ) பாதி அழுகிய நிலையில் மண்டையோடு
( ௩ ) எலும்புகள்
( 4 ) கழுத்து கட்டப்பட்ட நிலையில் தலையொன்று
( 5 ) சாரத்துடன் கூடிய அழுகிய உடல்
( ௬ ) உருகிய வெள்ளைச் சதைகளுடன் உடல்

காரி ஒருவரினாலேயே இவை ஒழுங்கு செய்யப்பட்டதாக கூறப்படுகிறது. வேடிக்கை என்னவென்றால் சப்ரகமுவா மாகாணசபை எதிர்கட்சி தலைவர் வன்னி ஆராச்சியின் வீட்டு வாசலில் போடப்பட்டிருந்த எலும்புக் கூடு மேற்குறிப்பிட்ட உதவிப் பொலிஸ் அதிகாரியின் மகனது ( இவர் கொழும்பு புறக்கோட்டையில் வெடித்த குண்டு வெடிப்பில் இறந்தவர்) என அறியப்பட்டது.

சூரியகந்தவிற்கு போகும் வழியில் மாத்திரம் ஐந்து இடங்களில் சிதைவடைந்த நிலையிலான சடலங்கள் பாதை நெடுகிலும் போடப்பட்டிருந்தன. அதனைச்சூழ மக்கள் குழுமியிருந்தனர். கெடதென்ன, பஹமுனு பன்ன, அம்பலங்வத்த ஆகிய மயானங்களிலிருந்து இவை தோண்டி எடுக்கப்பட்ட சடலங்கள் என பின்னர் தெரிய வந்தது.

சூரியகந்தவுக்கு போகும் வழியில் பல இடங்களில் பொலிசாரின் தடை நிலையங்கள் இருந்தன. மாதம்பே தொடங்கி சூரியகந்த வரை ஏறத்தாழ முந்நூறுக்கும் மேற்பட்ட பொலிஸார் நிறுத்தப்பட்டிருந்தனர். பத்திரிகையாளர், பாராளுமன்ற உறுப்பினர். மாகாணசபை உறுப்பினர்களுடன் சென்றிருந்தமையால் சில பொலிஸ் தடைகள் தாண்ட முடிந்தது.

சூரியகந்த மலையின் உச்சிக்கு சென்றவுடன் அங்கு ஏற்கனவே போயிருந்தவர்கள் பரபரப்புடன் காணப்பட்டனர். நீதவான் மற்றும் வழக்கறிஞர்கள், தோண்டப்பட்ட குழிகளில் சென்று பார்த்த போது வேறு இடங்களிலிருந்து கொண்டு வரப்பட்ட மண்டை ஓடுகள் துணிகள் ஆகியன குழிகளில் போடப்பட்டிருந்தன.. அதனைக் கண்ட வழக்கறிஞர் எஸ். ஏ .பிரேமரத்ன 'இதில் புதிதாக இருக்கின்ற எலும்புகள் வழக்கின் போக்கையே மாற்றிவிடலாம். ஏனெனில் வயிற்றுப் போக்கு காரணமாக இறந்த ஒருவரின் எலும்புகளாகக் கூட இவை இருக்கலாம். அப்படியிருந்தால்

மாத்திரம் இங்கு வர அனுமதித்திருந்தோம்'' எனக் கூறினார். எனவே அரசு தொடர்ந்து இப்பிரச்சினையை அரசு இயந்திரங்களைப் பயன் படுத்தி மறைக்க முற்படுகிறது எனக்கருதுவதில் நியாயம் உண்டு.

நீதிவான் பின்னர் 'இக்குழியில் புதிதாக போடப்பட்ட எலும்புகளை வேறாக கொண்டு செல்லுமாறும் பின் மீண்டும் தோண்டுமாறும் உத்தரவு பிறப்பித்தார். அவ்வாறு ஏற்கனவே மூன்று குழிகள் தோண்டப்பட்டிருந்தன. தொலைவில் ஒரு குழியும் அடுத்த குழியின் பக்கத்திலேயே மறுகுழியும் தோண்டப்பட்டிருந்தது. இம்முறை அதனை

**- என்.எஸ்.குமரன் -**

மேலும் ஆழமாக தோண்டும் முயற்சியில் ஈடுபட்ட போது மேலும் பல சதைத்துண்டுகளுடன் கூடிய எலும்புக் கூடுகள் கிடைத்தன.

சில எலும்புகளில் கைகள் இரண்டும் கயிற்றினால் கட்டப்பட்டு இருந்தன. கிடைத்த மண்டை ஓடு, எலும்புக் கூடுகளின் கழுத்துப்பகுதி துணிகளால் நெரிக்கப்பட்ட நிலையில் இருந்தபடி கிடைத்தன. ஒரு மண்டை ஓட்டின் பற் தொகுதியில் ஒரு பல் பிளாஸ்டிக் பல்லாக இருந்ததும் தெரிந்தது. அதனை நீதிவானும் 'இது ஒரு முக்கிய ஆதாரங்களில் ஒன்றாக பயன்படலாம்' எனத் தெரிவித்தார். அதனுடன் சாரங்கள், சேட்டுகள் என்பனவும் கிடைத்தது.

அருகருகில் இருந்த இரு குழிகள் ஏன் ஒரே குழியாக இருக்கமுடியாது என்ற சந்தேகத்தில் இரு குழிகளுக்கும் இடையில் உள்ள மண்ணைத் தோண்ட அதிலிருந்தும் எலும்புகள் கிடைத்தன. அதிலிருந்து இரண்டு மீற்றர் தூரத்தில் இன்னொரு குழி தோண்டப்பட்ட போது அதிலிருந்தும் எலும்புகள் கிடைத்தன. எனவே ஒரு சந்தேகம் எழுந்தது. இவை இரு குழியோ பல குழிகளோ அல்ல. ஏன் இவை நீளமான வாய்க்கால் போன்ற ஒரே குழியாக இருக்கக்

தூர இடங்களிலிருந்து வந்திருந்த பெற்றோர்கள் சூரியகந்த சந்தியில் பொலிஸாரால் தடுத்து நிறுத்தப்பட்டிருந்தார்கள். அவர்கள் 7ம் திகதி வெளியிட்ட திவயின பத்திரிகையில் பெற்றோர்கள் சடலங்களைப் பார்வையிடலாம் என நீதவானால் அறிவிக்கப்பட்டிருந்ததாலேயே, அதனை நம்பி வந்து சேர்ந்ததாகவும் ஆயினும் எங்களை அனுமதிக்கவில்லை எனவும் கூறி அழுதார்கள்.

இதேவேளை இன்னொரு உண்மை தெரிந்தது. எம்பிலிப்பிட்டியவில் காணாமல் போன மாணவர்கள் தொகை 31 அல்ல அதற்கும் மேலாகும் என்பது. காரணம் சில பெற்றோர்கள் தங்களது காணாமல் போன பிள்ளைகள் பற்றிய தகவல்களை (அதே பாடசாலை மாணவர்கள், அதே காலப்பகுதியில் காணாமல் போனவர்கள்) தந்த போது அவர்களின் பிள்ளைகள் பற்றிய விபரம் குறிப்பிட்ட 31 பேருக்குள் அடங்கவில்லை என்றும் அதே போல் பலர் உள்ளனர் என்ற விபரத்தையும் அறியத்தந்தார்கள்.

1989 ஆகஸ்ட் 6ம் திகதி இரவு நாங்கள் தூக்கத்தில் இருந்த போது கதவைத்தட்டினார்கள் திறந்த போது உள்ளே நுழைந்த இராணுவத்தினர் உடனே விளக்கை அணைக்குமாறு கூறினர். அணைத்ததும் எனது மகன் நிமல் சிசி குமார (19) வை இழுத்துச் சென்றார்கள் ஊரடங்குச் சட்டம் அமுலிலிருந்தமையால் ஏங்களால் அன்றே ஒன்றும் செய்ய முடியாதிருந்தது. அடுத்தநாள் இராணுவத்தினரிடம் கேட்ட போது தங்களுக்கும் அதற்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்றார்கள் என திருமதி பீ.எம் ஜயரத்ன கூறினார்.

இதேபோல் மகன் நீல பத்திக் நிற சாரம் உடுத்தியிருந்ததாகவும் இன்னும் ஒருவர் தன் மகன் பச்சைக் கோடு இட்ட சாரம் உடுத்தியிருந்ததாகவும் கூறிய போது நாங்கள் தோண்டப்பட்ட இடத்தில் கண்ட பிரேதங்களை நினைவு கொண்டோம்.

இத்தனை வருடம் பழுதடையாமல் உருகிய தசைகள் கூட கிடைக்குமா? என்று சிலர் கேள்விகள் எழுப்பினர். உண்மையில் இச்சம்பவத்துக்குரிய இடம் கடல் மட்டத்திலிருந்து 4500 அடி உயரத்தில் இருக்கும் பனிபடர்ந்த பிரதேசம் ஆதலால் தான் அவை முழுமையாகப் பழுதடைந்திருக்கவில்லை. அத்துடன் அவை அரைகுறை நிலையில் அழுகியபடி கிடைத்தன. மேலும் இவர்களை 1989 இறுதியில் கடத்தியிருந்தாலும் ஏன் பல நாட்களுக்குப் பிறகு இவர்கள் கொல்லப்பட்டிருக்கக் கூடாது.

10ம் திகதி எம்பிலிப்பிட்டிய நீதிவான் நீதிமன்றத்தில் எலும்புகள் மற்றும் கிடைத்த ஏனைய ஆதாரங்களையும் அடையாளம் காட்டுவதற்காக மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டது. மொத்தம் 8 சாக்குகளில் எலும்புகள் வைக்கப்பட்டிருந்தன. அத்துடன் மண்டையோடுகள், சாரம், செருப்பு இன்னும் வேறும் பல ஆதாரங்கள் வேறாகவும் பார்வைக்கு வைக்கப்பட்டன.


பெற்றோர்கள் தங்களது பிள்ளைகளை எலும்புகள் கொண்ட சாக்குகளில் தேடும் பரிதாபக் காட்சியை என்ன

→ 14

## உதேஷ் மரணத்தைத் தழுவினான் இன்னும் வேதனை தாங்கமுடியவில்லை இன்னும் அழுகிறேன்.



திரு.சந்திரபால சில்வா



ரசிக வுக்கு எழுதப்பட்ட கடிதம்

எம்பிலிப்பிட்டியாவில் காணாமல் போன மாணவர்கள் சங்கத்தின் செயலாளர் திரு.சந்திரபால சில்வா இவ்வாறு கறுகிறார். ''எங்கள் அமைப்பை நாங்கள் 93 ஜனவரியில் ஆரம்பித்தோம். அன்றிலிருந்து இன்றுவரை எழுத வேண்டிய அனைவருக்கும் எழுதி விட்டோம். நாங்கள் இதுவரை 553 கடிதங்கள் எழுதிவிட்டோம். அதேபோல் 23 ஆட்கொணர் வழ்க்குகளும் தொடுத்துள்ளோம்.

நான் இவ்வாறு செயல்படுகிறேன் என்பதால் 93 மே 2ஆம் திகதி (பிரேமதாச இறந்த அடுத்தநாள்) என் வீட்டுக்கு துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது. அதனை செய்தது மகேஷ்தனன் சூரியாவின் உதவியாளர்கள்.

எம்பிலிப்பிட்டிய மத்திய மகாவித்தியாலயத்தில் அதிபர் கலப்பத்தியை பிடித்து விசாரித்தால் எங்கள் பிள்ளைகள் பற்றிய உண்மைகள் வெளிவரும். அதுமட்டுமல்ல லெப்டினன்ட் சமிந்த கலப்பத்தி, கர்னல் லியனகே, சேனாரத்ன ஏபா என்போரும் எங்கள் பிள்ளைகளின் மரணத்துடன் தொடர்புடையவர்கள் அவர்களுக்குத் தான் எங்கள் பிள்ளைகளுக்கு நடந்த கதி தெரியும். அவர்களையும் விசாரிக்க வேண்டும். கலப்பத்தி அண்மைக்காலமாக வெளியிட்டுவரும் கருத்துக்களைப் பற்றி ஆராய வேண்டும்.

எங்கள் பிள்ளைகள் எம்பிலிப்பிட்டிய செவன முகாமில் இருந்தார்கள் என்பதற்கான ஆதாரங்களில் ஒன்று ரசிக எனும் மாணவனுக்கு இராணுவத்தைச் சேர்ந்த தீபால் என்பவர் எழுதிய கடிதம்.

இன்னுமொன்று உதேஷ் கவிந்திர எனும் மாணவனின் தோழியான நிலுவுக்கு ஈ.ஜே.குமாரசிங்க எழுதிய கடிதம். அதில் ஒரு பகுதி 'உதேஷ் மரணத்தை தழுவினான் எனக்கு இன்னும் வேதனை தாங்க முடியவில்லை. இன்னும் அழுகிறேன்' என இருந்தது.

''எங்கள் பிள்ளைகள் பற்றி நாங்கள் கூறுவது இதுதான். கொலை செய்தவர்கள் அதனுடன் தொடர்புடையவர்கள் பற்றிய சகல விபரமும் எங்களுக்கத் தெரியும். அவை தொடர்பான சகல் விபரங்களையும் அரசின் உயர் தலைவர்கள் வரை அறிவித்து விட்டோம். சூரியகந்த குழியை தோண்டுவதில் எடுக்கும் சிரமத்தை கலப்பத்திய்யை கைது செய்வதிலும் அவரை விசாரிப்பதிலும் காட்டுங்கள். அதை விட்டுவிட்டு எங்களை விசாரணை செய்து அனைத்தையும் கேலி செய்வதை நிறுத்துங்கள்.''

நன்றி - நூலகத்திட்டம்





# மரணத்தின் தூது

## திருக்கோவில் கவியுகன்

இருட்டு!கும்மிருட்டு!என் அடிமனதைப்போல் வெளியில் ஒரேயிருட்டு.

ராத்திரியை சிவராத்திரியாய் மாற்றிக்கொண்டிருக்கும் நான். என் கன்ன மேட்டில் வழிந்து செல்லும் கண்ணீர் நதி. என் பாதம் ஈரப்படுகிறது. சில துளிகள் பாதங்களையும் சந்திக்க திராணியில்லாமல் நிலத்தை நோக்குகின்றன.

இது பொய்! நான் நம்பமாட்டன். என் மகன் செத்திருக்கமாட்டான்! நான் நம்பமாட்டன்!நான் நம்பமாட்டன்! ஈனஸ்வரத்தில் என் மனைவியின் முனகல் கேட்கிறது. இரவு முழுவதும் ஒப்பாரி வைத்து இப்போது இயலாமையில் ஒரு முனகல். அவள் நெஞ்சுக் கூட்டுக்குள் கண்டு கொண்டிருந்த கனவுகளும் நம்பிக்கைகளும் கீழே நீர்த்திவலைகளாக சிதறிக் கிடக்கின்றன.

என் கைகள் பரபரக்கிறது. அவளின் தோளைப் பற்றி ஆறுதல் சொல்ல. என்னை எழுப்பவே யாரோ தேவைப்படுவது போல் இருக்கிறது. இரங்கிய பார்வையுடன் அவளை ஏறிட்டுப் பார்க்கிறேன். என் பார்வையைப் பற்றி அவள் அக்கறை காட்டவில்லை. இன்னும் புலம்புகிறாள். இறக்கும் தறுவாயில் இருக்கும் குப்பி விளக்கை வெறித்துப் பார்க்கிறாள். வாய் ஏதோவெல்லாம் முணுமுணுக்கிறது. எனக்குக் கேட்கவில்லை. கேட்பதையும் நான் விரும்பவில்லை அவள் கையில் கசக்கப்பட்ட அக்கடிதம் கோபந்தாங்கியாகச் சுருண்டு கிடக்கிறது. அது வெறும் கடிதம் அல்ல. இரண்டு உயிர்களின் இதயத்துடிப்பை ஒரே நேரத்தில் ஒரு நிமிடம் நிறுத்தி வைத்த யமதூதன்! விஷத்தைத் தடவி வந்த வெள்ளைப் பேப்பர்! மனிதம் மலிந்திருந்த என் மகனின் முகத்தில் மரணத்துடன் பதிந்து உருக்காட்டிய ஒரு விகற்ப ஓவியன்.

அவளையே பார்த்திருந்த போது என் கால்களை ஏதோ நக்கியது. பாம்போ என்று ஒரு தரம் பயந்து விட்டேன். ஒரு கணம்தான். மறுகணம் பாம்பு கடித்தாவது சாகக்கூடாதா என்று எண்ணம் தோன்றியது. நான் வளர்க்கும் நாய் என் கால்களை நக்கிக் கொண்டிருந்தது. இரவு சாப்பிடவில்லை என்பதை நக்கிச் சொல்கிறது போலும். இனிமேல் எமது சாப்பாடு சாப்பாடாக இருக்க மாட்டாது என்பதை நான் யாரிஉம் சொல்வேன். எப்படிச் சொல்வேன்.

என்னையறியாமல் என்கைகள் நாயின் கழுத்தைத் தடவியது. மனம் மனைவியை நினைத்துக் கொண்டது. மகனை நினைத்துக் கொண்டது. என் கைவிரலைப் பிடித்துக் கொண்டு கடைத்தெருவைச் சுற்றிவரும் என் மகனின் பிஞ்சுமுகம் தெரிகிறது. நேற்றையது. நாளையது எல்லாமே நிகழ்வது போல் நினைவுகளில் ஒரு தடம் புரள்தல் நிகழ்ந்து கொண்டிருந்தது, என்மகனின் வெற்றிச்சான்றுகள் தாறுமாறாக வீசப்பட்டுக் கிடப்பதைப் போல். என் தோள்கள் வலித்தது. அதில் அவன் சவாரி செய்ததால். என் கண்கள் பனித்தது. அது அவனை அடிக்கடி விழுங்கிக் கொண்டதால். என் மனம்? அது என்ன செய்து கொண்டிருந்தது என்று எனக்கே தெரியாது. மலேரியாக் குளிசை விழுங்கியவன் போல் நான். நானே இப்படியென்றால் என்மனைவியைக் கேட்கத் தேவையில்லை.

''டொக்....டொக்...டொக்....''

நாய்களின் குரைப்புகளுக்கு மத்தியிலேயே ஜீப் ஒன்றின் உறுமல் வீட்டுவாசலில் அடங்கிய சில நிமிடங்களில் கதவு தட்டப்பட்டது. கதவைத் திறக்கிறேன். துப்பாக்கியின் வழிகாட்டலில் சிலர் என் வீட்டினுள் பிரவேசித்தார்கள். வேறு சந்தர்ப்பங்களில் என்றால் நான் வெலவெலத்துப் போயிருப்பேன். இப்போது எதுவுமே நடக்காதது போல் என்மனம் சுத்தசூன்யமாய் விறைத்துக் கிடந்தது.

''எங்கே உனது மகன்'' மனித உருத் துப்பாக்கியொன்று இரைந்தது.

''நான் பரமசிவம்'' நான் என்ன சொன்னேன் என்று தெரியவில்லை. ஆனால் பதில் சொன்னேன்.

''நான் உன்னைப்பற்றிக் கேட்கவில்லை. உன் மகனைப் பற்றிக் கேட்கிறேன்.'' துப்பாக்கியுருவின் இரைச்சலின் கடுமை இமயத்தைத் தொட்டது. எங்கோ பரவியிருந்த இன்னும் சிலதுப்பாக்கிகள் என்னைச் சூழ்ந்து கொண்டன. கண்கள் மிரட்டலில் கைதேர்ந்தவை போல் என்னை முறைத்துப் பார்த்தும் கொண்டிருந்தன.

''நானும் மரணத்தைப் பற்றிக் கதைக்கவில்லை. மனிதத்தைப் பற்றித்தான் கதைக்கிறேன்.''

''ஏய் கிழவா உனக்கென்ன பைத்தியம் பிடித்து விட்டதா? ஏன் சம்பந்தமில்லாமல் பேசுகின்றாய்.'' என் பதில் என்னைப் பற்றி ஒரு வித்தியாசமான அபிப்பிராயத்தை அவன் மனதில் உருவாக்கியிருக்க வேண்டும்.அவனின் பேச்சில் இப்போது கடுமையுடன் ஒருவித இரக்க உணர்வும் இழையோடிக்கிடந்தது.

''நானும் உன்னிடம் கேட்கிறேன் பந்தத்தை அறுத்து விட்டு சம்பந்தத்தைப் பற்றிக் கேட்கிறாயே உனக்கென்ன பைத்தியம் பிடித்து விட்டதா?'' காயம் பட்ட என்மனதில் சிறைபட்டுக் கிடக்கும் என்கவலைகளை இவன் எப்படி அறிந்திருப்பான் என்று சிறிதும் எண்ணாமல் நான் என்பாட்டில் பதில் சொல்லிக் கொண்டிருக்கின்றேன். என்னைக் கேள்வி கேட்டவன் என் அருகாமையில் வந்தான். அவன் மூச்சுக் காற்று என்மேனியில் பட்டு ஒருவிதக் கூச்சலைக் கொடுத்தது. காற்று இந்தப் பாவப்பட்ட சுவாசங்களையெல்லாம் எப்படிச் சமாளிக்கின்றதோ?

''வாயைத் திற'' அவன் கட்டளையிட்டான். ''அதிசயமாக இருக்கிறதே எங்கள் வாயைத் திறக்கச் சொல்வது அடைப்பது தானே எங்களின் வழக்கம்.'' என்பதிலில் இருந்த கேலியும் அதன் ஆழமும் அவனுக்கு விளங்கவில்லையோ இல்லை விளங்காத மாதிரி நடித்தானோ தெரியாது. என் பதிலைப்பற்றி அதிகம் அலட்டிக் கொள்ளாதவன்போல்,

''நீ குடித்திருக்கிறாயா?'' என்று கேட்டான். ''குடித்திருந்தால் நிதானமாய்ப் பேசியிருப்பேன்.'' அதன் பின் அவன் என்னிடம் எதுவுமே பேசவில்லை. என்னைப்பார்க்க விரும்பாதவன் போல் என்னுடன் பேசவிரும்பாதவன் போல் என்மனைவியின் பக்கம் சென்றான். இவனின் வரவைப்பற்றி எந்தவொரு உணர்வையும் வெளிக்காட்டாதபடி என்மனைவி புலம்பிக் கொண்டேயிருக்கிறாள்.

''எங்கே உனது மகன்''

என்னிடம் அனுப்பப்பட்ட மிரட்டல் பந்து இப்போது என்மனைவியின் பக்கம் திசைதிருப்பப்பட்டது. இவன் யாரிடமோ கேட்டது போல் அவள் மௌனமாய் இருந்தாள்.

''ஏய் கிழவி உன்னிடம்தான் கேட்கிறேன். எங்கே உனது மகன்''. துப்பாக்கியுருவின் வார்த்தைகள் இப்போதுதான் என்மனைவியின் காதில் விழுந்திருக்க வேண்டும். நிமிர்ந்து ஒருதரம் அவனைத் தீர்க்கமாய் பார்த்தாள். பார்வையில் இருந்தது பயமா, கோபமா இல்லை உணர்வுகளைத் தாண்டிப் போன வெறுமையா. அது அவளுக்கு மட்டும் தெரிந்த சங்கதி.

''சொல்லு எங்கே உனது மகன்''

''அங்கே இருக்கின்றான்''என்மனைவியின் விரல் காட்டிய திசையில் என் வீட்டின் பூஜையறையிருந்தது. என்னைச் சூழ்ந்திருந்த துப்பாக்கியுருக்கள் எல்லாம் அமெரிக்காவைக் கண்டுபிடித்த கொலம்பஸ்சைப் போல் ஒருவித மகிழ்ச்சி கலந்த பரபரப்புடன் என் பூஜையறைக் கதவைத் திறந்தார்கள். உள்ளே இருந்தவையெல்லாம் தெய்வ உருக்களே. என்னை மிரட்டிய துப்பாக்கி முகம் பேயறைந்தது போல் தொங்கிப் போனது. ஓடிவந்து என் மனைவியின் கால்களைப் பிடித்துக் கொண்டான்.

''அம்மா என்னை மன்னித்து விடுங்கள் உங்கள் மனதைப் புண்படுத்தி விட்டேன்.''

எனக்கு ஆச்சரியம். எப்படியிருந்த அதிசயம் நிகழ்ந்தது. திருடன் நெஞ்சிலும் ஈரம் இருப்பதைப் போல். முரடன் நெஞ்சிலும் பாசம் இருப்பதைப் போல இவர்களுக்கு எப்படி மனிதம் புரிய வைக்கப்பட்டது? யார் புரிய வைத்தார்கள்?

''பட்......பட்.....படில்.....பட்பட்பட்.....டும்''

நான் ஆச்சரியத்தில் மூழ்கிக் கொண்டிருக்கும் போதே வெளியே வேட்டுக்கள் தீர்க்கப்பட்டுக் கொண்டிருக்கும் ஒலி மிக அருகில் கேட்டது. என் மனைவியைச் சூழ்ந்திருந்த துப்பாக்கிகள் எல்லாம் ஒவ்வொரு திசையில் பதுங்கிக் கொண்டன. என்னை மிரட்டியவன் என்னிடம் வந்து

''பெரியவரே இங்கே நிற்க வேண்டாம் எப்படியாவது நழுவி ஓடிவிடுங்கள்.'' காதில் குசுகுசுத்து விட்டு ஒரு மூலையாய்ப் பார்த்து ஓடிப்போனான்.

நான் என்மனைவியைத் திரும்பிப் பார்க்கிறேன். அவள் தன் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள எந்தவொரு முயற்சியும் செய்வதாக தெரியவில்லை என்னைப் பார்த்துமட்டும் ஏதோ கையசைத்தாள். என்னை அழைக்கிறாளா? இல்லை என்னை ஓடிப் போகச் சொல்கிறாளா? கை அசையும் திசையைப் பார்த்தால் என்னை ஓடிப்போகச் சொல்வது போல் தான் இருக்கின்றது.

''ஓடுங்கள்! ஓடுங்கள்!'' என்பது போல் சத்தம் இல்லாத உச்சரிப்புகளின் அசைவு தெரிகிறது. அவள் விழிகளில் ஓர் ஏக்க உணர்வு தெரிந்தது.

''நீங்களாவது தப்புங்களேன்'' என்ற கெஞ்சல் தெரிந்தது. அவளைப் பார்த்துக் கொண்டிருக்கும் போதே என் வீட்டுக் கூரையில் ஓடு ஒன்று உடைந்தது துண்டு ஒன்று என் காலடியில் விழுந்தது. வெளியே சத்தங்கள் குறைவது போலவும் பின் திடீரென கூடுவது போலவும் ஒரு பிரமை.

''ஓடு !ஓடு....! '' என் உள்மனம் ஓலமிடுகிறது. நான் ஓடத்தான் வேண்டும். ஓடித்தப்பத்தான் வேண்டும். என் மனைவிக்கு ஆறுதல் சொல்ல, அவள் துன்பக் கடலினுள் முழுவதும் மூழ்கிப் போகுமுன் கரை சேர்க்க ஓடத்தான் வேண்டும். ஓடித்தப்பத்தான் வேண்டும். பின்வாசல் கதவைத் திறந்து கொண்டு அசுர வேகத்தில் ஓடுகின்றேன். சாபமிட்டுத் துரத்தும் நாகங்கள் போல் என்னைத் தொடரும் ரவைகள். கை,கால், தலை, முதுகு. முதுகுத்தண்டு எங்கும் ஒரே குறுகுறுப்பு எதுவும் காயப்படலாம். எந்த வேளையும் காயப்படலாம். வலது காலில் முள்ளோ எதுவோ ஒன்று குத்தியது கள்ளி முள்ளாகத்தான் இருக்க வேண்டும். என்று தோன்றியது. இங்கே எப்போது கள்ளி முளைத்தது? அது எப்போதோ முளைத்துத் தான் இருக்கிறது.

காலை வைத்தது தவறுதான். வலியையும் பொருட்படுத்தாது ஓடுகிறேன். கோழியின் எச்சம் போல் ஏதோ ஒன்று என்பாதத்தில் அப்பியிருப்பதை உணர்கிறேன். புரிந்து கொண்டேன். என்பாதத்தில் இருந்து குருதி கொட்டப்பட்டு இருக்கின்றது. அந்தக் குருதியில் மண் ஒட்டப்பட்டிருக்கின்றது. அது தான் அங்கே கோழியின் எச்சம்போல்.

''மாஸ்ரர் ! மாஸ்ரர் !'' மிகவும் குறைந்த ஸ்தாயியில் ஒரு குரல் என்னை அழைப்பது போல் இருக்கிறது. காதலனின் ரகசிய அழைப்பில் மருண்டு போய் வெருண்டு போய் பார்க்கும் காதலி போல சத்தம் வந்த திசையில் என் பார்வை திரும்பியது. அங்கே தாடியினுள் புதையுண்டு போன ஒரு கறுப்பு உருவம் ஆபிரகாம் லிங்கனை நினைவுப்படுத்துவது போல் ஒரு வரட்டுச் சிரிப்புடன் என்னைக் கைகாட்டி அழைத்தது. பற்களை மட்டும் இலக்காகக் கொண்டு நான் நடக்கிறேன். அந்த உரு அணிந்திருக்கும் உடையும் கறுப்பாகத்தான் இருக்க வேண்டும். ''பளிச்'' செனத் தெரியும் பற்களைப் போல் சில வெள்ளைப் பொத்தான்களும் தெரிகிறது. நான் நெருங்க நெருங்க என்னை அழைத்த உருவத்தின் முகம் கொஞ்சம் கொஞ்சமாய் தெரிகிறது.

''எங்கோ பார்த்திருக்கிறாய் ! பார்த்திருக்கிறாய் !'' மனம் நச்சரித்தது. எங்கேயென்று தெரியவில்லை. முடிந்தவரை உறங்கிக் கிடந்த என் ஞாபகப்படுத்தலைத் தட்டியெழுப்பினேன். என் வாழ்க்கைப் புத்தகத்தை அவசர அவசரமாய்ப் புரட்டிப் பார்த்தேன். தோல்விதான் எஞ்சியது.

''என்ன மாஸ்ரர்! என்னைத் தெரியவில்லையோ நான் உங்கட ரமேஷின் சினேகிதன்.'' மர்ம உரு என்னிடம் நம்பிக்கையை வளர்ப்பதற்காக தன்னை முந்திக் கொண்டே அறிமுகம் செய்தது. நான் எதுவும் பேசவில்லை. எதைப் பேசுவேன்? உன்னைப் பார்த்திருக்கிறேன் எங்கேயென்று தெரியவில்லை என்று என் மறதியை ஒப்புக்கொள்வேனா? அல்லது, என் மகனின் நண்பன் என்கிறாயே என் மகன் மரணித்தது உனக்குத் தெரியாதா என்று துக்கத்திற்கு தூசு தட்டுவேனா?

''நீங்க ஏன் பேசாமல் இருக்கிறியள் என்று தெரியும் மாஸ்ரர் ரமேஷின்ரை மறைவை எங்களாலேயே ஜீரணிக்க முடியவில்லை. நீங்க எப்படி....'' அவன் சொல்லி முடிக்கவில்லை மௌனமானான். அந்த மௌனத்தினூடே அவனிடமிருந்து விசும்பல் கேட்டது. அழுகிறனா? இவனுக்காக நாளை யார் அழுவார்களோ? நானே அழக்கூடும். எனக்காகவும் இவன் அழுக்கூடும். பாம்பைக் கழுத்தில் சுற்றி நிற்பவன் சின்னக் கரப்பானுக்குப் பயப்படுவதுபோல் இவன் மரணத்திற்காக அழுகிறானா?

''மாஸ்ரர்..........''

''அப்படிக் கூப்பிடாத மகன் என்ர மகன் கூப்பிட்ட மாதிரியே நீயும் 'அப்பு' எண்டே குப்பிடு'' ஏதோ சொல்ல எடுத்தவனை நான் தடுத்து விட்டேன்.

''சரி ! அப்பு ஒரு இடமும் போயிராதீங்கோ. அங்க ஏதோ பிரச்சினை போலிருக்கு. இங்க இந்த மரத்துக்கு மறைவில படுத்துக் கொள்ளுங்கோ.''

அவன் ஒரு இடத்தைச் சுட்டிக் காட்டினான். அங்கே ஒரு தென்னங்கிடுகு பாயாக, மடிக்கப்பட்ட சாக்கு தலையணையாக ஒரு படுக்கை உருவாக்கப்பட்டிருந்தது. இதுவரை அவன் அதில் படுத்திருப்பான். போலும் ஓடிவந்த உடன் சோர்வும் மகனைப் பற்றிய, மனைவியைப் பற்றிய மனச்சோர்வும், எனக்கு ஒரு ஓய்வு தேவையென்பதை நடைமுறையாக்கியது. நான் அந்தப்படுக்கையில் சாயமுற்பட்ட போது அந்த மனிதன் சட்டைப்பையினுள் இருந்து எதையோ எடுத்து என்கைகளில் திணித்தான்.

''அப்பு ! இது கவிதை! உங்கள் ரமேஷ் எழுதிய கவிதை! என் நண்பன் எழுதிய கடைசிக் கவிதை!'' தழுதழுத்த குரலினூடு சொல்லிவிட்டு ஒரு சிறிய 'ரோச்' சைத் தந்தான் படிப்பதற்காக. நான் படித்தேன் அந்தச் சிறிய வெளிச்சத்திலே எட்டு வரிகளிலேநிகழ்கால நிஜங்களை கோடு போட்டுக் காட்டியிருந்தான். ஒருதரம். இருதரம், மூன்றுதரம்......பலதரமும் வாசித்தேன் வாசிக்க வாசிக்க என் மகனைப் பற்றி என் மகனைப் பெற்றதால் என்னைப்பற்றி நானே பெருமிதம் அடைந்தேன்.

**''மனிதம் தேடிய**
**நான் சோர்ந்துபோய்**
**எலும்புகளில் தடுக்கி**
**விழுந்தேன்...**
**விழித்தபோது**
**என்கையிலும்**
**ஒரு**
**துப்பாக்கி''**

நான் கவிதையைக் கையில் வைத்திருந்த போதே அந்த இருட்டு மனிதன் அதை உரக்கச் சொன்னான். படித்துப் படித்து மனப்பாடம் செய்திருப்பான் போலும்.

''டீர் ட்ர்ர்........டொம்''

எங்கோ இருந்து ஏவப்பட்ட ஷெல் ஒன்று எங்களின் அருகாமையில் விழுந்த வெடித்தது.

''அப்பு கவனமாய்ப் படுங்கோ'' சொல்லி விட்டு இருட்டு உரு எங்கோ ஓடத் தொடங்கியது காரசாரமான சத்தங்கள் இன்னும் கேட்டுக் கொண்டிருந்தன. குருஷேத்திரம் தொடங்கி விட்டது. போலும் ஆம்!

→14

நன்றி - நூலகத்திட்டம்



அனில் சட்டர்ஜி, புகழ் பெற்ற சினிமா, நாடக நடிகர். அண்மையில் இந்தியத் திரைப்பட சங்கங்களின் கூட்டின் தலைவராகவும் தெரிவு செய்யப் பட்டிருக்கிறார்.

பல தசாப்தங்களாக சினிமாக் கலைஞர்களையும், சினிமா தொழில் நுட்பவியலாளர்களையும் இணைத்து வழிநடாத்தி வருகிறார்.

இக்கட்டுரையில் மக்களுடைய வாழ்க்கையை நுட்பமாக விளக்கும் சினிமாக்கள் மக்களைக் கவர்வதில் ஏன் தோல்வியுறுகின்றன. என்கிற சிக்கலான கேள்வியை எடுத்தாள்கிறார். மற்றெல்லாக் கலை வடிவங்களையும் போல சினிமாவும் மக்களுக்கானதாக இருக்க வேண்டும் என்பது அவரது வாதம்.



சார்ளி சப்ளின்

# மக்களுக்கான சினிமா

## அனில் சட்டர்ஜி

எல்லாவிதமான கலை வடிவங்களும் கேள்விக்கிடமில்லாத வகையில் மக்களுக்கானவையே. தீவிரமான "கலை கலைக்காகவே" வாதிகளால் கூட இதனை மறுத்து விட முடியாது. இங்கு சுயதிருப்திக்கு இடமில்லை.

ஆனால் எல்லாக் காலகட்டங்களிலும் எல்லாக் கலை முயற்சிகளும் எல்லோராலுமே விரும்பப்பட்டதில்லை என்பதை யாரால் மறுக்க முடியும்? ஒரு வான்கோவை ஒரு ரொடினை ஒரு பீத்தோவனின் சிம்பொனியை யுலிசிசை அல்லது நாவலை எடுத்துக் கொண்டால் இவை ஒரே நேரத்தில் கோடிக்கணக்கான மக்களை ஈர்ப்பனவாக இருந்ததில்லை என்றே சொல்ல வேண்டும்.



ரித்விக் கட்டக்

இப்போதெல்லாம் ஐக்சனுக்கோ, பதவி இழந்த ஒரு இளவரசனின் சுயசரிதைக்கோ அல்லது மசாலாத் திரைப்படத்துக்கோ ஆரவாரம் மிக்க பாராட்டுக்கள் தெரிவிக்கப்படுகின்றன. ஆனால் மேற்கூறப்பட்டவை காலம், சூழல் என்பவற்றைக் கடந்து ஒரு சிலரது இதயங்களையாவது எப்போதும் தொட்டுக்கொண்டிருப்பவை. அவை மிகவும் உயர்ந்தரகக் கலைகள் - அவற்றின் ஒவ்வொரு வடிவத்திலும் மக்களுக்கென்று ஏதாவது இருக்கும்.

"முழு உலகமுமே ஒரு நாடக அரங்கம்" என்கிறார் ஷேக்ஸ்பியர், அவர் இன்றுவரை வாழ்ந்து கொண்டிருக்கிறார் என்பதை ஒவ்வொருவரும் அறிவர். ஆனால் இந்த நூற்றாண்டுகளின் புள்ளி விபர அடிப்படையில் பார்த்தால் மக்களில் எத்தனை பேர் பிராட்டின்(Brad) பெயரை அறிந்திருக்கப்போகிறார்கள்.

பிரெச்ட் மக்களுக்காகவே எழுதியவர். இருபதாம் நூற்றாண்டின் அரங்கக் கலையின் மாபெரும் மேதை அவர். அரங்கக் கலையை அதன் ஒவ்வொரு அர்த்தத்திலும் புரட்சிகரமாக மாற்றி அமைத்தவர். மக்களை அவர்களின் சிறந்த எதிர்காலத்திற்கு இட்டுச் செல்வதற்காக அவர்களின் பிரச்சினைகளை அவர்கள் புரிந்து கொள்வதற்காக அவர்கள் விழித்தெழுவதற்காக வென்றே அவர் இவற்றைச் செய்தார். ஆனால் எத்தனை பேர் அவரைப் பின் தொடர்ந்தார்கள் என்ற கேள்வி இப்பொழுது எழுகிறது. பாத்திரங்களை, நடிகர்களை, புலமைமிக்கவர்களை எல்லோரையுமே கிராமங்களில் இருந்தே தெரிவு செய்து கொண்ட எமது ஹபிப் தான்விர்(Habib Tanvir) நகர்ப்புறத்திலே அதிகம் புகழப்படுகிறார்.

சினிமா பரந்தளவில் மக்களைச் சென்றடைவதற்கான சக்திவாய்ந்த ஒரு கலை வடிவமாகும். இலக்கியத்தைப் பொறுத்தவரை கல்வி அறிவும் படிப்பதற்கான ஆர்வமும் இருந்தால் மட்டுமே அதை அனுபவிக்க முடியும். ஒரு மேடை நாடகமோ ஆயிரக்கணக்கான பார்வையாளர்களுக்கு மேல் ஒரே நேரத்தில் சென்றடைவது சாத்தியமில்லை. மீண்டும் மீண்டும் மேடையேற்றுவது என்பது அடிக்கடி சாத்தியமில்லை. பிற நிகழ்த்திக் காட்டும் கலைவடிவங்களுக்கும் நுண்கலைவடிவங்களுக்கும் இது பொருந்தும். ஆனால் கடந்த ஒரு நூற்றாண்டுகளுக்கு மேலாகச் சினிமாவானது மக்களை மகிழ்வூட்டி வருகிறது; அவர்களுக்கு கல்வியூட்டுகிறது; அவர்களை சிந்திக்கச் செய்கிறது. அது முற்றிலும் மாறான விதத்தில் தனது செயற்பரப்பை வளர்த்துச் செல்கிறது.

சினிமா மக்களுடன் சேர்ந்து வேதனைகளையும் சாதனைகளையும் கண்டுள்ளது. ரஷ்யப்புரட்சி அதற்கு நான்கு ஆசான்களை உருவாக்கித் தந்தது. ஐசென்ரைன், புதோவ்கின், டௌசென்கோ குலிசோவ் என்போரே அவர்கள். சினிமாவின் இலக்கணத்தையும் அதன் மொழியையும் உருவாக்கிய அதே நேரத்தில் அவர்கள் சராசரிப் பார்வையாளனால் கூடப் புரிந்து கொள்ளக்கூடிய விதத்தில் படங்களை உருவாக்கினார்கள். பெருமளவிலான மக்களைச் சென்றடைவது, அவர்களுக்கு கல்வியூட்டுவது நம்பிக்கையூட்டுவது என்பனவே ஐசென்ரைனின் பிரதான குறிக்கோள்களாக இருந்தன. அவரது கமெரா புரட்சியின் ஒரு ஆயுதமாக நகர்ந்தது. இதுவரை தயாரிக்கப்பட்ட மிகச் சிறந்த சினிமாக்களுள் ஒன்றாக "Battlc ship potemkin" ஐக் குறிப்பிடலாம். அதனிடம் நாடகம் இருந்தது. தொழில் நுட்பம் இருந்தது. செய்தி இருந்தது. பெருமளவிலான பார்வையாளர்களைத் தன்னுடன் இணைத்துக் கொள்ளும் ஆற்றல் இருந்தது.



சத்யஜித்ரே

16ம் நூற்றாண்டில் பல்வேறு பிரிவுகளையும் ஒன்றாக்கி ரஷ்ய சாம்ராச்சியத்தை உருவாக்கிய ஜார் இவான் இவருடைய மிகச் சிறந்த படமொன்றில் சித்திரிக்கப்படுகிறான். அவனது உளவியல் சிக்கல்கள், வேதனை, நிச்சயமின்மை, முரண்பாடு, மனவுந்துதல்கள் என்பவை மிகக் கவனமாகவும் தெளிவாகவும் இப் படத்தில் சித்தரிக்கப்படுகின்றன. ஒரு தேசிய வீரன் மிகக் குறைந்தளவு முக்கியத்துவத்துடன் சித்திரிக்கப்பட்டான் என்ற பலத்த விமர்சனங்கள் சிலவற்றையும் இது எதிர் கொண்டது. இந்தத் திரைப்படம் பளிச்சிடும் சிறப்பம்சங்கள் பலவற்றையும் கொண்டிருந்த போதும் புறோக்கோவியேவின் இசையிலும், சேக்காசேவின் மிகச் சிறந்த நடிப்பிலும் தங்கியிருந்த இதன் ஜேர்மனிய அமைப்பு வடிவம் பெருமளவு பார்வையாளர்களின் இதயங்களைக் கவர்வதற்குத் தடையாக இருந்துவிட்டது.

மிக நீண்டகாலத்தின் பின் தயாரிக்கப்பட்ட அல்ஜீரியர்களின் சுதந்திரப் போராட்டத்தைச் சித்திரிக்கும் Battle of Algerians' என்ற திரைப்படத்தின் தலைவிதியும் கூட இவ்வாறே அமைந்தது. எவ்வளவுதான் நேர்த்திமிக்க ஒரு தயாரிப்பாக இருந்த போதும் இதனால் வியாபார அளவில் பெருமளவு வெற்றியைப் பெற முடியவில்லை. கொஸ்ரா காவ்ராஸ்இன் 'Z' அல்லது பென் பார்காவின் 'அமொக்'கோ கூட அற்ப வரவேற்பையே பெற்றன. பொன்ரெக்கோவ்வின் 'QUEIMA-DA' என்ற திரைப்படத்தைப் போன்றவையே மேற்கூறப்பட்டவை என்ற போதும், இது ஓரளவு வெற்றியினைப் பெற்றது. பெருமளவு மக்களின் வெட்டு முகத்தைக் காட்டும் 'பொது மனிதனின்' வாழ்க்கையின்ன தெளிவாகக் காட்டுவதே புதிய யதார்த்தப் படங்களின் போக்காக உள்ளது. 'Bycycle Thieves' என்ற டி சிசாவின் புதுவழியைக் காட்டிய சிறந்த திரைப்படம் உலகத்தையே தன்னை நோக்கிக் கவர்ந்தது எனலாம். உண்மையில் இதேமாதிரியான பெறுமதிமிக்க படங்களை தயாரித்த றெசோலினியை அல்லது விஸ்கோந்தியை விட இவர் தனது படத்திற்கான கருவை மிகவும் உணர்வுபூர்வமாகவும் அதன் உள்ளக்கிடக்கையை தெளிவு படுத்துவதாகவும் எடுப்பதில் வல்லவராக இருந்தார். எல்லோரும் தம் பங்குக்கு பார்வையாளர்களது சந்தேகங்களையும் விரக்திகளையும் பகிர்ந்து கொண்டார்கள்.

ஆயினும் பலராலும் விரும்பப்படும் மாபெரும் சாப்ளின் எப்போதும் போலவே இன்னமும் மிகச் சிறந்ததாகவே உள்ளார். அவர் உண்மையாகவே விரும்பப்படுபவராகவே இருந்தார். அதே நாடோடியின் குழலூதலை; அவரது கோமாளித்தனத்தை, அவரது நடையை, அவரது அவலச் சுவையை, அந்த நிராயுதபாணியாக்கும் புன்னகையை, எல்லோர் மீதும், எல்லாவற்றின் மீதுமான அவரது அன்பை விளங்கிக் கொள்வது என்பது அவ்வளவு இலகுவானதல்ல. அவர் எல்லாராலும் பூர்ஷ்சுவாக்கள் முதல் பாட்டாளிகள் வரை படிக்காதவர் முதல் படித்த பண்டிதர் வரை குழந்தை முதல் கிழவர் வரை எல்லோராலும் விரும்பப்பட்டார். அவருக்குப் பிறகு எவருக்கும் இந்த மந்திர வித்தை கைகூடவில்லை.

ஆனால் மக்களுக்காக மக்களின் சினிமாவுக்கான சினிமாவை உருவாக்குவதற்கான முயற்சிகள் குறைந்துவிடவில்லை. குரோசோவா, போர்க்மான், கலூபர், றேச்சா, ஒஸ்மான், செம்பேன், வாஜ்டா, றே, றிட்விக் என்ற பெயர்களைக் குறிப்பிடலாம். இந்தப்பட்டியல் மிகவும் நீண்டதும் பிரகாசமானதுமாகும். அவை உண்மையான மக்களுக்கான சாதனமாக சினிமாவை மாற்றுவதற்கான பாதையில் நடைபோடும் பெயர்கள்.

பலராலும் விரும்பப்படும் மாபெரும் சாப்ளின் எப்போதும் போலவே இன்னமும் மிகச் சிறந்ததாகவே உள்ளார். அவர் உண்மையாகவே் விரும்பப்படுபவராகவே இருந்தார். அதே நாடோடியின் குழலூதலை; அவரது கோமாளித்தனத்தை, அவரது நடையை, அவரது அவலச் சுவையை, அந்த நிராயுத பாணியாக்கும் புன்னகையை, எல்லோர் மீதும், எல்லாவற்றின் மீதுமான அவரது அன்பை விளங்கிக் கொள்வது என்பது அவ்வளவு இலகுவானதல்ல. அவர் எல்லாராலும் பூர்ஷ்சுவாக்கள் முதல் பாட்டாளிகள் வரை படிக்காதவர் முதல் படித்த பண்டிதர் வரை குழந்தை முதல் கிழவர் வரை எல்லோராலும் விரும்பப்பட்டார். அவருக்குப் பிறகு எவருக்கும் இந்த மந்திர வித்தை கைகூடவில்லை.

ஆனால் மக்களுக்காக மக்களின் சினிமாவுக்கான சினிமாவை உருவாக்குவதற்கான முயற்சிகள் குறைந்து விடவில்லை. குரோசோவா, போர்க்மான், கலூபர், றேச்சா, ஒஸ்மான், செம்பேன், வாஜ்டா, றே, றிட்விக் என்ற பெயர்களைக் குறிப்பிடலாம். இந்தப்பட்டியல் மிகவும் நீண்டதும் பிரகாசமானதுமாகும். அவை உண்மையான மக்களுக்கான சாதனமாக சினிமாவை மாற்றுவதற்கான பாதையில் நடைபோடும் பெயர்கள்.

நன்றி - நூலகத்திட்டம்



# கிழக்குப் பல்கலைக்கழகம்

## கிழக்குப் பல்கலைக்கழகம் தொடர்பான வி.மணியினது வேறுபட்ட அபிப்பிராயங்கள் இவை

# வெளித்தெரியாத உண்மைகள்!

வி.மணி

கிழக்குப் பல்கலைக் கழகத்தில் முஸ்லீம் மாணவர்களின் நிலை தொடர்பாக அண்மையில் சிவரெத்தினம் என்பவர் சரிநிகரில் ஒரு கட்டுரை எழுதியிருந்தார். இது தவிர வேறு சில பத்திரிகைகளிலும் அவ்வப்போது இது தொடர்பாக செய்திகளும் கருத்துகளும் வந்தவண்ணமுள்ளன. எனினும், பல்கலைக்கழகத்தின் உண்மையான நிலை, அங்கு நடப்பவைகள், பிரச்சினைகளுக்கான மூல காரணங்கள் போன்றவை இன்னமும் தெளிவுபடுத்தப்படாத நிலையிலேயே உள்ளன. இவை சம்பந்தமாக சற்றுக் கவனத்துடன் அவதானிப்பது நன்று.

சிவரெத்தினம் அவர்கள் குறிப்பிட்டது போல தற்போது கிழக்குப் பல்கலைக் கழகத்தில் சகல இன மாணவர்களும் கல்வி பயில எவ்வித தடையும் இல்லை. ஆனால் வருங்காலத்தில் இந் நிலை தொடருமா என்பது சந்தேகமே. காரணம், பல்கலைக்கழகத்தின் அமைவிடம்.

1981ம் ஆண்டு பல்கலைக்கழகக் கல்லூரியாக ஆரம்பிக்கப்பட்டு, 1986இல் பூரண அந்தஸ்துள்ள பல்கலைக்கழகமாகத் தரமுயர்த்தப்பட்டும், ஏறக்குறையப் பன்னிரண்டு ஆண்டுகள் கழிந்து விட்ட பின்னரும் இப் பல்கலைக்கழகத்தில் ஏற்பட்ட அபிவிருத்தி யாது? தற்போதும் சூறாவளியினால் சேதமடைந்த வந்தாறுமூலை மத்திய மகா வித்தியாலயத்தின் திருத்தப்பட்ட கட்டிடங்களிலேயே விஞ்ஞான, விவசாய பீடங்கள் இயங்கி வருகின்றன. வர்த்தக, கலைப் பீடங்களுக்கு வந்தாறுமூலையில் கட்டிட வசதிகள் இல்லாததினால் மட்டக்களப்பு நகரிலுள்ள சிங்கள மகா வித்தியாலயத்தில் தற்காலிகமாக அவை இயங்குகின்றன. இப் பல்கலைக்கழகத்துடன் ஆரம்பிக்கப்பட்ட ருகுணு பல்கலைக்கழகம் வானளாவிய கட்டிடங்களுடன் உயர்ந்து நிற்கும் போது இரண்டு மகாவித்தியாலயங்களில் இப் பல்கலைக் கழகம் இயங்குவது வேதனைக்குரிய விடயம். இதற்குக் காரணம் யார்? முதலில் பல்கலைக் கழக நிர்வாகிகளும், அடுத்து இப்பகுதி அரசியல்வாதிகளுமே இதற்குப் பொறுப்பேற்க வேண்டும்.

வந்தாறுமூலையில் புதிய கட்டிடங்களை அமைப்பதற்கு பல்கலைக் கழக மானிய ஆணைக்குழு அனுமதி வழங்க மறுத்துள்ளது. காரணம், மூவின மாணவர்களும் கல்வி கற்பதற்கென்றே உருவாக்கப்பட்ட இப் பல்கலைக்கழகத்தின் நோக்கம் மழுங்கடிக்கப்பட்டு விடும் என அரசாங்கம் கருதுவதாகும். சிங்கள, தமிழ், முஸ்லீம் மாணவர்கள் கல்வி கற்பதற்கென்றே போதனா மொழியாக ஆங்கில மொழியும் புகுத்தப்பட்டது. மேலும் இதற்கு வசதியாக இப் பல்கலைக்கழகத்தை மட்டக்களப்பு நகரிலே நிறுவுவதற்காக ஆரம்பத்தில் முயற்சிகள் எடுக்கப்பட்டன. ஆனால், பல்வேறு அரசியல் செல்வாக்குகளினால் வந்தாறுமூலையில் அமைக்கப்பட்டதும் இன்றுவரை அது அப்படியே இருப்பதும்தான் தற்போதைய பிரச்சினைகளுக்கு வித்திட்டுள்ளன.

மட்டக்களப்பு நகரில் கட்டிடங்களை அமைக்க போதுமான நிதியை மானிய ஆணைக்குழு வழங்கச் சித்தமாக உள்ள போதும் பல்கலைக் கழக நிர்வாகம் அதை விரும்புவதாகத் தெரியவில்லை. வர்த்தக, கலைப் பீடங்களைச் சேர்ந்த மாணவர்கள் கடந்த 1992 கடைசிப் பகுதியில் விரிவுரைகளைப் பகிஷ்கரித்து போராட்டம் ஒன்று நடாத்தியது நினைவிருக்கலாம். அதன் பயனாக அவ்விரு பீடங்களுக்கும் கட்டிடங்கள் அமைப்பதற்காக பெற்றுக் கொள்ளப்பட்ட நெற்சந்தைப்படுத்தும் சபைக்குச் சொந்தமான காணி அப்படியே கிடக்கின்றது. உண்மையில் பல்கலைக்கழக நிர்வாகத்தினரின் அசமந்தப் போக்கே இப் பிரச்சினைகளுக்கெல்லாம் தலையாய காரணம். மாணவர்களுக்கு நல்வழியில் கல்வி புகட்டி அவர்களை வழிநடத்த வேண்டியவர்கள் தமக்குள்ளே பதவி மோகங்களிலும் போட்டா போட்டிகளிலும் இறங்கி ஒருவரை ஒருவர் சாடிக் கொள்வது சகிக்க முடியாததாகி வருகிறது. ஒரு சாரார் மட்டக்களப்பு நகருக்கு பல்கலைக் கழகம் மாற்றப்பட வேண்டும் எனக் கூற, இன்னொரு சாரார் அது வந்தாறுமூலையிலேயே இருக்க வேண்டும் எனக் கூறுகின்றனர். மற்றொரு சாரார் கல்முனைப் பகுதிக்கு கொண்டு செல்லப்பட வேண்டும் என்கின்றனர். இந்த இழுத்தடிப்பினால் எவ்வித அபிவிருத்தியுமில்லாமல் மாணவர்களின் உயர்கல்வி பாதிக்கப்படுவது மிகவும் வேதனைக்குரிய விடயம்.

> **நிருவாகத்தினரின் அசமந்தப் போக்கு, அவர்களுக்குள்ளேயான பதவி, அதிகாரப் போட்டி, அரசியல்வாதிகளின் சுயலாபம், வெளியாரின் தலையீடு, வேலை வாய்ப்பு வழங்கலில் தில்லுமுல்லு என்பவற்றால் கிழக்குப் பல்கலைக்கழகம் தள்ளாடிக்கொண்டிருக்கிறது.**

இப் பகுதி அரசியல்வாதிகளும் குறுகிய நோக்கம் கொண்டு சுய இலாபமடைய அவ்வப்போது பிரச்சினைகளில் தலையிட்டு குளிர் காய்வதுடன் நின்று விடுகின்றனர். யாழ். பல்கலைக்கழகத்திற்கு அனுமதிக்கப்பட்ட மாணவர் தொகை குறைவு என்பதை சுட்டிக் காட்டி பல மட்டங்களில் பேச்சுவார்த்தைகள் நடாத்தப்பட்டது யாவருக்கும் தெரியும். பாராளுமன்றத்தில் கூட குரல் எழுப்பப்பட்டது. ஆனால் அதே வேளை இப் பல்கலைக் கழகத்திற்கு அனுமதி குறைந்ததைப் பற்றி எவரும் இதுவரை மூச்சு விடவில்லை. இத்தனைக்கும் பல்கலைக்கழக கவுன்சிலில் ஒரு பாராளுமன்ற உறுப்பினரும் உள்ளார். இடையிடை சந்திக்கும் கவுன்சில் உறுப்பினர்கள் மதுபான விருந்தில் தமது சொந்த சுகநலன்கள் விசாரிப்பது வழக்கமாகி விட்டது. அத்துடன் வெளியாரின் தலையீடுகளும் அதிகரித்து வேலை வாய்ப்பு வழங்கும் விடயங்களில் அநேக தில்லுமுல்லுகளும் நிறைந்துள்ளன. ஒரு உயர் கல்வி நிறுவனம் இவ்வாறு சீரழிக்கப்படுவது நியாயமாகுமா?

> **இப் பகுதி அரசியல்வாதிகளும் குறுகிய நோக்கம் கொண்டு சுய இலாபமடைய அவ்வப்போது பிரச்சினைகளில் தலையிட்டு குளிர் காய்வதுடன் நின்று விடுகின்றனர். யாழ். பல்கலைக்கழகத்திற்கு அனுமதிக்கப்பட்ட மாணவர் தொகை குறைவு என்பதை சுட்டிக் காட்டி பல மட்டங்களில் பேச்சுவார்த்தைகள் நடாத்தப்பட்டது யாவருக்கும் தெரியும். பாராளுமன்றத்தில் கூட குரல் எழுப்பப்பட்டது. ஆனால் அதே வேளை இப் பல்கலைக் கழகத்திற்கு அனுமதி குறைந்ததைப் பற்றி எவரும் இதுவரை மூச்சு விடவில்லை. இத்தனைக்கும் பல்கலைக் கழக கவுன்சிலில் ஒரு பாராளுமன்ற உறுப்பினரும் உள்ளார். இடையிடை சந்திக்கும் கவுன்சில் உறுப்பினர்கள் மதுபான விருந்தில் தமது சொந்த சுகநலன்கள் விசாரிப்பது வழக்கமாகி விட்டது. அத்துடன் வெளியாரின் தலையீடுகளும் அதிகரித்து வேலை வாய்ப்பு வழங்கும் விடயங்களில் அநேக தில்லுமுல்லுகளும் நிறைந்துள்ளன.**

பல்கலைக்கழகத்தில் விரிவுரைகளை நடாத்த போதுமான இடவசதி இல்லை. விரிவுரையாளர்கள் இல்லை. பல துறைகளில் சிரேஷ்ட விரிவுரையாளர்கள் இல்லாமையினால் சிறப்புப் பாடநெறிகளை மாணவர்கள் பயில முடியாமல் பெரும் அவதியுறுகின்றனர். பல்கலைக்கழகத்தின் அமைவிடம் காரணமாகவும் ஏனைய வசதியீனங்கள் காரணமாகவும் சிரேஷ்ட விரிவுரையாளர்கள் இங்கு வரத் தயங்குகின்றனர்.

பொதுவாக மட்டக்களப்பு நகரில் பல்கலைக் கழகம் அமையுமிடத்து அது சகல விடயங்களுக்கும் பொருத்தமாக இருக்கும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. சகல இன மாணவரும் நகரில் வந்து தங்கி தமது கல்வியைத் தொடரலாம். சிரேஷ்ட விரிவுரையாளர்களும் கடமையாற்ற வருவார்கள். தற்போது நகரில் இருந்து தினமும் வந்தாறுமூலைக்குச் சென்று வருவதால் ஏற்படும் பல செலவுகளும் குறையும். பல்கலைக் கழகம் என்பது தனியானதொரு இடத்தில் அமைய வேண்டும் என்பது பழமையாகிப் போன ஒரு வாதமாகும். மேலும் பல்கலைக்கழகம் ஒன்று ஓரிடத்தில் அமையும் போது அச் சுற்றாடல் வளர்ச்சியுற வேண்டும். இப் பன்னிரண்டு வருட காலத்துள் வந்தாறுமூலை கண்ட வளர்ச்சி என்ன? பக்கத்து வீட்டுக்காரனுக்கு அங்கு நடப்பது என்ன என்று தெரியாத நிலை. சுகாதார, போக்குவரத்து, பொழுதுபோக்கு வசதிகள் பின் தங்கிய நிலை. எல்லோரும் கலந்து கொள்ளும் பொது நிகழ்ச்சிகளை அடிக்கடி நடத்த முடியாத நிலை. எனவே வந்தாறுமூலைதான் இன்னமும் வேண்டுமா? நன்றாகச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். பல்கலைக் கழக நிர்வாகத்திலுள்ள ஒரு சிலர் தமது சொத்துக்களையும் பதவிகளையும் காப்பாற்றிக் கொள்ள வந்தாறுமூலைதான் தஞ்சம் என இருந்து கொண்டு அபிவிருத்திக்குத் தடையாக உள்ளனர். இவ்வாறு இருப்பவர்களின் எத்தனை பிள்ளைகள் வந்தாறுமூலையில் உள்ள பாடசாலைகளில் கல்வி பயில்கின்றனர்? ஒருவருமேயில்லை. அனைத்து அதிகாரிகளினதும் விரிவுரையாளர்களினதும் பிள்ளைகள் நகரிலே உள்ள பாடசாலைகளில் கல்வி பயில்கின்றனர். முடி வெட்டக்கூட நகரிலே உள்ள சலூனை நாடித்தான் வருகின்றனர். நிலைமை இவ்வாறிருக்க, வந்தாறுமூலையை அபிவிருத்தி செய்யப் போகின்றோம் என்று கூறுவது வேடிக்கையாகவிருக்கிறது. இதுவரைக்கும் மானிய ஆணைக்குழுவின் புதிய கட்டிடங்களை அமைக்க முடியாது என்ற உத்தரவினை உடைத்தெறிய வக்கில்லாதவர்கள் இனிமேலாவது மானிய ஆணைக்குழுவுடன் இணைந்து மட்டக்களப்பு நகரில் கட்டிடங்களை அமைக்க முன்வர வேண்டும்.

தற்போது இங்கு கடமையாற்றும் சகல முஸ்லீம் ஊழியர்களும் நகரில் இயங்கும் இரு பீடங்களிலுமே கடமையாற்றுகின்றனர். விஞ்ஞான, விவசாய பீடங்களுக்கு கல்வி பயில வந்திருக்கும் முஸ்லீம் மாணவருக்குக் கூட நகரிலேயே விடுதி வசதிகள் செய்து தரப்பட்டு ஒவ்வொரு நாளும் பல்கலைக் கழக வாகனத்தில் வந்தாறுமூலைக்குப் பாதுகாப்பாக கொண்டு செல்லப்பட்டு மீண்டும் கொண்டு வரப்படுகின்றனர். இது எத்தனை நாளைக்கு?

## 12 ஆண்டுகளுக்கு முன் ஆரம்பிக்கப்பட்ட இப்பல்கலைக்கழகம் இன்னமும் இரண்டு மகா வித்தியாலயங்களில் இயங்குவதற்குக் காரணம் யார்?

கடந்த சில மாதங்களுக்கு முன்னர் மட்டக்களப்பில் இடம்பெற்ற ஜனாதிபதி நடமாடும் சேவையின் போது முன்னாள் பல்கலைக் கழக மானிய ஆணைக்குழு தலைவர் பேராசிரியர் அலுவிகாரை, தற்போதையை தலைவர் பேராசிரியர் பண்டிதரட்ன ஆகியோர் மேலும் இரு உறுப்பினர்களுடன் இங்கு வந்து மட்/கல்லடியில் அமைந்துள்ள விபுலாநந்தர் இசை நடனக் கல்லூரிக்கு அண்மித்தாக உள்ள கடற்கரையுடன் சார்ந்த அழகான நிலப் பரப்பில் பல்கலைக் கழகத்தை அமைக்கும் தமது அவாவை வெளியிட்டனர். அமைச்சர் ஹமீத், பா.உ ஹிஷ்புல்லா போன்றோரும் அதற்கு ஆதரவளித்தனர். ஏனென்றால் அரை கிலோமீற்றர் தொலைவில் முஸ்லீம்களின் பேரூரான காத்தான்குடி உள்ளது. அத்துடன் கல்லடி, மட்/மாநகர சபை எல்லைக்குள் இருப்பதனால் எதிர்காலத்தில் சகல இன மாணவர்களினதும் பாதுகாப்பை உறுதிப்படுத்த முடிவதோடு ஏனைய வசதிகளைப் பெற்றுக் கொள்ள நகரை இலகுவாக பயன்படுத்தலாம்.

ஆனால் நடந்ததென்ன? பல்கலைக்கழக உயரதிகாரிகள் சிலர் கல்லடியில் தண்ணீர் தட்டுப்பாடுள்ளது எனக் கூறி அந்த யோசனையை நிராகரித்து விட்டனர். மட்டக்களப்பு நகருக்கு நீர் விநியோகஞ் செய்யும் கல்லடியில் நீர் இல்லை எனக் கூறியவர்களின் புத்தியை என்னவென்று சொல்வது?

1983ம் ஆண்டு ஜுலை இனக் கலவரம் வரை சிங்கள மாணவர்கள் இங்கு பயின்று வந்தனர். 1990ம் ஆண்டு ஜுன் கலவரம் வரை முஸ்லீம் மாணவர்கள் பயின்று வந்தனர். இனி எந்தக் கலவரம் வரை தமிழ் மாணவர்களும் இருப்பரோ தெரியாது. ஒரு தேசிய நிறுவனமாகிய பல்கலைக் கழகம் இவ்வாறு தேயலாமா?

விவசாய பீடத்தில் மொத்தம் நாற்பது மாணவர்களே உள்ளனர். இவர்களுக்காகக் கடமையாற்றும் ஊழியர்கள் அறுபது பேர். விரைவில் இப் பீடமும் மூடப்படும் அபாயமும் உள்ளது. இதே போன்று ஏனைய பீடங்களிலும் மாணவர் தொகை வெகுவாகக் குறைந்து வருகின்றது. எதிர்காலத்தில் பல்கலைக் கழகத்தின் நிலை நிச்சயமற்றதாகி உள்ளது.

எனவே இப் பல்கலைக் கழக அபிவிருத்திக்கு அனைத்து இன மாணவர்களும் ஒன்று சேர்ந்து கல்வி கற்பது இன்றியமையாததாகும். மாணவர்களுக்கிடையிலும் ஊழியர்களுக்கிடையிலும் எவ்வித பாகுபாடும் இல்லை. யாவரும் சகோதரர்களைப் போலப் பழகுகின்றனர். அரசியல்வாதிகளே வேற்றுமையை உண்டுபண்ணுகின்றனர். ஆகவே, குறுகிய மனப்பான்மை கொண்ட அரசியல்வாதிகள் இப் பிரச்சினையில் தலையிடாமல் இருப்பது நன்மை பயக்கும். பல்கலைக் கழகத்தை மட்டக்களப்பு நகரில் நிறுவ சகல ஏற்பாடுகளையும் துரிதமாக மேற்கொள்ள வேண்டியது இன்றுள்ள முதன்மைப் பணியாகும்.

---

*எனது வீட்டுச்*
*சிறுவர்களின் கைகளில்*
*பொம்மையைக் கொடுத்தால்*
*கழுத்தை முறிக்கின்றார்கள்;*
*கைகளைக் கழற்றி வீசுகிறார்கள்.*

*துப்பாக்கி கேட்கின்றார்கள்.*
*பெரும் மரத்தில்*
*தடிமுறித்தெடுத்து*
*நீட்டிப் பிடித்து*
*சகோதரனையே*
*சுட்டு விளையாடுகிறார்கள்.*

*கைகளால்*
*நிலம் கீறி*
*மண்ணள்ளிப் பிசைந்து*
*உருண்டை செய்து*
*குண்டொன்று வீசுகிறார்கள்.*

*நண்ப,*
*இங்கெல்லாம் மாறிற்று.*

*நமது வாழ்வு கிழிந்து*
*கனவுகளும் கொட்டிற்று போ.*

*1993.08.15*

நன்றி - நூலகத்திட்டம்



## எச்சம் விழும் இரவு



கோடை இரவு,
வெளிச்சம்
வீட்டுக்குள் நீள்கிறது.

இன்றைய இரவு நான்
உறங்காதிருப்பேன்.
யன்னலின்
திரைகள் விலத்தி
வானப் பெருவெளியை
வெறிக்கும் விழிகள்
மூடா இமைகள்.

அந்தச் சதுர வானிடை அசையும்
ஒவ்வோர் பொருளையும்
நான்
அவதானித்திருப்பேன்.

விழியின் திரையில்
ஒரு பறவை விழும்வரை
விழித்திருப்பவசியம்.

கோடையில் இங்கும்,
குளிரில்
காற்றும் உறைகிற காலத்தில்
அங்குமாய்
வாழும் பறவையொன்றின்
சிறகுகள் இவ்வழி விரிகிற
கணம்வரை -
நான் காத்திருப்பேன்.

காற்றுவெளியிலே
கந்தகமே நிறைந்தாலும்
சோற்றுக்குப் பதிலாகச்
சுவாசம் உணவானாலும்
வேற்றூர் ஒன்றில் அகதிமுகாமிலே
விடிய நேர்ந்தாலும்

பாட்டுக்கு மறுக்காத
என்தேசக் குழந்தைகளின்
பாடல் ஒன்றை, நானப்
பறவையிடம் கேட்பேன்.

அந்தப் பறவையின் பாடலில்
எனது இதயம் உறங்கும்வரையில்
வெறிக்கும் விழிகள்
மூடா இமைகள்.

எப்படியும் இன்றைக்கு
அந்தச் சதுரவானிடை
தனது
சிறகுகள் அசைக்குமப் பறவை,
காத்திருக்கிறேன்

ஒரு செட்டையாவது
ஒரு இறகாவது
ஒரு எச்சமாவது

எச்சத்தின் நிழலாவது.......

201093

**இளவாலை விஜயேந்திரன்**



ஒரு கவிதை எங்கே ஆரம்பிக்கிறது...

ஓடுகின்ற பஸ்சினுள்....
இருள்மூடி மின்னல் தெறிக்கையில்
தூறல் கண்ணாடிகளை மோதுகையில்
இந்தக் கேள்வி ஓர் கட்டுரையின் தலைப்புக்கான
பெறுமதியை பெற்றுவிடுகிறது...

புதுமழையின் போது மண்கிளர்த்துகிற வாசத்தில் இருந்தும்..

தாத்தாவின் சுருட்டுப் புகையில் இருந்தும்
திருவிழா பண்டிகைக் காலங்களில் இருந்தும் .
கவிதைகள் ஆரம்பித்த காலம் செத்தபின்...

ஒரு கவிதை எங்கே ஆரம்பிக்கிறது....?

யாழ்ப்பாணத்தில் என்றால்
இறந்து போன போர்வீரன் துயிலும் சமாதியை
இலகுவாக எவனும் சுட்டிக்காட்டுவான்
யாரேனும் ஒருவன் மறந்து போய்
இன்னும் உடைக்கப்படாத பள்ளிவாசலையும் காட்டக்கூடும்

கொழும்பிலோ என்றால்
ஓடுகின்ற நெரிசலான பஸ்சினுள்
முன்னுக்கும் பின்னுக்கும் நெரிக்கிற
ஆண்குறிகளுக்கிடையில்
மார்பகம் பிதுங்கத் தவிக்கிற பெண்ணில் இருந்து
உயர்த்திய கமக்கட்டுக்குள் இருந்து
வீசுகிற 'சென்ற்'+ வியர்வை வாசனையில் இருந்து....
சில வேளைகளில்
என்பின்னால் இருந்து ஆங்கிலத்தில் உரையாடும்
குமரிகளின் குரல்களில் இருந்தும்
கவிதை பிறக்கக்கூடும் ...
அதுசரி ஒரு கவிதை எங்கே முடிகிறது....?
எங்கே....
அங்கே...அதோ..
stop என்ற அறிவித்தல் பலகையை நீட்டியபடி
சீருடை அணிந்த ஒருவன் மறிக்கிறானே;
அங்கே...

**தேவ அபிரா!**



சரிநிகர் மாதம் இருமுறை இனங்களுக்கிடையே நீதிக்கும் சமத்துவத்திற்குமான இயக்கத்தின் சார்பில் (MIRJE)வெளியிடப்படும் இதழாகும். கருத்துச் சுதந்திரமும் பத்திரிகைச் சுதந்திரமும் பேணப்படுவதற்காகவும், இனத்துவ சமத்துவத்துக்காகவும் சரிநிகர் பாடுபடும். சரிநிகரில் வெளியாகும் எல்லாக் கருத்துக்களும் ஆசிரியருடையதோ அல்லது இனங்களுக்கிடையே நீதிக்கும் சமத்துவத்துக்குமான இயக்கத்தினதோ கருத்துக்களாக அமைய வேண்டுமென்ற கட்டாயமில்லை. பத்திரிகை நாகரீகத்தையும் தர்மத்தையும் பேணியமைந்த எவ்வகையான மாற்றுக் கருத்துக்களையும் சரிநிகர் பிரசுரிக்கும்.

சந்தா:
உள்நாடு:175/=
வெளிநாடு : 30U.S.$

சந்தாவை காசுக்கட்டளை/தபாற் கட்டளை மூலமாக MIRJE என்ற பெயருக்கு எடுத்து அனுப்பி வையுங்கள்.

எல்லாத் தொடர்புகளுக்கும்
ஆசிரியர்
'சரிநிகர்'
4, ஜெயரட்ன மாவத்தை
திம்பிரிகஸ்யாய
கொழும்பு -05
தொலைபேசி: 584380

## யுத்தம் தமிழ் மக்களுக்கெதிரானது அல்லவாம்

### 93ம் ஆண்டு படுகொலைகளிற் சில :

ஜனவரி 02: கிளாலியில் 50 பொதுமக்கள் படுகொலை

ஜனவரி 28: கிளாலிக் கடலில் ஹெலி தாக்கி 5பொதுமக்கள் பலி. படகு சேதம்.

பெப்ரவரி 07: கடற்படையினர் சுட்டதில் பொதுமக்கள் கிளாலியில் பலி.

பெப்ரவரி 12: கிளிநொச்சியில் பாடசாலை மீது சுப்பர் சொனிக் குண்டுத் தாக்குதல் நடாத்தியதில் இரு மாணவர் உட்பட 12பேர் காயம்.

பெப் 15: கிளாலியில் ஹெலி தாக்கி 2 பயணிகள் மரணம். 6 படகுகள் எரிந்தன.

பெப் 23: மாதகலில் ''ரணவிம'' இராணுவ நடவடிக்கையின் போது 6பொது மக்கள் ஷெல் வீச்சில் காயமடைந்தனர்.

பெப் 28: மட்டக்களப்பு, திகில் வேட்டையில் படையினரால் 6 தமிழர் சுட்டுக் கொலை.

பெப் 28: மன்னார் கள்ளியடியில் விமானக் குண்டுவீச்சுக்கு 5பேர் பலி. 10 பேர் காயம்.

மார்ச் 24: கிளாலிக் கரையோரம் கடற்படையினரின் பீரங்கித் தாக்குதலில் மருத்துவ பீட மாணவன் பலி. கலைப்பீட மாணவன் காயம்.

மார்ச் 26: முல்லைத் தீவில் விமானத் தாக்குதல். 13பொதுமக்கள் காயம்.

ஏப்பிரல் 8: கிளாலிக் கடலில் கடற்படைத் தாக்குதலில் 2பேர் பலி. 6பேர் படுகாயம்.

ஏப்பிரல் 10: இடைக்காட்டில் விமானத் தாக்குதல். இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க அதிகாரி பலி, வடமராட்சியில் 3பொதுமக்கள் பலி. 5பேர் காயம்.

ஏப்பிரல் 15: சில்லாலை, பண்டத்தரிப்பில் 'சூறாவளி' இராணுவ நடவடிக்கையின் போது விமானக் குண்டுவீச்சில் 2பேர் பலி. 10பேர் காயம்.

ஏப்பிரல் 16: முருங்கனில் விமானத் தாக்குதல். ஒருவர் பலி. 2பேர் காயம்.

மே 12. சுப்பர் சொனிக் கிளிநொச்சியில் குண்டு வீச்சு நடத்தியதில் ஒருவர் பலி. 5பேர் காயம்.

மே 13: அல்லிப் பளையில் 'புக்காரா' குண்டுவீச்சில் 2 பேர் பலி. 10பேர் காயம்.

மே 31: நொச்சிமோட்டையில் புலி-புளொட் மோதல். 9பொதுமக்கள் பலி.

ஜூன் 17: மன்னார், பெரிய பண்டி விரிச்சானில் விமானத் தாக்குதல். கோயில் சேதம். குருவானவர் காயம்.

ஜூலை 11: பூநகரியில் விமானத் தாக்குதல் ஒருவர் பலி. 15 பேர் காயம்.

ஜூலை 27: கள்ளியங்காடு, கோப்பாயில் 'சுப்பர் சொனிக்' தாக்குதலில் மாணவர் உட்பட 6 பேர் உடல் சிதறிப் பலி. 6 பேர் காயம்.

ஜூலை 29: கிளாலியில் கடற்படைத் தாக்குதல். 6 பேர் கைது. 8பேர் பலி. 6பேர் காயம்.

ஜூலை 30: வட்டுக்கோட்டை, சித்தங்கேணியில் 'சுப்பர் சொனிக்' 'புக்காரா' தாக்குதல். ஒருவர் பலி ஒன்பது பேர் காயம்.

ஒகஸ்ட் 10: கடல் கொந்தளிப்பு. படகு கவிழ்ந்தது. 19 பயணிகள் பலி.

ஒகஸ்ட் 22: கிளாலியில் ஷெல் வீச்சு. 4பேர் பலி.

ஒகஸ்ட் 27: சித்தங்கேணியில் சுப்பர் சொனிக் தாக்குதல் 5 பொதுமக்கள் பலி. [illegible] ஆலயம் டாங்கியினால் தாக்கப்பட்டது.

ஒகஸ்ட் 28: தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயம் மீது ஷெல் வீச்சு. 4பேர் பலி. 5பேர் படுகாயம். அதற்கு அருகில் விழுந்த இன்னொரு ஷெல்லில் ஒருவர் பலி. 6 பேர் படுகாயம். அச்சுவேலியில் ஷெல் வீச்சு. ஒருவர் பலி. 3பேர் காயம்.

செப்டெம்பர் 6: ஆலங்கேணியில் விமானக் குண்டு வீச்சு. 2பேர் பலி.

செப்டெம்பர் 14: வடமராட்சியில் கடற்படை தாக்கி 2 மீனவர் பலி. 2 பேர் காயம்.

செப்டெம்பர் 15: வலிகாமத்தில் ஷெல் வீச்சு. ஒருவர் பலி. 12 பேர் காயம்.

செப்டெம்பர் 18: முல்லை, மாத்தளனில் 'புக்காரா' தாக்குதலில் 13 பேர் பலி. 41பேர் காயம்.

செப்டெம்பர் 28: 'யாழ்தேவி' ஆரம்பம். சங்கத்தானையில் குண்டுவீச்சில் 20பேர் பலி. 26 பேர் படுகாயம். மேலும் சில இடங்களில் 3 பேர் பலி,

ஒக்டோபர் 2: விடத்தல்பளை அகதி முகாம்மீது விமானத் தாக்குதல் 5பேர் பலி. கொடிகாமம் சந்தையில் 11 பேர் படுகாயம்.

நவம்பர் 12: 'சுப்பர் சொனிக்' யாழ் செயலகம் மீது தாக்குதல். யாழ் அரச அதிபர் உட்பட 22 பேர் காயம்.

நவம்பர் 13: குருநகர் புனித யாகப்பர் ஆலயம் மீது சுப்பர் சொனிக் தாக்குதல். 9 பேர் பலி. பலர் காயம். யாழ். வைத்தியசாலைப் பகுதியில் ஒரு சிறுவன் பலி. 6 பேர் காயம். நந்தாவிலில் 10 பேர் குண்டு வீச்சில் காயம்.

நவம்பர் 15: கிளிநொச்சி வைத்தியசாலையில் சுப்பர் சொனிக் தாக்குதலில் இளம் தாய் பலி. 6பேர் காயம்.


டிசம்பர் 5: குருநகர் பாசையூரில் விமானத் தாக்குதல். 25 பேர் பலி. 70 பேர் படுகாயம்.

டிசம்பர் 27: அலம்பலில் விமானத் தாக்குதல். சிறுவர் உட்பட 4பேர் பலி.

டிசம்பர் 30: சாவகச்சேரியில் விமானத் தாக்குதலில் 10 பேர் பலி. 6 பேர் படுகாயம்.

டிசம்பர் 31: குமுழமுனையில் விமானத் தாக்குதல். ஒரு இளம் பெண் பலி.

வாசகர் செ(ா)ல்லடி



## முஸ்லீம் தலைமைகளின் சுயநலமும் புலிகளின் வக்கிரமும்

கடந்த சரிநிகரில் கிழக்குத் தேய்கிறது என்ற சத்தியேந்திராவின் கட்டுரை தொடர்பாக சில குறிப்புகள்.

''இவ்வாறாகப் படையினரின் அழிப்பு நடவடிக்கைகள் நடைபெற்றுக் கொண்டிருந்த போது தான் புலிகளின் முஸ்லீம்களுக்கெதிரான தாக்குதல்களும் மேற்கொள்ளப்பட்டன'' என்ற பீடிகையுடன் தொடங்கும் சத்தியேந்திரா பின்னர் பள்ளிவாசல்கள் முதலியவற்றில் முஸ்லீம்கள் ஈவிரக்கமற்றமுறையில் கொல்லப்பட்டதைக் குறிப்பிடுகிறார்.

இவரது இத்தகைய ஆரம்பம் ஒரு சில முஸ்லீம்கள் சிங்கள இராணுவத்தினருடன் இணைந்து காட்டிக் கொடுத்தல்களை மேற்கொண்டமையை குறிப்பிடாமல் இருப்பது முழுக்க முழுக்க பிழையை புலிகளில் கட்டி விடுவதாகும். இந்தியப் படையினர் கிழக்கு மாகாணத்திலிருந்து வெளியேறிய பிறகு விடுதலைப்புலிகளின் மக்கள் முன்னணியினால் மாபெரும் வாகரை மாநாடு கூட்டப்பட்டது. இக்கூட்டத்தில் கிழக்கு முஸ்லீம்களின் மதத்தலைவர்கள், வியாபாரப் பெருமக்கள் பிரமுகர்கள் எல்லாரும் அழைக்கப்பட்டு வட-கிழக்கு மாகாணத்தில் முஸ்லீம்களின் இறைமை பாதுகாப்பு பற்றி மிக விரிவாக ஆராயப்பட்டது. ஒரு பதில் அல்லது பிரதி முதலமைச்சராக முஸ்லீம் ஒருவரை நியமிக்க தாங்கள் இணங்குவதாக பின்னாளில் வீடியோ உரையொன்றில் யோகி தெரிவித்திருந்தார். ஆனால் நாடு முழுவதும் முஸ்லீம்கள் பல்வேறு அடையாளங்களுடன் சிதறி வாழ்ந்தமையும் கொழும்பை அடிப்படையாகக் கொண்ட முஸ்லீம் தலைமைகள் தமது சுயு நலங்களுக்காக விடுதலைப்புலிகளுடன் உடன்பாடு காணத்தவறியமையும் (பிரேமதாசாவுக்கு ஆதரவளிப்பதை விட பிரபாகரனுக்கு அஸ்ரப் தலைமையிலான முஸ்லீம் காங்கிரஸ் ஆதரவளித்திருந்தால் முஸ்லீம்களின் நலன்கள் கூடுதலாகப் பாதுகாக்கப்பட்டிருக்கலாம். தமிழ் பேசும் சிறுபான்மையினர் சிங்கள இனவாதிகளுக்கு மேலும் பலமான எதிர்சக்திகளாக விளங்கியிருக்கலாம். அடிப்படையில் பிரபாகரனும் சரி பிரேமதாசாவும் சரி ஜனநாயக மறுப்பும் அராஜகமும் உடையவர்களே.) தனிப்பட்ட சில முஸ்லீம் சுயநலச் சக்திகள் சிங்கள இராணுவத்திற்கு வடக்கிலும் கிழக்கிலும் ஒற்றர்களாக செயற்பட்டமையுமே முஸ்லீம்களுக்கெதிரான புலிகளின் தாக்குதலுக்குக் காரணங்கள்.

இதன் மூலம் வடக்கிலிருந்து முஸ்லீம்கள் வெளியேற்றப்பட்டதையோ கிழக்கு மாகாணத்தில் முஸ்லீம்கள் மிகக் கொடூரமான முறையில் கொல்லப்பட்டதையும் நியாயப்படுத்தி விட முடியாது. அவை வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டியவை. ஆனால் இந்த அப்பாவி முஸ்லீம்களின் கொலையிலும் பொருளைச் சுருட்டி அவர்களைத் துரத்துவதிலும் காரணகாரியரீதியாக சுயநல முஸ்லீம் தலைமைகளும் சுயநல ஒற்றர்களும் சம்பந்தப்பட்டமையை ஒரு பொறுப்புள்ள பத்திரிகையின் செய்தி கட்டுரையில் குறித்தல் அவசியம். ஒரு சிலரின் தவறுதலுக்காக முஸ்லீம் சமூகத்தையே புலிகள் பழிவாங்கியது • மாபெரும் வரலாற்று அக்கிரமம். அதேநேரத்தில் புலிகளுக்கு கிடைத்து மிகப்பெரிய புலனாய்வுத்துறை வெற்றி. 1990இல் இருந்து 1993 வரையிலான கண்ணோட்டத்தில் இவையும் இடம் பெற்றிருக்க வேண்டும்.

அருணன் நடராசா
கொழும்பு

## எலும்புக்கூடுகளின் ஊர்வலம்...

வென்று சொல்வது. நான்கு பெற்றோர்கள் மாத்திரமே தமது பிள்ளைகளை அடையாளங் கண்டனர்.

பிளாஸ்டிக் பல் பொருத்தப்பட்டிருந்த ஒரு மண்டையோட்டைக் கொண்டு அது தனது மகன் நிமல் விக்கிரமசிங்கவினது (19) என திருமதி சீதா விக்கிரமசிங்க எனும் தாயார் கண்டு பிடித்தார். அதேபோல் சாரம் ஒன்றைக் கொண்டு இது தனது மகன் ரஞ்சித் விக்கிரமவினது என ஆர்.கே.குணவதி எனும் தாயார் அடையாளம் காட்டினார்.

இன்னுமொரு டியுரோ சாரத்தைக் கொண்டு இது தன்து மகன் எஸ்.பீ.குணதிலகவினது என்றும் அடையாளம் காட்டினார், திருமதி நாகபாலகே பாலஹாமி.

இந்த சந்தர்ப்பத்தில் பார்வையிட வந்திருந்த ஆயிரக்கணக்கானோரில் பெற்றோர்கள் கதறி அழுததை கட்டுப்படுத்த முடியாமல் போனதால் பொலிஸார் அவர்கள் வெளியேற்றினர்.

அடையாளம் காட்டுவதற்காக மீண்டும் இன்னொரு நாளை குறிப்பிடுவதாக நீதிவான் அறிவித்தார்.

இதற்கிடையில் மேற்படி நீதிமன்ற வேலைகளை 10ம் திகதி அன்று முடித்து விட்டு வரும் வழியில் இவ்வழக்கை நடத்தும் வழக்கறிஞர் எஸ்.ஏ பிரேமரத்ன எம்பிலிப்பிட்டிய சங்கபால விகாரை அருகில் 3.30 மணியளவில் இனம் தெரியாத நபர்களால் சுடப்பட்ட போது காரினுள் தலையை குனிந்து தப்பிக் கொண்டார்.

அடுத்தநாள் பத்திரிகைகள் இச்சம்பவம்பற்றிய செய்திகளை வெளியிட்ட போதும் லேக்ஹவுஸ் நிறுவன பத்திரிகைகள் வேறுவிதமான செய்திகளை வெளியிட்டன. தலைப்புச் செய்தியே 'சூரியகந்தயில் கண்டெடுக்கப்பட்ட எலும்புகள் மாணவர்களது என்பதற்கான ஆதாரங்கள் எதுவும் இல்லை' என்று வெளியியிடப்பட்டதுடன் எந்த வித விசாரணையும் முடியுமுன்னரே இந்தசம்பவத்திற்கு ஜே.வி.பியே பொறுப்பு என்று செய்தி வெளியிட்டதுடன் அரசுக்கு சார்பாக உண்மைகளை மூடி மறைக்க முயன்றது.

இவ்விடயத்தில் நீதித்துறையினர் காவல்துறையினர், எதிர்கட்சிகள், பத்திரிகைகள் காட்டும் அக்கறையில் அணுவளவேனும் அரசு காட்டாதது எல்லோரையும் சந்தேகம் கொள்ள வைக்கும்.

அதே வேளை இன்று இச்சம்பவத்தை முன்னின்று அம்பலப்படுத்துவதாக கூறிக் கொண்டு ஜனநாயகம் பற்றி பேசும் ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி கூட 1971 இல் இளைஞர்களை எவ்வாறு அழித்தார்கள் எனும் கேள்வியையும் எழுப்பி பார்ப்பதில் தவறில்லை.

அதேநேரம் இந்த சம்பவத்தில் அக்கறைக்காட்டாமல் இருப்பதும், இச்சம்பவத்தை வெளிக்கொணரத் தயங்குவதும் அரசின் பச்சையான அலட்சியப் போக்கு என்பது தெரிகிறது. இதுபற்றிய விசாரணைக்குழுவை நியமிக்கக் கோரியும் கூட அரசு அலட்சியம் காட்டவது அரசின் உண்மைச் சொருபத்தை வெளிக்காட்டி நிற்கிறது. இன்னும் இதே போன்ற இரகசிய குழிகளின் வரைபடம் இருப்பதாக சில செய்திகளும் தெரிவிக்கின்றன. அவை கூடிய விரைவில் அம்பலமாகும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

ஒரு சில நூற்றாண்டுகளின் பின் ஆய்வாளர்கள் இலங்கை மண்ணைத் தோண்டி ஆய்வு செய்கிற போது எலும்புக் கூடுகள், மண்டை ஓடுகள் நிறைந்த ஒரு நாடு என இலங்கையை அவர்கள் குறிப்பிடத் தயங்க மாட்டார்கள்.

## மரணத்தின் தூது....

அது குருஷேத்திரம் தான். ஷத்திரியர்களே சந்திக்காத குருஷேத்திரம். அப்படியானால் இங்கே காண்டீபன் யார்? கர்ணன் யார்? துரியோதனன் யார்? என்னை மிரட்டிய உரு துரியோதனனா? இந்த மர்ம உரு காண்டீபனா? என் மகன் தருமனா? இல்லை! இவர்கள் எம்மவர்கள். ஒரே கூட்டினுள் வாழ வேண்டிய பறவைக் குஞ்சுகள். அப்படியானால் ஏன் இவர்கள் கொத்திக் கொள்கிறார்கள். யாரோ கல்லெறிந்து விட்டார்கள் . நான் எல்லோரையும் நேசிக்கிறேன். என்மகனைப் போல. என்மனம் ஏதோவெல்லாம் எண்ணிக் கொண்டிருக்கும் போதே கண்கள் செருகத் தொடங்குகின்றன. சரிகின்றேன். நான் எவ்வளவு நேரம் உறங்கியிருப்பேனோ தெரியாது. கோழி கூவிய சத்தமும் பறவைகளின் இரைச்சலும் என் தூக்கத்தைக் கெடுத்து விட்டன. இன்னும் இமைகள் திறக்காத நிலையில் அப்படியே படுக்கின்றேன். அருகில் யாரோ ஒருவர் மூச்சுவிடும் சத்தம் கேட்கிறது.

''இருட்டு மனிதனாக இருக்குமோ '' நினைத்துக் கொண்டே விழிகளைத் திறக்கிறேன்.

என்பக்கத்தில் என்மகன் ரமேஷ் படுத்திருக்கிறான். நான் என்வீட்டில் படுத்துக் கொண்டிருக்கிறேன். அப்படியென்றால் அந்தக் கடிதம், மிரட்டல் மனிதன் இருட்டு உரு, ஜீப்பின் ஒலி, குருஷேத்திரம், அந்தக் கவிதை, கிடுகுப் படுக்கை, கள்ளிமுள் எல்லாமே கனவுகளா?

எனக்கு வியர்த்துக் கொட்டியது. என்னையே நம்பாதவன் போல் என் மனைவியைப் பார்க்கிறேன். அவள் எதுவுமே நடக்காதது போல் அமைதியாக சயனித்துக் கொண்டிருந்தாள். இன்னும் குழப்பம் தீராத நிலையில் ஜீப்பின் தடமாவது இருக்கின்றதா என்பதைப் பார்க்க வாசலுக்கு விரைகிறேன். அங்கே எந்த ஜீப்பும் வந்ததற்கான தடயங்கள் இருக்கவில்லை. நிமிர்ந்து வீதியைப் பார்க்கிறேன். எதிரேயுள்ள மதில் சுவரில் அந்த இருட்டு மனிதன் சிரித்துக் கொண்டிருந்தான். சுவரொட்டியாக ''இவனை எங்கோ பார்த்திருக்கின்றோம் என்றது. இங்கேதானா? '' உள்ளே வருகின்றேன். என்மகன் தூங்கிக் கொண்டிருக்கின்றான். அவனின் நெஞ்சு அமைதியாக மேலும் கீழும் அசைகிறது. அவனைப் பார்க்கும் போதெல்லாம் அது கனவாகவே இருக்கட்டும் என்றும் மனம் இரைகிறது.

## சலீமுக்கு சகாப்தன் எழுதியது

எங்கோ ஓர் அகதிமுகாமில் வாழும்
என் பிரிய நண்பன் சலீமுக்கும் சலீமைச் சேர்ந்தவர்களுக்கும்!

உங்களது சொந்த முகவரி தொலைக்கப்பெற்று
வாழ்வு மறுக்கப்பட்டு
மூன்றாண்டைத் தொட்டதுவோ?!

என்ன கொடுமையிது
என்ன மனிதமிது!
கல்தோன்றி மண்தோன்றா
முன்தோன்றிய மூத்தகுடியினர்
உங்கள் இருப்பை கலைத்தது எங்ஙனம்?

நீங்களும் நாங்களும்
அருகருகாய் வீடுகளில்
அன்னியோன்யமாய் வாழ்ந்த வாழ்வு?

உனது உம்மாவும் எனது அம்மாவும்
ஹஜ் பெருநாளுக்கும் தீபாவளித்திருநாளுக்கும்
பலகாரங்கள் பரிமாறி
பாங்காய் பலகதைகள்
பேசி மகிழ்ந்திருந்தோம்.

ஒன்றாய்க் கைப்பிடித்து
பள்ளிசென்று இருவருமே
தமிழ்மொழியில்தான்
அரிச்சுவடியும் கற்றோம்

எதிரிகுண்டுமழை பொழிய
உயிரை காத்திட
ஒரே பதுங்கு குழியில்தான்
ஒளிந்துமிருந்தோம்.

ஆக
நீ தொழுகைக்கு பள்ளிவாசல் சென்றாய்
நான் கோயிலுக்குச் சென்றேன்.

உனது வாப்பா
தையல் கடையில்
எங்கள் பொங்கல் புதுவருட கொண்டாட்டங்களுக்கு
அழகாய் சட்டை தைத்து
அன்பாய் தருவாரே!

உனது வாப்பா மவுத்தாகிப் போனதன் பின்பு
வாப்பாவின் தையற்கடையை கவனித்து
உனது சொந்த மண்ணிலேயே வாழ்வை
தொடர்ந்தாய்.....!

ஆனால்
மணல் வீடுகட்டி மண்சோறு சமைத்த
உங்கள் மண்ணிலிருந்து
அகதியாய் சில மணிநேரத்திற்குள்
உங்கள் வெளியேற்றம் நடந்தது.

எனக்குத் தெரியும்,
உங்களுக்கு உங்கள் சொந்த இடத்தை விட்டால்
வேறுஏது இருப்பிடமென்று!

எல்லாவற்றையும் இழந்து
கனத்த நெஞ்சுடன்
கருத்தபனைகள்
உங்களைப் பார்த்திருக்க
வெளியேற்றப்பட்டீர்கள்

என்ன கொடுமையிது!
சராசரி மனிதர்களாக
வாழ்ந்த உங்களை
எதிரிக்கு தகவல் கொடுக்கிறாங்கள் என்பதற்காகவா
இல்லை நீங்கள் இருந்தால் பிரச்சினை என்பதாலா
பழிக்குபழி வேண்டவா
இல்லை உங்கள் பாதுகாப்புக்காகவா
அல்லது சுயநலம் நிறையப் பெற்ற
யாழ்ப்பாணத்தானின் நன்மைக்காகவா
உங்கள் வெளியேற்றம்?...

நண்பனே!
எமது மண்ணில்
மனிதம் செத்து
மரணம் உயர்கின்ற காலமிது!

'நெஞ்சம் கலங்காதே'
நாம் உரத்துச் சொல்கிறோம்
நீங்கள் மூன்றாண்டுகளுக்கு
முன்பு வாழ்ந்த இடம்தான்
உங்கள் சொந்த பூமியென்று

மீண்டும்
உங்கள் தொலைந்த வாழ்வுகள் மலரும்
தொடர் அவலத்திற்கோர் முற்றுப் புள்ளிவரும்
என்ற நம்பிக்கையோடு விடைபெறுகின்றேன்.

வடக்கிலிருந்து முஸ்லீம் மக்கள் வெளியேற்றப்பட்டு மூன்று ஆண்டுகள் நிறைவையொட்டி ரொறண்டோ, கனடாவில் நடத்தப்பட்ட ஒரு கண்டனக் கூட்டத்தில் கவிஞர் சகாப்தன் வாசித்த கவிதையை மேலே பிரசுரித்திருக்கிறோம்.

நன்றி - நூலகத்திட்டம்



## பூநகரித் தாக்குதலைப் பற்றி புலிகளின் நூல்




கடந்த நவம்பர் மாதம் 11ம் திகதி பூநகரி -நாகதேவன்துறை முகாங்கள் மீதான விடுதலைப்புலிகளின் தாக்குதலைப்பற்றி புலிகள் நூல் ஒன்றினை வெளியிட்டுள்ளனர்.

இந்நூலின் மேற்படி தாக்குதலில் இறந்த புலி உறுப்பினர்களின் தொகை 458 எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவர்களில் பெண் புலி உறுப்பினர்களில் லெப்ரினட் கேர்னல் பதவி வகிக்கும் ஒருவர் மேயர் பதவி வகிக்கும் மூன்று பேர் கப்டன் பதவி வகிக்கும் பத்து பேர் லெப்டினட் பதவி வகிக்கும் 23 பேர் உதவி லெப்டினட் பதவி வகிக்கும் 24 பேர் அடங்குவர்.

பிரதேச மட்டத்தில் யாழ்குடாநாட்டைச் சேர்ந்தவர்கள் 153 பேர் மன்னார், வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் வன்னிப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் 156 பேர் திருகோணமலை மட்டக்களப்பு, அம்பாறை அடங்கும் கிழக்கைச் சேர்ந்தவர்கள் 149 பேர் இறந்துள்ளனர். மேற்படி நூல் இறந்த 458 பேரின் புகைப்படங்கள் கூடிய விபரங்களுடன் யாழ்ப்பாணத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

## கிரான் குளம் சுற்றிவளைப்பு:

கிரான்குளம் என்னும் இடத்தில், ''தேர்தலில் பங்குபற்றுபவர்கள் மரண தண்டனைக்குள்ளாக்கப்படுவார்கள்'' என்ற புலிகளின் சுவரொட்டி ஒட்டியிருந்த காரணத்தினால் இக் கிராமத்தைச் சேர்ந்த அனைத்து ஆண்களும் சுற்றிவளைக்கப்பட்டு அண்மையில் உள்ள புதுக்குடியிருப்பு விசேட அதிரடிப் படை முகாமிற்குக் கொண்டு செல்லப் பட்டனர். அங்கு வைத்து அம் முகாமின் பொறுப்பதிகாரி ரொனி என்பவரினால் மிக மோசமாகத் தாக்கப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பு மாநகரசபைக்கான தேர்தலில் ஆளும் ஐ.தே.கட்சிக்கும் ரெலோ சார்பிலான சுயேட்சைக் குழுவிற்கும் இடையேதான் அதிக போட்டி காணப்படுகின்றது. இதனால் அளவுக்குமீறித் தேர்தல் அசம்பாவிதங்கள் இராணுவத்தின் உதவியுடன் நடைபெறலாம் எனக் கூறி தேர்தலைக் கண்காணிக்க விசேட குழு ஒன்றை அனுப்பும்படி சுயேட்சைக் குழு சார்பில் கேட்கப் போவதாக குழுத் தலைவர் செழியன் பேரின்பநாயகம் கூறியுள்ளார்.

### பலாலி...

கிறார்கள். அதேவேளை புலிகளும் திருப்பித் தாக்கியிருக்கிறார்கள்.

இச்சமயத்தில் புலிகளில் சிலரும் படையினரில் சிலரும் கொல்லப்பட்டனர். இதனால் ஆத்திரமுற்ற இராணுவத்தினர் ஏற்கனவே கைது செய்யப்பட்டு வைக்கப்பட்டிருந்த தமிழ் இளைஞர்கள் சிலரை சுட்டுக் கொன்றுள்ளனர். இச்சம்பவத்தின் போதே அங்கு தொலைத் தொடர்பு அதிகாரியாகக் கடமையாற்றிய தமிழரும் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். இவ்வாறு கொல்லப்பட்ட அதிகாரி கொட்டாஞ்சேனையைச் சேர்ந்த இருதய நாதன் என தெரியவருகிறது.

புலிகள் மேற்கண்டவாறு தந்திரமாக உள்நுழைந்து தாக்குவதினை முறியடிப்பதற்கும், இராணுவத்தினர் தம்மவரை அடையாளம் காண்பதற்குமாக ஒவ்வொரு நாட் காலையிலும் எல்லாப் படையினரும் குறித்தொரு நிற துணியை கையில் கட்டிக் கொள்ளுமாறு பணிக்கப்பட்டுள்ளனராம்.

எமது புதிய முகவரி:

சரிநிகர்
4, ஜெயரட்ன மாவத்தை
திம்பிரிகஸ்யாய
கொழும்ப-05
தொலைபேசி: 584380

### முல்லைத்...

கடந்த 6ம் திகதிக்குப் பின்னர் முல்லைத்தீவு மாவட்டத்திற்கு அத்தியாவசிய உணவுப் பொருட்கள் எதுவும் எடுத்துச் செல்லப்படவில்லை. தற்போது இரண்டுவார கால உணவுத் தேவையைச் சமாளிக்கக்கூடிய அளவிலான உணவுப் பொருள் மாத்திரமே அங்கு அதிகாரிகளின் கையிருப்பில் உள்ளது.

இதனை ஊர்ஜிதம் செய்துள்ள முல்லைத்தீவு மாவட்ட அதிகாரிகள் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் வழித்துணையின்றி கிரமமாக வாகன அணி மூலம் அரசாங்க அதிபரின் மேற்பார்வையில் அத்தியாவசிய உணவுப் பொருள் விநியோகப் பணியை மேற்கொள்ள முடியாத நிலைமையே நிலவுவதாக சர்வதேச செஞ்சிலைச் சங்கம் உட்பட சம்பந்தப்பட்ட உயரதிகாரிகளுக்கு ஐயந்திரிபுற எடுத்துரைத்துள்ளார்கள்.

இதுவிடயத்தில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்க உயர்மட்ட அதிகாரிகளும் அரசின் உயர்மட்ட அதிகாரிகளும் ஒன்றிணைந்து உடனடியாகக் கவனஞ் செலுத்தி செயற்படத் தவறினால் நிலைமை கட்டுக்கடங்காத வகையில் மோசமடைவதைத் தவிர்க்க முடியாமற் போக நேரிடும் எனக் கவலை தெரிவிக்கப்படுகின்றது.

### [illegible]...

தீரும்' என்றிருக்கிறார் மட்டக்களப்பில் ஐ.தே.க. தலைவர்களில் ஒருவர். தேர்தல் காலத்தில் வாக்குப் பெட்டிகளைப் பணத்தாலே நிரப்புவோம் என்றிருக்கிறார் இன்னொரு கட்சிப் பிரமுகர்.

போட்டியிட்டால் புலிகளால் சாவு. போட்டியிடாவிட்டால் புலியெனச் சாட்டி ரெலோவினால் சாவு. எனவே சாவதற்கிடையில் சுருட்டுவதைச் சுருட்டிக் கொண்டு வெளிநாட்டுக்குப் பாய்வதைத் தவிர வேறு வழியில்லை என்று ரகசியமாகச் சொன்னார் ஒரு சுயேட்சைக் குழு வேட்பாளர்.

எப்பாடு பட்டாவது தேர்தலை நடாத்தி அதன்மூலம் மட்டக்களப்பும் தன்னுடைய கட்டுப்பாடடுக்குள் இருக்கிறது என்பதை வெளியுலகிற்கும் சிங்கள மக்களுக்கும் நிரூபிப்பதிலேயே அரசு குறியாக நிற்கிறது. இவ்விடயத்தில் தான் தோற்பதைக் கூட ஏற்றுக் கொள்ள அரசு தயாராக இருக்கிறது. இதற்காக இராணுவத்தை முற்றுமுழுதாக அரசு பயன்படுத்துகிறது. வாகரைப் பகுதியில் இராணுவமே வேட்பாளரைத் தேடிப்பிடிப்பதில் ஈடுபட்டிருந்தது.

இத்தேர்தலையொட்டி பலமான தேடுதல் வேட்டைகளும் நடாத்தப்படுகின்றன. இதற்காக அண்மையில் 500க்கும் அதிகமான விசேட அதிரடிப்படையினர் வாகரைக் காட்டுக்குள் அனுப்பப்பட்டு தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர். இறுதியில் அவர்கள் கதிரவெளிக்கிராமத்தில் பத்து இளைஞர்களைக் கைது செய்து கொண்டு திரும்பியிருக்கின்றனர். இவ்வாறான நடவடிக்கைகள் மட்டக்களப்பு மாவட்டம் முழுவதிலும் நடைபெறுகிறது.

இதே வேளை மட்டக்களப்பின் இராணுவ அதிகாரிகள் மத்தியிலும் இத்தேர்தல் நடவடிக்கைகள் பல அபிப்பிராய பேதங்களை உருவாக்கியுள்ளது. 'நியாயமான தேர்தல்களை இப்போது நடாத்த முடியாது. எனவே தேவையில்லாத தேர்தலை நடாத்தி அரசு எங்களது லீவுகளை ரத்துச் செய்வதுதான் மிச்சம். அரசினுடைய முட்டாள்தனமான செயல் இது' என்று மட்டக்களப்பு இராணுவ அதிகாரி ஒருவர் குறிப்பிட்டிருக்கிறார்.

அதேசமயம் எத்தனை மனித உயிர்களைப் பலி கொடுத்தாவது தேர்தலை நடாத்த அரசு முடிவு செய்துவிட்டது. அதற்காக அது எந்த இயக்கங்களுடனும் -சாத்தான்களுடனும் -கூட்டுச் சேரத் தயாராக இருக்கிறது.

மறுபக்கத்தில் புலிகள் தேர்தலில் போட்டியிட்டாலோ, வாக்களித்தாலோ, தேர்தலுக்கு ஆதரவளித்தாலோ மரணதண்டனை வழங்கப்படும் என்று சுவரொட்டி மூலம் அறிவித்துள்ளனர். கிராமங்களிலெல்லாம் இராணுவ முகாம்களுக்கருகில் இச்சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

அரசு இந்தத் தேர்தல்களினூடாக கிழக்கு தனது கட்டுப்பாட்டில் இருக்கிறது என்பதை நிரூபிக்கவும், இதனைத் தொடர்ந்து கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பை நடாத்துவதனூடாக வடக்கிலிருந்து கிழக்கை பிரிக்கவும். அதனூடாக தமிழ் மக்களின் பிரச்சினையை இல்லாதொழித்து விடவும் முனைந்து நிற்கிறது.

இவ்வளவிற்கப்பாலும் இத்தமிழ்க் குழுக்கள் தீயசக்திகள் பதவிக்கு வருவதைத் தடுப்பதற்காகப் போட்டியிட்டு (எல்லாத் தமிழ்க் குழுக்களுக்கு அவ்வாறு தான் கூறுகின்றன. ஆனால் யாருக்கு யார் தீயசக்தி என்பது அவர்களுக்காவது புரியுமோ என்னவோ) பெறப்படும் வெற்றி தமிழ் மக்களின் பிரச்சினைக்கு தீர்வைத் தரும் என்று எந்த அரசியல் ஞானத்துடன் நம்புகின்றனவோ தெரியவில்லை.

ஆக, இந்தத் தேர்தலை எலும்புத் துண்டிற்கு தெருநாய்கள் சண்டை பிடிப்பதற்கு ஒப்பானது என்று கூறலாமா?

## நாட்குறிப்பு

**ஜனவரி -01**

சாவகச்சேரி வைத்தியசாலைக்கு அருகில் 1993-12-29ம் திகதி பிற்பகல் 5.30மணியளவில் இரண்டு சுப்பர் சொனிக் விமானங்கள் குண்டு வீசியதில் 4 பேர் பலியாகினர். 51 பேர் காயமடைந்தனர்.

**ஜனவரி -02**

வடக்கில் ஏற்பட்ட பெருவெள்ளத்தை அடுத்து ஏற்பட்ட புதுவிதமான தொற்றுக் காய்ச்சலினால் கடந்த ஒரு மாதத்துள் 15 பேர் பலி.

**ஜனவரி -06**

அரசசார்பற்ற நிதிநிறுவனங்கள் யாவும் தம்மை சமூக சேவைகள் திணைக்களத்தின் கீழ் கட்டாயம் பதிவு செய்ய வேண்டும் எனவும், வரவு செலவு அறிக்கைகளை சரியான முறையில் பேணுதல் வேண்டும் எனவும், பொதுப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் ஜனாதிபதி பிரகடனப்படுத்தியுள்ளார். மீறுவோருக்கு 5 வருடத்திற்குக் குறையாத மரணதண்டனையும் ஐம்பதாயிரத்திற்கும் குறையாத அபராதமும் விதிக்கப்படும் எனக்கூறப்பட்டுள்ளது.

**ஜனவரி -19**

பொலன்னறுவை மாவட்டத்தின் மன்னம்பிட்டிய பகுதியில் 40 பெண்கள் உட்பட 200 பொதுமக்கள் புலிகள் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மார்ச் முதலாம் திகதி நடைபெறவிருக்கும் உள்ளூராட்சி தேர்தலில் போட்டியிட இருந்த மாவடிவேம்பு மொறக் கொட்டாஞ்சேனை எனுமிடத்தைச் சேர்ந்த கனகரட்னம் என்பவர் இனம்புரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

**ஜனவரி -08**

பலாலிப்பகுதியில் இராணுவத்தினரின் காலவரண்களின் மீது புலிகளினால் நடாத்தப்பட்ட தாக்குதல் முறியடிக்கப்பட்ட சம்பவத்தில் கப்ரன் ஒருவரும் லெப்டினட் ஒருவரும் சுட்டுக்-கொல்லப்பட்டனர்.

புலிச்சந்தேக நபர்கள் என்ற பெயரில் கைது செய்யப்பட்ட பன்னிருவர் குறிப்பிட்ட காலம்வரை, முகாமில் கையொப்பமிட வேண்டும் என்ற பெயரில் விடுதலை செய்யப்பட்டனர். கடந்த தடவை கையொப்பமிடச் சென்ற இவர்களை தேர்தலில் போட்டியிடுமாறு தமிழ்க் குழு ஒன்றைச் சேர்ந்தவர்களும் இராணுவத்தினரும் வற்புறுத்தியுள்ளனர்.

**ஜனவரி -13**

நெடுங்கேணியில் ஜனவரி 12ம் திகதி அன்று நடைபெற்ற விமானத் தாக்குதலின் போது பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் ஜெகநாதனும் அவர் மனைவியும் பலியாகினர்.

**ஜனவரி -15**

வடமராச்சியில் ஏவப்பட்ட ஷெல்களின் அதிர்ச்சியினால் இரண்டு வயோதிபர்கள் பலியானதுடன், பலர் காயமடைந்து பத்து வீடுகளும் சேதமாகியுள்ளன.

**ஜனவரி -17**

செட்டிக்குளத்தில் இராணுவக் காப்பரண் ஒன்றில் இரு ரிசேவ் பொலிஸாரின் சடலங்கள் துப்பாக்கிச் சூட்டுக்காயங்களுடன் கண்டு எடுக்கப்பட்டது.

மன்னம்பிட்டியாவில் இருந்து பொலன்னறுவைக்குச் செல்லும் வழியில் ஓய்வு பெற்ற படையினர் ஒருவர் புலிகளால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

யாழ்ப்பாணம் கைதடியில் ஹெவி தாக்கியதில் இருவர் பலி.

**ஜனவரி 20**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட இலட்சக்கணக்கான பெறுமதி மிக்க வீடியோ கெமரா, வீடியோ நாடாக்கள், தொலைக்காட்சிப் பெட்டிகள், எழுதுகருவிகள் போன்ற பெறுமதிமிக்க பலவகைப் பொருட்களை ஏற்றிச் சென்ற ''மேரிஸ் குமுனு'' எனும் கப்பல் மன்னார் கடலில் தடுத்து வைக்கப்பட்டுள்ளது. மேற்படி பொருட்களைப் புலிகள் பயன்படுத்தி விடுவார்கள் என இராணுவப் புலனாய்வுத்துறையினருக்குக் கிடைத்த தகவலின் பேரிலேயே இவற்றைக் கொண்டு செல்ல தடைவிதித்திருப்பதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள புல்மோட்டை சிறீமாபுரத்தில் இருந்து அனுராதபுரம் நோக்கி நேற்றுக்காலை வந்துகொண்டிருந்த இ.போ.ச.பஸ் ஒன்றுக்குள் வைக்கப்பட்டிருந்த குண்டொன்று வெடித்ததில் 10 பேர் கொல்லப்பட்டும் 40ற்கும் அதிகமானோர் காயமடைந்தனர்.

வாழைச்சேனை கறுவாக்கேணி என்னுமிடத்தில் பொறிவெடி ஒன்று வெடித்ததில் இரண்டு பொலிஸார் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டு இருவர் காயமடைந்தனர்.

வட-கிழக்கு மாகாணங்களைத் தவிர்ந்த நாட்டின் ஏனைய பகுதிகளில் கடந்த வருடம் 1136 பேர் கொல்லப்பட்டுள்ளனர் எனப் பாதுகாப்பு வட்டாரங்களின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

காலிமுகத்திடலில் இருந்து துறைமுகப் பகுதிவரையிலான பகுதி கரையோரப் பாதுகாப்புத் தடைச்சட்டத்தின் கீழ் ஜனாதிபதி பிரகடனப்படுத்தியுள்ளார். இப்பகுதியினுள் அத்தாட்சி பெற்ற அதிகாரியின் எழுத்து மூல முன் அனுமதியின்றி எந்த ஒரு படகோ கப்பலோ எக்காரணத்திற்காகவும் பிரவேசிக்க முடியாது.

**ஜனவரி 23**

கல்முனைத் தொகுதியைச் சேர்ந்த மருதமுனையில் ஐ.தே.கட்சியின் மத்திய சம்மேளனச் செயலாளர் எம்.எல் ஜமால்தீன் வீட்டிற்கு குண்டு ஒன்று எறியப்பட்டது.

நன்றி - நூலகத்திட்டம்

REGISTERED AS A NEWS PAPER IN SRILANKA

# சரிநிகர்

## உள்ளூராட்சித் தேர்தல்கள் :

# எலும்புத் துண்டிற்கு கடிபடும் தெருநாய்கள்

உள்ளூராட்சி சபைகளுக்கும், பிரதேச சபைகளுக்குமான தேர்தல் மட்டக்களப்பில் ஒரு செயற்கையான பரபரப்பை ஏற்படுத்தியிருக்கிறது. ஐ.தே. கட்சியும், ரெலோவும் எல்லா இடங்களிலும் வேட்பாளர்களை நிறுத்தி இருக்கின்றன. ஸ்ரீ.ல.முஸ்லீம் காங்கிரஸ் மட்டக்களப்பிலும், ஏறாவூர், காத்தான்குடி, ஓட்டமாவடி உள்ளூராட்சிச் சபைகளிலும் போட்டியிடுகின்றது. ஈ.பி.டி.பி போரதீவுப்பற்று, களவாஞ்சிக்குடி ஆகிய இடங்களில் தனது வேட்பாளர்களை நிறுத்தியுள்ளது. மட்டக்களப்பில் செழியன் பேரின்பநாயகம் தலைமையிலான சுயேட்சைக் குழுவுக்கு ஆதரவளிக்கிறது. ஈரோஸ் மட்டக்களப்பில் மட்டும் போட்டியிடுகிறது.

இந்தத் தேர்தலுக்கான வேட்பாளர்களை நியமிப்பதில் அனைத்துக் கட்சிகளுமே பலாத்காரத்தைக் கையாண்டுள்ளதாகத் தெரியவருகிறது. தாங்களாகச் சுயமாக போட்டியிட முன்வந்த வேட்பாளர்களை விரல் விட்டு எண்ணிவிடலாம்.

ஐக்கிய தேசியக் கட்சிக்குள்ளேயே ஒரு பகுதியினர் தற்போது தேர்தலில் போட்டியிடுவது சாத்தியமில்லை என்று கூறிக் கொண்டு தேர்தல் வேலைகளில் இருந்து ஒதுங்கியுள்ளனர். ஆனால் மட்டக்களப்பு மாவட்ட ஐ.தே.க. தலைவர் ஜனாப் றிஸ்வி சின்னலெப்பை எப்படியாவது ஐ.தே.கட்சியை வெற்றி பெறச் செய்ய வேண்டுமென்பதில் குறியாக உள்ளார். இதற்காக முஸ்லீம்களை அணிதிரட்டுவதில் முனைப்பாக இருக்கிறார்.

ஐ.தே.கட்சியைத் தேர்தலில் வெற்றி பெறவைப்பதனூடாக ஐ.தே.கவினுள் தனது நிலையைப் பலப்படுத்தி கொள்வதே அவரது இலக்கு. தமிழ் மக்களின் வாக்குகள் ஐ.தே.கவுக்கு கிடைக்காது என்று தெரிந்து கொண்டு முஸ்லீம் மக்களைக் கொண்டாவது தன்னை மேம்படுத்திக் கொள்ள அவர் முயற்சிப்பதாகத் தெரிகிறது. ஐ.தே.கவின் மட்டக்களப்புச் செயலாளர் ஈஸ்வரன் இத்தேர்தல் ஐ.தே.கவுக்கு வெற்றியைத் தராது எனத் தெரிந்து கொண்டு பின் வாங்கியிருக்கிறார்.

முஸ்லீம் காங்கிரஸ் முஸ்லீம்கள் மத்தியில் தமது செல்வாக்கு எவ்வாறு இருக்கிறது என்பதைப் பரிசீலிக்கவும், வென்றால் தாங்கள் தான் முஸ்லீம்களின் ஏகப் பிரதிநிதிகள் என்பதை நிரூபிப்பதற்கும் இத்தேர்தலைப் பயன்படுத்த முனைகிறது.

ஐ.தே.கவும், முஸ்லீம் காங்கிரஸும் தம்மை நிலைநிறுத்திக் கொள்ள முஸ்லீம் மக்களின் வாக்குகளையே நம்பியுள்ளன.

ரெலோ, புளொட், ஈரோஸ், ஈ.பி.டி.பி ஆகிய இயக்கங்கள் நேரடியாகத் தேர்தலில் குதிக்காமல் தம்சார்பில் சுயேட்சைக் குழுக்களை இறக்கி விட்டுள்ளன. தாங்கள் நேரடியாகப் போட்டியிடாமல் சுயேட்சைக் குழுக்களாக வேட்பாளர்களை நிறுத்தியதிலிருந்தே தமக்கு மக்கள் மத்தியில் எந்தளவு செல்வாக்கு இருக்கிறது என்பதைப் புரிந்து கொண்டுள்ளார்கள் எனக் கூறலாம்.

ஆளும் ஐ.தே.கட்சி மட்டக்களப்பு மாநகரசபை, காத்தான்குடி, ஏறாவூர் பிரதேச சபைகள் தவிர்ந்த ஏனைய அனைத்து இடங்களிலும் வேட்பாளர்களை நிறுத்த பலாத்காரத்தையே கையாண்டுள்ளது தெரியவருகிறது. இராணுவத்தினரைக் கொண்டு கிராமங்கள் சுற்றிவளைக்கப்பட்டு கைதானவர்களில் இருந்து பலவந்தமாக கையொப்பம் பெறப்பட்டு வேட்பாளர்கள்



தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களில் கையொப்பம் இடத் தெரியாதவர்களும் இருந்தனர். அவர்களுக்கு இராணுவமே எவ்வாறு கையொப்பம் இடுவது என்றும் சொல்லிக் கொடுத்துள்ளது.

வாகரையைச் சேர்ந்த பிரமுகர் ஒருவரிடம் ஐ.தே.கவும், சுயேட்சையாகப் போட்டியிடும் தமிழ்க்குழு ஒன்றும் ஒருவர் மாறி ஒருவராக கையொப்பம் பெற்றுக் கொண்டமையால் அவர் தேர்தலிலும் போட்டியிட முடியாமல், திரும்பி வாகரைக்கும் போக முடியாமல் திண்டாடுகிறார்.

இராணுவத்தினரின் அடாவடித்தனங்களுக்குச் சற்றும் குறையாத ரீதியில் தான் தமிழ் இயக்கங்களும் நடந்துள்ளன. தங்கள் தங்கள் பட்டியலில் போட்டியிட வேண்டும் அல்லது புலி ஆதரவாளர் எனக் கைது செய்யப்படுவீர்கள் என மிரட்டப்பட்டே தமிழ் இயக்கங்கள் வேட்பாளர் பட்டியலைத் தயார் செய்துள்ளன. இவ்வாறு பலவந்தமாக வேட்பாளராகத் தெரிவு செய்யப்பட்டோர் புலிகளுக்குப் பயந்து நடுங்கிக் கொண்டிருப்பதையும், இராணுவத்தினர் தங்களது முகாமில் வந்து தங்கும்படி வற்புறுத்துவதையும் நேரில் காணக் கூடியதாக உள்ளது.

**சத்தியேந்திரா**

ரெலோ தாங்கள் தான் மட்டக்களப்பில் செல்வாக்கு மிக்கவர்கள் என்பதை நிரூபிக்க இத்தேர்தலில் போட்டியிடுகிறதாகச் சொல்லுகிறது. ஆனால் வேட்பாளர்களைத் தேர்ந்தெடுப்பதே இவர்களைப் பொறுத்தவரையில் மிகக் கஸ்டமாக இருந்தது ஒவ்வொரு கிராமம் கிராமமாகச் சென்று ஆதரவு தேடும் படலத்தில் ஈடுபட்டுள்ளார். இவர்கள் கிராமங்களுக்குச் செல்லும் போது சுற்றிவளைத்துக் கைது செய்ய வருகிறார்கள் என மக்கள் அஞ்சினார்கள். சில இடங்களில் இவர்கள் மக்களைப் பயமுறுத்தியுமுள்ளனர்.

புளொட் இயக்கத் தலைவர் சித்தார்த்தன் மட்டக்களப்புக்கு வந்து வேட்பாளர்களைப் பிடிக்கும் முயற்சியில் தோற்றுப் போனதால் 'வவுனியாவில் ஏன் போட்டியிடுகிறோம் . மட்டக்களப்பில் ஏன் போட்டியிட வில்லை என்று அறிக்கை விட வேண்டியவரானார். எனினும் மட்டக்களப்பில் ரெலோ சார்பிலான சுயேட்சைக்குழுவின் வேட்பாளர் பட்டியலில் புளொட்டைச் சேர்ந்த சிலரும் போட்டியிடுவதாகத் தெரிகிறது.

ஈ.பி.ஆர்.எல்.எப்.பின் முன்னாள் மாகாணசபை உறுப்பினர்களான அருமைலிங்கம், விநாயகமூர்த்தி ஆகியோர் ஈ.பி.ஆர்.எல்.எப்.பிலிருந்து விலகி ஈ.பி.டி.பி சார்பில் போரதீவுப் பற்று, களவாஞ்சிக்குடி உள்ளூராட்சி சபைகளில் போட்டியிடும் சுயேட்சைக் குழுவின் சார்பில் போட்டியிடுகின்றனர்.

இவர்களையெல்லாம் விட தற்போது அரசின் முழுப்பாதுகாப்பில் இருக்கும் மோகன் குழுவினரும் (PLOT இல் இருந்து பிரிந்தவர்கள்) மட்டக்களப்பு மாநகர சபையில் சுயேட்சைக் குழுவை ஏற்படுத்தித் தேர்தலில் போட்டியிடுகின்றனர். இவர்களுக்கான முழுச் செலவையும் அரசே பொறுப்பேற்றுள்ளதாகத் தெரியவருகிறது.

இந்த இயங்கங்களுக்குமிடையில் சுயேட்சைக்குழுக்களை ஒன்றுபடுத்தி ஒரு சுயேட்சைக் குழுவாக போட்டியிட எடுக்கப்பட்ட அனைத்து முயற்சிகளும் தோல்வியடைந்துள்ளன. இச்சிறிய தேர்தலில் போட்டியிடக் கூட தமக்குள்ளே ஒற்றுமையை ஏற்படுத்த முடியாத சுயநலக்கும்பல்களாகவும், பதவி மோகம் கொண்டவர்களாகவும் இக்குழுக்கள் இருப்பதை அவதானிக்க முடிந்தது.

இதேவேளை இத்தேர்தலில் போட்டியிட எத்தனை தமிழ் முக்களின் உயிரையும் பறிகொடுக்கத் தயாராக இருப்பதாக 'ஈரோஸ் முக்கியஸ்தர் ஒருவர் கூறியுள்ளதாகப் பேசப்படுகிறது. மட்டக்களப்பில் போட்டியிடும் ஈரோஸ் இயக்கம் பஷீர் சேகு தாவூத் எம்.பியை தலைவராகக் கொண்ட அரசுக்குச் சார்பான ஒரு குழுவாகும். இது அரசைத் திருப்திப்படுத்தவும், அரசாங்கத்தில் நல்ல பெயர் எடுக்க வேண்டும் என்ற நோக்கத்தையும் அடிப்படையாகக் கொண்டு தேர்தலில் போட்டியிடுகிறது. இதன் மூலம் பஷீர் சேகு தாவூத் அரசிற்கு மிக நெருக்கமானவராக செல்லப்பிள்ளையாக மாறிவிடலாம்.

'இந்திய அமைதிப்படைக் காலத்தில் ஈ.பி.ஆர்.எல்.எப். எவ்வாறு அதிகாரத்திற்கு வந்ததோ அவ்வாறே ஐ.தே. கட்சியும் அதிகாரத்தைக் கைப்பற்றியே

→ 15

# மணிவாசகம்

### ஐ.தே.கவுடனேயே நாம்

''ஊவா மாகாண சபையின் முதலமைச்சர் பேஸி சமரவீரவுக்கு எதிராக அதன் எதிர்க்கட்சி ஊடாகக் கொண்டு வரவுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணையைத் தோற்கடிக்க நாம் ஐக்கிய தேசியக் கட்சி அரசுடன் ஒன்றுசேர்ந்து செயற்படுவோம்.''
**பதுளை மாவட்ட (இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஐ.தே.க. பா.உ. ரீ.வீ. சென்னன் -லங்காதீபவில்** -18.01.1994

### நினைக்க மட்டும்....

''இன்று நாட்டில் உள்ளது நினைக்கும் சுதந்திரம் மட்டுமே. அவற்றைச் செயற்படுத்தச் சுதந்திரம் இல்லை.''
**மனித உரிமைகள், அபிவிருத்தி தொடர்பான சட்ட அமைப்பின் சட்டத்தரணி கல்யானந்த திறாணகம -லங்காதீபவில்** -18.01.1994.

### ஏன் மாகாணசபையை எதிர்க்கிறோம்?

''பொலிஸ், காணி அதிகாரம் வடக்குக்கு வழங்கப்பட்டால் ஈழ அரசு தானாகவே கொடுக்கப்பட்டதாகி விடும். சமஷ்டி முறையினூடாக நடப்பது வடக்குக்கு ஆட்சி அதிகாரம் வழங்குவதாகும். அதன் அர்த்தம் அவர்களுக்குத் தனியாக அரசொன்றை நிறுவுவதற்குப் பக்கபலம் சேர்ப்பதாகும். இதனாலேயே அன்றும், இன்றும், என்றும் மாகாண சபை முறையை எதிர்த்து வருகிறோம்.''
**மக்கள் ஐக்கிய முன்னணியின் தலைவர் தினேஷ் குணவர்தன - லங்காதீபவில்** -20.01.1994

### வடக்கின் பிரச்சினைக்கு ஒரே தீர்வு.

சமஷ்டி முறை அல்லது சுயாட்சி வழங்கினால் கூடப் புலிப் பயங்கரவாதிகள் ஆயுதங்களைக் கீழே வைக்க மாட்டார்கள். அதனால் வடக்கின் பிரச்சினையைத் தீர்க்க உள்ள ஒரே மாற்றுவழி பயங்கரவாதிகளை முழுமையாகப் படுகொலை செய்வதாகும். ஆனால் பிரதான அரசியல் கட்சிகள் அதனை விரும்பவில்லை. இக்காரணத்தினால் இன்று நாடு பெரும் பாதாளத்தில் விழுந்துள்ளது. இப்போது செல்லும் அரசியல் வழியில் மேலும் சென்றால் நாம் நரகத்திற்கே செல்ல வேண்டி ஏற்படும்.
**ஸ்ரீ.ல.சு.க. பா.உ. எஸ்.எல்.குணசேகர - லங்காதீபவில்** -20.01.1994

### மலையகமும் தமிழ் இராச்சியமாகிவிடும்

''தொண்டமானின் ஒரு கோரிக்கையானது பெருந்தோட்டத் துறையின் தமிழ்த் தொழிலாளர்களுக்கு வீடுகளையும், காணிகளையும் உரிமையாக்குவதாகும். இன்று தோட்டங்களில் ஒரு இலட்சம் குடும்பங்கள் உள்ளனவாயின் மூன்று பரம்பரை சென்றவுடன் எதிர்காலத்தில் தோட்டங்கள் குடியேற்றங்களாகித் தன்னியல்பாகவே மலையகமும் தமிழ் இராச்சியமாகி விடும். அப்போது அது, இன்று வடக்கில் உருவாகியுள்ள பிரச்சினையை விடப் பயங்கரமானதாக இருக்கும். நாம் இதனைச் சரிவரப் புரிந்து கொண்டு செயற்பட வேண்டும்.''
**ஸ்ரீ.ல.சு.க. பா.உ. திலக் கருணாரத்ன -லங்காதீபவில்** -20.01.1994.

### ஸ்ரீ.ல.சு.கவின் தோல்வி எமது வெற்றி

''அன்று மாகாண சபைகளை எதிர்த்தவர்கள், இன்று அவற்றுள் நுழைந்து கொண்டு பொலிஸ் போன்ற மேலதிக அதிகாரங்களைக் கோருகின்றனர். மேல் மாகாணத்துக்கு அதை வழங்கினால் சப்ரகமுவ மாகாணத்துக்கும் அதனைக் கொடுக்க வேண்டும். அவ்வாறு வழங்கினால் சமஷ்டி முறையின் கீழ் வடக்கிற்கும் அவ் அதிகாரங்களைக் கொடுக்க வேண்டும்.
அப்போது நிலைமை என்னவாகும்? நாட்டின் பெரும்பகுதி மக்களான சிங்களவர்களை இவ்வாறு இன்னும் ஏமாற்ற இடங்கொடுக்க முடியாது. அதற்காக நாம் இன்று புதிய பாதையொன்றை ஆரம்பித்துள்ளோம். ஸ்ரீ. லங்கா சுதந்திரக் கட்சியின் தோல்வி எமது வெற்றியாகும்.''
**பேராசிரியர் நளின் த சில்வா -லங்காதீபவில்** -20.01.1994

### ஜனாதிபதி இடங்கொடார்

''முன்பு பழக்கப்பட்ட முறையில் தற்போதைய ஜனாதிபதியையும் கீழ்ப்படிய வைத்துக் கோரிக்கைகளைப் பெறத் தொண்டமான் தயாரானார். ஆனால் அது சரி வரவில்லை. இவ் ஜனாதிபதி உள்ளவரை, தொண்டமானின் மேலாதிக்கத்தை நிறுவ இடங்கொடுக்க மாட்டார். சிங்கள மக்களுக்காக உள்ள ஒரே தலைவர் தற்போதைய ஜனாதிபதி மட்டுமே.''
**காலி மாவட்ட ஐ.தே.க. பா.உ. றஞ்சித் குமாரகே -திவயினவில்** -20.01.1994.

### தேர்தலுடன் புலி ஒழியும்

''கிழக்கு மாகாணத் தேர்தலின் பின்பு அம் மாகாணத்தில் புலிகளின் பலம் முழுமையாகவே இல்லாமற் போய்விடும். பின்பு வட மாகாணத்தில் புலிகளின் பலத்தை முழுமையாக இல்லாதொழிப்பதில் பாதுகாப்புப் படையினர் ஈடுபடுவர்.
**கிழக்கு மாகாணத் தளபதி மேஜர் ஜெனரல் லக்கி அல்கம -லங்காதீபவில்** -21.01.1994

### தகுந்த பதில் கொடுக்க வேண்டிவரும்

''இனப்பிரச்சினை எனும் கவசத்தைப் போட்டுக் கொண்டு பயங்கரவாத நடவடிக்கைகளில் புலிகள் ஈடுபடுவதை அனுமதிக்க முடியாது. நேர்மையாக முன் வந்து பேச்சுவார்த்தையில் ஈடுபட புலிகள் இயக்கத்துக்குச் சந்தர்ப்பம் உள்ளது. தொடந்தும் வன்முறை நடவடிக்கைகளில் அது ஈடுபடுமானால் அதற்குப் பதில் கொடுக்க வேண்டிய நிலை படையினருக்கு ஏற்படும்.
**ஸ்ரீ லங்காப் பிரதம மந்திரி றணில் விக்ரமசிங்ஹ -லங்காதீபவில்** -21.01.1994

சரிநிகர் மாதமிருமுறை இதழ் இல. 18/2 அலோ சாலை, கொழும்பு 03, இனங்களுக்கிடையே நீதிக்கும் சமத்துவத்துக்குமான இயக்கத்தின் சார்பில் வெளியிடுபவர் ச.பாலகிருஷ்ணன்
அச்சுப்பதிவு: 334, காலிவீதி இரத்மலானை நவமக அச்சகம்.

27/01/1994